பக்கங்கள்: 12+IV=பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 17 புதன்கிழமை (02-07-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:217

வடகடல் நிறுவன விவகாரம்:

## அமைச்சர் மகேஸ்வரன் மீது யாழ். பொலீஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜுலை2

வடகடல் நிறுவன அலுவலகத்தின் வாயிற்கதவுகளின் திறப்புக்களை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் சட்டவிரோதமாக அபகரித்துச் சென்றுள்ளார் என்று அந்நிறுவனத்தின் தலைவர் சுந்தரலிங்கம் யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை இரவு 9 மணியளவில் வடகடல் நிறுவனத்துக்கு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் சென்று அந்த நிறுவனத்தின் திறப்புகளை அபகரித்துச்சென்றுள்ளார் என்று அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் கீழ் இயங்கி வந்த வடகடல் நிறுவனத்தை இந்து கலாசார அமைச்சின் கீழ் ஒப்படைக்கும்படி பிரதமரின் செயலர் அறிவித்திருந்தார்.

(2ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் பயிற்சி முகாம் அமைந்த இடம் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியாகும்

### போர் நிறுத்த கண்காணிப்புக் குழு தீர்மானம்

கொழும்பு,ஜுலை2

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின்னரே விடுதலைப் புலிகள் கிண்ணியா, மணிராசகுளத்தில் பயிற்சி முகாம் அமைத்திருக்கின்றனர் எனவும், அதனால் அது போர் நிறுத்த ஒப்பந்த மீறல் எனவும் போர் நிறுத்த கண்காணிப்புக் குழு தீர்மானித்திருக்கிறது.

தமது கட்டுப்பாட்டிலிருக்கும் பிரதேசத்திலேயே இம்முகாம் அமைக்கப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகள் கூறுவது உண்மையல்ல எனவும் கண்காணிப்புக்குழு தெரிவிக்கின்றது.

இப்பயிற்சி முகாம் தமது பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருப்பதாக புலிகளும், அம்முகாம் அரசின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைக்கப்பட்டிருப்பதாக இராணுவமும் கூறியதை அடுத்து, போர் நிறுத்த கண்காணிப்புக் குழு அது தொடர்பாக விசாரணை நடத்தியது.

இம்முகாம் தொடர்பாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் விடுதலைப் புலிகளுடனும் இராணுவத்தினருடனும் கிண்ணியா பிரதேச மக்களுடனும் பேச்சு நடத்தினர்.

(ஐ)

பிந்துனுவெவ முகாம் படுகொலை வழக்கு:

# இரண்டு பொலீஸார் உட்பட ஐவருக்கு நீதிமன்றம் மரணதண்டனை விதிப்பு!

## சாட்சியம் இல்லாததால் 13 பேர் விடுதலை

கொழும்பு,ஜுலை2

**பிந்துனுவெவ தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 27 தமிழ் இளைஞர்களின் படுகொலைகள் தொடர்பான வழக்கில் ஐந்து எதிரிகளுக்கு நேற்று மரணதண்டனை விதிக்கப்பட்டது. இவர்களில் இருவர் பொலீஸார். ஏனைய மூவரும் கிராமவாசிகள். மரணதண்டனைக்கு மேலதிகமாக ஏனைய குற்றங்களுக்கு தலா ஏழு வருட கடூழியச் சிறைத்தண்டனையும் தலா ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. இவ்வழக்கின் ஏனைய 13 எதிரிகளும் போதிய சாட்சியங்கள் இல்லாததால் விடுதலைசெய்யப்பட்டனர்.**

நீதிபதி சரத் அம்பேபிட்டியவை தலைவராகக் கொண்ட மூன்று நீதிபதிகள் அடங்கிய (ட்ரயல் அட்பார்) நீதிமன்றம் இத்தீர்ப்பை வழங்கியது. எரிக் பஸநாயக்க, உபாலி அபயரத்ன ஆகியோர் ஏனைய இரு நீதிபதிகளுமாவர்.

94 பக்கங்களைக் கொண்ட தீர்ப்புக் குறிப்பை நீதிபதி சரத் அம்பேபிட்டிய வாசித்து முடிக்க இரண்டு மணித்தியாலங்களுக்கு கூடுதலான நேரம் சென்றது.

எதிரிகளான எம்.ஏ.செமி, சிறிபால திஸாநாயக்க, ஆர்.எம்.பிரேமானந்த ஆகிய கிராமவாசிகளுக்கும் பொலீஸ் இன்ஸ்பெக்டரான எஸ்.ஜே.கருணாசேன, உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் டி.ஆர்.ரத்னாயக்க ஆகிய ஐவருக்குமே மரணதண்டனை விதிக்கப்பட்டது.

ஐந்து எதிரிகளும் குற்றவாளிகள்

(2ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் அதிகாரிகள் இருவரும் தீர்ப்பைக் கேட்டு அழுது கதறினர்!

கொழும்பு,ஜுலை2

பிந்துனுவெவ படுகொலை வழக்கில் மரணதண்டனை தீர்ப்பு வழங்கப்பட்ட இரு பொலீஸ் அதிகாரிகளும் நீதிமன்றத்தில் அழுது கதறினர்.

உயர் அதிகாரிகளின் கட்டளைக்கு பணிந்து செயற்பட்டதாலேயே இக்கதி தமக்கு ஏற்பட்டதாக அவர்கள் அப்போது புலம்பி அழுதனர்.

"எங்களுக்கு பணிப்புரை வழங்கிய தற்பொழுது கோட்டை பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரியான ஜயந்த செனவிரத்ன, ஓய்வு பெற்றிருக்கும் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் தயாரத்ன போன்று நாங்களும் சம்பவம் நடைபெற்ற பொழுது ஓடியிருந்தால் இந்தத் துயரத்துக்கு முகம் கொடுத்திருக்கமாட்டோம்" எனவும் அவர்கள் கூறினர்.



பிந்துனுவெவ தடுப்பு முகாம் படுகொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட பொலீஸ் அதிகாரிகள் (நடுவில் உள்ள இருவரும்) நீதிமன்றத்திலிருந்து அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

### கரும்புலி தின ஊர்திப் பவனி

யாழ்ப்பாணம்,ஜுலை2

எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை கரும்புலிகள் தினத்தை யொட்டி இதுவரை வீரச்சாவடைந்த 240 கரும்புலிகளின் உருவப் படங்களைத் தாங்கிய ஊர்தி ஒன்று வன்னிப் பிரதேசத்தில் வலம் வர உள்ளது. இன்றுகாலை 9மணிக்கு புதுக்குடியிருப்பிலிருந்து இந்த ஊர்திப் பவனி ஆரம்பமாக உள்ளது.(ஒ-5)

தமிழ்க் குழுக்களின் பாதுகாப்புக்கெனக் கூறி

## நகரில் புதிதாகக் காவலரண்கள்; தடுக்க பொது அமைப்புக்கள் முஸ்தீபு

யாழ்ப்பாணம்,ஜுலை2

தமிழ்க் குழுக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாகக் கூறிக்கொண்டு நகரப் பகுதியில் படையினர் புதிதாக காவலரண்கள் அமைப்பதைத் தடுக்கக் கோரி யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் கையளிக்க பொது அமைப்புகள் தயாராகி வருவதாகக் கூறப்படுகிறது.

யாழ்நகரப்பகுதியில் தமிழ் அரசியல் கட்சிகளின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் நோக்குடன் அந்தக் கட்சிகளின் அலுவலகம் அமைந்துள்ள பகுதிகளில் புதிய காவலரண்களைப் படையினர் அமைத்து வருகின்றனர்.

யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள ஈ.பி.டி.பி. முகாமுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக பெருமாள் கோயில் வீதியில் மூன்று இடங்களிலும் யாழ். வீதிப்பகுதியிலும் நேற்றுமுன்தினம் இரவு முதல் மண்மூடைகளை அடுக்கி காவலரண்களைப் படையினர் அமைத்துள்ளனர். அந்தக் காவலரண்களில்

(2ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க அதிகாரிகள் குழு தரைப்பாதை வழியே வருகிறது

யாழ்ப்பாணம்,ஜுலை2

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் உயர் மட்ட அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தரைப்பாதை வழியாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

பதில் தூதராகப் பணிபுரியும் டொனால்காம் தலைமையில் வரும் இக்குழுவில் அரசியல் பிரிவு அதிகாரி கிறிஸ் லோங், பொதுமக்கள் தொடர்பு அதிகாரி பத்மினி ராஜதுரை, அரசியல் ஆய்வாளர் மாயா வெல்ஸ் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

கொழும்பில் இருந்து இக்குழுவினர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நேற்றிரவு பெருமெடுப்பில் தேடுதல்!

கொழும்பு,ஜுலை2

கொழும்பு, நகரப் பகுதியில் நேற்று முன்னிரவு 8 மணிமுதல் 11 மணி வரை பெருமெடுப்பில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

படையினரும் பொலீஸாரும் இணைந்து மேற்கொண்ட தேடுதலில் சுமார் எண்ணூறு தமிழர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

கண்ணாரத்தெரு, ஜிந்துப்பிட்டிவீதி, ஆட்டுப்பட்டித் தெரு, செக்கட்டித்தெரு, ஒல்கொட் மாவத்தை ஆகிய பகுதிகளில் இத்தேடுதல் நடத்தப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)



சகல சேமிப்புக் கணக்குகளுக்கும்
ரூபா. 300,000/- வரை
இலவச ஆயுட் காப்புறுதி

NSB

## அரசும், புலிகளும் கவனத்துடன் செயற்பட வேண்டும்

# அந்நிய சக்திகளின் வேட்டைக்காடாக தற்போது மாறிவருகிறது இலங்கை!

### புதிய ஜனநாயகக் கட்சிச் செயலாளர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஜுலை2

அந்நிய சக்திகளின் வேட்டைக் காடாக இலங்கை மாறிவருகின்றது. இதனை உணர்ந்து அரசும் விடுதலைப் புலிகள் அமைப்பும் மிகுந்த கவனத்துடன் செயற்படவேண்டும்.

- இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சியின் செயலாளர் சி.கா.செந்திவேல தெரிவித்துள்ளார்.

நேற்று பிற்பகல் யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள புதிய ஜனநாயகக் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

என்றுமில்லாதவாறு இன்று இலங்கையில் அந்நிய சக்திகளின் தலையீடுகள் அதிகரித்துள்ளன. இதில் இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டும் என்று உண்மையாக கரிசனை காட்டும் நாடுகளை நான் குறிப்பிடவில்லை

சமாதான முயற்சிகளின் பின்னணியில் செயற்படுவது போல் காட்டிக் கொண்டு எமது நாட்டில் சிலநாடுகள காலூன்றிக் கொண்டிருக்கின்றன.

பலஸ்தீனப் பிரச்சினையில் நடந்தது போல் அமெரிக்கா இங்கும் தனது காலை ஊன்றிவிட நாம் எவரும் அனுமதிக்கக்கூடாது.

இன்று ஒரு விடயத்தை நாம் நன்கு உணரவேண்டும். சமாதானத்தை வலியுறுத்தி பல்வேறு நாடுகளும் இலங்கையுடன் தொடர்புகொள்கின்றன. பலர் வருகின்றனர்; போகின்றனர்.

இதனால், அந்நிய சக்திகளின் செல்வாக்கு அதிகரித்து வருவதுடன அவற்றின் புலனாய்வு செயற்பாடுகளும் வலுப்பெறுகின்றன. இதனைப் புரிந்துகொண்டு அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் செயற்பட வேண்டும். இருதரப்பினரும் இலங்கையை அந்நியர்களின் வேட்டைக்காடாக மாற அனுமதிக்கக்கூடாது.

அரசு இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் வழங்கியே ஆகவேண்டும். இல்லையேல் அவர்களது தியாகங்களை புறக்கணித்ததாக ஆகிவிடும்.

விடுதலைப் புலிகள் டோக்கியோ மாநாட்டினை புறக்கணித்தமை சரியானதே. பேச்சின் போது அரசு கூறிய எதனையும் பின்னர் நடைமுறைப்படுததவில்லை. அடக்குமுறைகளுக்கு எதிராக குரல்கொடுக்கும் - சமவுடைமைக் கொள்கையை வலியுறுத்தும் - எமது கட்சி ஒருபோதும் ஐக்கிய தேசிய முன்னணியை ஆதரிக்காது. ஐக்கிய தேசியக் கட்சி செல்வந்தர்களின் கட்சி. அத்துடன் அடக்கு முறைகளுக்கெல்லாம் வித்திட்டதும் இக் கட்சியேயாகும்.

இன்றிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நல்லவராக நடித்து நம்மையெல்லாம் ஏமாற்றுகிறார். இதனை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும் என்றார் அவர். இச்செய்தியாளர் சந்திப்பின்போது பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பாக செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் சோ.தேவராசா பதிலளித்தார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது:-

பொங்கு தமிழ் நிகழ்வை வரவேற்கின்றோம். ஆனால், இப்போது மக்களை தீவிரவாதத்துக்கு தூண்டுவது வரவேற்கத்தக்கது அல்ல, அங்கு நடத்தப்பட்ட உயர்பாதுகாப்பு வலயத தகர்ப்பு நிகழ்வு மக்களை தூண்டி விடுவது போல் உள்ளது.

இந்நிகழ்விற்கு எமது கட்சிக்கு அழைப்பு தராத, பல்கலைக்கழக சமூகம் அனைவருக்கும் அழைப்பு விடுததாக தெரிவித்துள்ளது. இது எமது கட்சிமீது அவர்கள் தீண்டாமைக் கொள்கைளை கடைப்பிடிப்பது போல் உள்ளது - என்றார். (ஒ-12-ரி)

## கனடா தூதுவர் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு

வவுனியா,ஜுலை2

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் வலரி ரேமன் அம்மையார் நாளை கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசுவார்.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாகவும் டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கிடைத்த நிதியைப் பயன்படுத்துவது குறித்தும் இச் சந்திப்பில் கனேடிய தூதுவர் எடுத்துக் கூறுவார் என்று கிளிநொச்சி வட்டாரங்கள் தெரிவித்தன. நேற்று முன்தினம் வன்னிக்கு வந்திருந்த ஜப்பான் தூதுவரிடம் புலிகள் கூறிய விடயங்களையே கனேடிய தூதுவரிடமும் கூறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## கடந்த மாதம் வவுனியாவில் 6 பேர் காணாமற்போயினர்

வவுனியா,ஜுலை2

கடந்த மே மாதத்தில் மட்டும் 6 பேர் காணாமற் போனதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகப் பதிவுகள் தெரிவிக்கின்றன.

இவர்களில் இருவர் மட்டுமே மீளக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய நால்வரின் கதி பற்றி எதுவும் தெரியவரவில்லை எனவும் - ஆணைக்குழு அலுவலகம் தெரிவித்துள்ளது.

காணாமற்போன ஆறுபேரில் ஒருவரான வவுனியா, பத்தினியார் மகிழங்குளத்தைச் சேர்ந்த ஆறுமுகம் கோபாலசிங்கம் (வயது47) என்பவர் வவுனியா வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்ட வேளையிலேயே காணாமற் போயுள்ளார்.

இது தொடர்பாக கண்டி மற்றும் வவுனியா பொலீஸ் நிலையங்களிலும முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-10)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி வடகடல் நிறுவனத்தை கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்த நிலையில் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் அந்த முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலைய சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்துள்ளார். (ஒ-9)

## இரண்டு பொலீஸார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தீர்ப்புக் கூறி நீதிபதி சரத் அம்பேபிட்டிய கூறியதாவது:-

பொலீஸ் அதிகாரிகள் உரியவாறு தமது கடமைகளை நிறைவேற்றாததாலேயே இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது. பொலீஸ் அதிகாரிகள் பார்த்திருக்கையிலேயே முகாமுக்குள் இருந்தோர் தாக்கப்பட்டதும், பச்சையாக எரிக்கப்பட்டதும் நடந்திருக்கின்றன.

தாக்குதலில் ஈடுபட்டோருக்கு பொலீஸாரின் ஒத்துழைப்புக் கிடைத்திராவிடின் இவ்வாறான அழிவை மேற்கொள்ள முடியாதிருந்திருக்கும்.

இச்சம்பவத்தில் காயமடைந்த பொலீஸாரைத் தேடி ஓடி வந்த தடுப்பு முகாம் கைதிகள் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். தாக்குதலில் ஈடுபடாத பொலீஸார் அசிரத்தையாக இருந்ததன் மூலம் இச்சம்பவத்துக்கு பொறுப்புடையவர்களாவர் என்பது தெரியவந்திருக்கிறது.

- இவ்வாறு நீதிபதி அம்பேபிட்டிய தீர்ப்பில் கூறினார்.

குற்றவாளிகள் என்று தீர்ப்புக் கூறப்பட்டதும், கிராமவாசிகள் மூவரும் நீதிமன்றத்தில், தங்களின் பிள்ளைகளினதும் குடும்பத்தவர்களினதும் நிலையைக் கருத்திற்கொண்டு குறைந்தளவு தண்டனையை வழங்குமாறு மன்றாடினர்.

நீதிமன்றத்தில் மின்விளக்குகள் அணைக்கப்பட்டு, மின்விசிறிகள் நிறுத்தப்பட்டு அனைவரும் எழுந்து நின்றதும் நீதிபதி சரத் அம்பேபிட்டிய மரண தண்டனை தீர்ப்பை வழங்கினார்.

2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி பண்டாரவளை, பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் கைதிகளில் 27 பேர் படுகொலை செய்யப்பட்டு 14 பேர் படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டது தெரிந்ததே. மொத்தம் 41 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது. விசாரணையின் இடைநடுவில் 23 பேர் விடுதலை செய்யப்பட்டனர். (ஒ)

## நகரில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் கடமையாற்றினர். அத்துடன் ஈ.பி.டி.பி. முகாமுக்கு முன்பாக அமைந்துள்ள காவலரண்களிலும் படையினர் சேவையில் அமர்த்தப்பட்டிருந்த னர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி), புளொட் ஆகிய கட்சிகளின் அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதிகளிலும் படையினர் புதிய காவலரண்களை அமைத்துள்ளனர். இதனையடுத்தே கண்காணிப்புக் குழுவிடம் மேற்படி கோரிக்கையை முன்வைக்க பொது அமைப்புக்கள் தயாராகி வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ-3-8)

## இலங்கைக்கான அமெரிக்க தூதுவர்

கொழும்பு,ஜுலை2

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக ஜெப்ரி லுன்ஸ்ரெட் (JEFFERY LUNSTEDT) விரைவில பதவியேற்கவிருக்கின்றார்.

தூதராகப்பதவி வகித்த அல்லி வில்ஸ் இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து வெற்றிடமாகவுள்ள தூதர் பதவிக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் சரளமாக தமிழ் பேசி, வாசிக்கும் ஆற்றலுள்ளவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## பொலீஸ் பொறுப்பிலிருந்த சந்தேக நபருக்கு வழியில் கத்திக்குத்து; குடல் வெளியேறியது

### சம்மாந்துறை பொலீஸ் பிரிவில் சம்பவம்

காரைதீவு,ஜுலை2

பொலீஸ் பொறுப்பிலிருந்த சந்தேக நபர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டதால் குடல் வெளியேறிய நிலையில் வைததியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இச்சம்பவம் சம்மாந்துறை பொலீஸ் பிரிவிலுள்ள மல்வத்தைப் பகுதியில் இடம்பெற்றது. மல்வத்தையைச் சேர்ந்த எஸ்.விக்னேஸ்வரன் என்பவரே குடல் வெளியேறிய நிலையில் கல்முனை அஷ்ரப் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இவர் ஒரு வாரத்திற்கு முன்னர் மற்றொருவரை மண்வெட்டியால் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

தலைமறைவாகியிருந்த இவர் பின்னர் சட்டத்தரணி மூலம் சம்மாந்துறைப் பொலீஸில் சரணடைந்தார். அவரை மறுநாள் மன்றில் ஆஜராக்கவிருக்கையில், தாக்குதலுக்குப் பயன்பட்ட மணவெட்டியை எடுக்க ஆட்டோவில் இரு பொலீஸார், சந்தேக நபரான விக்னேஸ்வரனை அழைத்து செல்கையில் மலவத்தைப் பொலீஸ் நிலையமருகே ஒரு கும்பல் ஆட்டோவை வழிமறித்து விக்னேஸ்வரனை கத்தியால் குத்தியுள்ளது.

பொலீஸார் அவரை சம்மாந்துறை வைத்தியசாலையில் சேர்த்தனர். பின்னர் அவர் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். கல்முனை நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் சிறைச்சாலை காவலர்களின் பாதுகாப்பு அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இவரைத் தாக்கிய நபர் தலைமறைவாகிவிட்டார். (ஐ)

## இன்று உத்தியோக பூர்வமாக

# கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையம் மாகாண அமைச்சிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை2

யாழ்.மாவட்ட கிராமிய வங்கிகளின் சமாசத்தின் கீழ் இயங்கி வந்த அச்சுவேலி கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையம் இன்று புதன்கிழமை உத்தியோகபூர்வமாக மாகாண விவசாய கால்நடை அமைச்சிடம் ஒப்படைக்கப் படவுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்னா மாகாண விவசாய கால்நடை அமைச்சிடம் இருந்து இக்கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தை யாழ்.மாவட்ட கிராமிய வங்கிகளின் சமாசம் பொறுப்பேற்று நிர்வகித்து வந்தது.

ஏ-9 தரைவழிப்பாதை திறக்கப்பட்ட பின்னர் தென்னிலங்கையிலிருந்து கோழிக்குஞ்சுகள் அதிகளவில் வடக்குக்கு எடுத்துவரப்பட்டன. இதனால், இவ் உற்பத்தி நிலையத்தினால் உற்பத்திசெய்யப்பட்ட கோழிக்குஞ்சுகளை சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதனையடுத்து இந்நிலையம் நஷ்டத்தில் இயங்கும் சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் இந்நிலையத்தை மாகாண விவசாயக் கால்நடை அமைச்சிடம் திருப்பி ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்மாவட்ட கிராமிய வங்கிகளின் சமாசத்திடம் இருந்து இவ் உற்பத்தி நிலையத்தைப் பொறுப்பேற்கவுள்ள அமைச்சு அதனை யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திடம் ஒப்படைக்கவுள்ளது. (ஒ-8)

## இத்தாலிக்கு களவாகச் செல்லவிருந்த 180 பேர் தங்காலைக் கடலில் கைது!

கொழும்பு,ஜுலை2

இத்தாலிக்குச் சட்டவிரோதமாக ஒரு கப்பலிலும் ஒரு ட்ரோலரிலும் செல்லவிருந்த 180 பேர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர். தங்காலை குடாவெல்லக் கடலில் வைத்து கடற்படையினர் இவர்களைக் கைது செய்தனர்.

கடலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படைக் கப்பல்கள், சந்தேகத்துக்குரிய இவ்விரு கப்பல்களையும் சோதனையிட்டபோது அவற்றிலிருந்தோர் சட்டவிரோதமாக இத்தாலிக்குச் செல்லவிருப்பது தெரியவந்தது என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

குடாவெல்ல கரையிலிருந்து எட்டு கடல்மைல் தூரத்தில் அவை கண்டுபிடிக்கப்பட்டன. கப்பலில் 150 இலங்கையர்கள் இருந்தனர். மீன்பிடி ட்ரோலரில் 30 பாகிஸ்தானியர்கள் இருந்துள்ளனர். கப்பல் மொங்கோலியாவில் பதிவு செய்யப்பட்டதாகும். (ஒ)

## ஆயர் தின திருப்பலி

யாழ்ப்பாணம,ஜுலை2

யாழ்.ஆயர் அதிவணதோமஸ் சௌந் தரநாயகம் பணிப்பொறுப்பேற்ற ஆயர் தினமான நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு விசேட திருப்பலி பூசை யாழ்.பேராலயத்தில் இடம்பெறவுள்ளது.

ஆயரும் குருமாரும் இணைந்து மேற்கொள்ளும் இந்தத்திருப்பலிப் பூசையில் நகரில் உள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் கத்தோலிக்க மாணவர்கள் பங்கேற்பர். (ஒ-3)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜுலை2

நவாலி ஸ்ரீ நாகராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய மஹாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை முற்பகல 11.15மணிமுதல் 11.56மணிவரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது. (ஒ-10-6)

★ ★ ★

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கருமாரியம்மன் ஆலய மஹாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 9.30மணிமுதல் 10.30 மணிவரை நடைபெறவுள்ளது. (ஒ-10-6)

★ ★ ★

பருத்தித்துறை புனித தோமையார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 24 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இன்று புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும் நாளை வியாழக்கிழமை காலை 6.45 மணிக்கு திருநாள் திருப்பலியும், திருச்சொருப பவனியும் இடம்பெறுவதுடன் உற்சவம் நிறைவுறும். (ஒ-10-173)

★ ★ ★

துன்னாலை வடக்கு, அல்லையம பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலய மஹாகும்பாபிஷேகம் இன்று முற்பகல 11.18 மணி தொடக்கம் பிற்பகல் 12.47 மணிவரையான சுபவேளையில் இடம்பெறும். (10-173)

★ ★ ★

நல்லூர் சிவஞானப்பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிமுதல் 11.30 மணிவரையான சுபவேளையில கும்பாபிஷேகம் நடைபெறும்.(எ-ரி)

★ ★ ★

வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் கோவில் மஹாகும்பாபிஷேகம் இன்று புதன் கிழமை காலை 9.15மணிமுதல் நடைபெறும். (எ-ரி)

★ ★ ★

மடு அன்னையின் பெருவிழாவை முன்னிட்டு யாழ்.புனித மடுத்தீனார் குருமடத்தில் இன்று புதன்கிழமை மாலை 5.30மணிக்கு திருச்செபமாலையுடன் திருப்பலி இடம்பெறும். (எ-ரி)

★ ★ ★

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் மடுத் திருவிழா நினைவுச் சிறப்புத் திருப்பலியும் அன்னை ஆசீரும் இடம்பெறவுள்ளன.

இன்று புதன்கிழமை காலை 7 மணிக்கு இந்நிகழ்வுகள் இடம்பெறும். (எ-30-ரி)

★ ★ ★

கொக்குவில் கிழக்கு ஸ்ரீசாயி துர்க்கா ஆலய மணவாளக்கோல உற்சவம் இன்று புதன்கிழமை காலை 8மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ஒ-10)

★ ★ ★

இணுவில், தொட்டம்பழை ஞான வைரவர் ஆலய மஹாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 6.27 மணி தொடக்கம் 7.25 மணி வரையான சுபவேளையில் இடம்பெறவுள்ளது. (ஒ-10)

★ ★ ★

சாவகச்சேரி, விளைவேலி ஸ்ரீ துர்க்காதேவி ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாள்கள் தொடர்ந்து நடைபெறும். (ஒ-10-31)

★ ★ ★

வரணி, சாவலப்பிட்டி கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகின்றது. தேர் உற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதியும் தீர்த்த உற்சவம் மறுநாள் 14 ஆம் திகதியும் இடம்பெறும். (ஒ-10-170)

★ ★ ★

நீர்வேலி செல்லக்கதிர்காம சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறவுள்ளது.(ஒ-10-100)

# சூகியை விடுவிக்க ஜப்பான் நிர்ப்பந்தம்

டோக்கியோ,ஜுலை2

மியான்மர் எதிர்க்கட்சித் தலைவியும் ஜனநாயகவாதியுமான ஆங்ஷான் சூகியை வீட்டுக்காவலில் இருந்து விடுவிக்க ஜப்பான் நிர்ப்பந்தம் செய்யும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மே மாதம் 30ஆம் திகதி கைது செய்யப்பட்ட ஆங்ஷான் சூகியை விடுவிக்குமாறு மியான்மர் இராணுவ ஆட்சியினருக்கு ஜப்பான் காலகெடு விதித்திருந்தது என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

இதுகுறித்து ஜப்பான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஒகுயாமா கூறுகையில், சூகியை விடுவிக்குமாறு ஜப்பான் எதுவிதக் காலக்கெடுவையும் விதிக்கவில்லை. அங்கு நடைபெறுவதை உன்னிப்பாகக் கவனித்து வருகின்றோம்.

அத்துடன், சூகியை விடுவிக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பது பற்றியும் ஆலோசித்து வருகிறோம். மியான்மர் இராணுவ அரசை எவ்வாறு நிர்ப்பந்தம் செய்யவேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும். எனவே எப்போது இறுக்கிப் பிடிக்க வேண்டும். எப்போது தளர்த்திடவேண்டும் என்பதை முடிவு செய்வோம் - என்றார்.

கடந்த இரு வாரங்களுக்கு மேலாக ஆங்ஷான் சூகி மியான்மர் அரசினால் 'பாதுகாப்பான காவல்' என்று அவர்கள்கூறும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். (ம)

# இத்தாலிக் கரை நோக்கிவரும் படகுகள் சுட்டுத் தள்ளப்படும்!

ரோம்,ஜுலை2

இத்தாலிக்குள் சட்டவிரோதமாக கடல்வழியாகப் பிரவேசிக்க முயற்சிக்கும் படகுகள் இனிமேல் சுட்டுத்தள்ளுவதற்கு அந்நாட்டு அரசு தீர்மானித்திருப்பதாக லண்டன் 'டெய்லி ரெலிகிராப்' பத்திரிகை தெரிவித்திருக்கின்றது.

இத்தாலிக்குள் கடல்மார்க்கமாகப் பிரவேசிக்கும் சட்டவிரோத குடியேற்றவாசிகளின் படகுகள் மீது இத்தாலியக் கடற்படையினர் இனிமேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்வர் என்று அந்நாட்டு புனர்வாழ்வு அமைச்சர் தெரிவித்திருப்பதாக 'டெய்லி ரெலிகிராப்' கூறுகின்றது.


கடந்த இருவார காலத்துக்குள் மட்டும் சுமார் 3ஆயிரம் பேர் சட்டவிரோதமாக இத்தாலிக்குள் நுழைந்திருக்கின்றனர் என்று அமைச்சர் கூறியுள்ளார்.

சட்டவிரோதக் குடியேற்றவாசிகளில் பெரும்பாலானோர் பெண்களும், குழந்தைகளுமாக இருப்பதால் அவர்களைச் சுட்டுத்தள்ளுவது மிருகத்தனமான செயலாகக் கருதப்படமாட்டாதா என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

"சட்டவிரோதக் குடியேறிகளால் இத்தாலிய அரசு பெரும் நெருக்கடிகளைச் சந்தித்திருக்கிறது. எனவே இப்படி ஒரு கடுமையான நடவடிக்கையை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை" - என்று இத்தாலி அமைச்சர் தெரிவித்திருக்கின்றார்.

ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைவதற்காக சட்டவிரோதக் குடியேறிகள் இத்தாலியை பிரதான மார்க்கமாகப் பயன்படுத்தி வருகின்றனர். இலங்கையின் நீர்கொழும்புக் கரையோரத்தில் இருந்தும் இவ்வாறு சட்டவிரோதக் குடியேறிகளை ஏற்றிக்கொண்டு கப்பல்கள் இத்தாலிக்குச் செல்வதும் குறிப்பிடத்தக்கது. (ம)

# பள்ளிவாசலில் குண்டு வெடித்து எட்டு ஈராக்கியர்கள் உயிரிழப்பு!



இந்த மசூதியில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 8பேர் பலியாகினர். மேலும் பலர் காயமடைந்தனர்.

பக்தாத்,ஜுலை2

ஈராக்கில் பலூஜா நகரில் உள்ள பள்ளிவாசல் ஒன்றில் நேற்றுக்காலை குண்டுவெடித்ததில் அங்கு தொழுகையில் ஈடுபட்டிருந்த எட்டு ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர். மேலும் 7பேர் காயமடைந்தனர்.

பள்ளிவாசலில் அமெரிக்கப் படையினரே குண்டுத் தாக்குதலை நடத்தினர் என்று ஈராக்கியர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால், அந்தக் கட்டடத்தினுள் கிடந்த குண்டே வெடித்தது என்று அமெரிக்கப் படையினர் கூறுகின்றனர்.

இது இவ்வாறிருக்க, பக்தாத்தின் மத்திய பகுதியிலும் தெற்குப் பகுதியிலும் அமெரிக்கப் படையினரின் வாகனங்களைக் குறிவைத்து எறிகணைத் தாக்குதல்களும், கிரனேட் வீச்சுக்களும் நடைபெற்றுள்ளன.

இந்தத் தாக்குதல்களில் ஏற்பட்ட இழப்புக்கள் பற்றிய விபரங்களை அமெரிக்கப் படையினர் உடனடியாக வெளியிடவில்லை. தாக்குதல் நடந்த இடத்தில் படையினரின் இரண்டு வாகனங்கள் எரிந்த நிலையில் இருந்தன. சுயாதீனத் தகவல்களின்படி இதிலிருந்து நான்கு பேர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையே - பதவி கவிழ்க்கப்பட்ட சதாம் ஹுசைனின் ஆதரவாளர்கள் ஒரு பயங்கரவாத வலையமைப்பாகத் தொழிற்படுகின்றனர் என்று அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்துள்ளார். ஆனால், வியட்நாம் போன்ற ஒரு புதைகுழிக்குள் அமெரிக்கப் படையினர் சிக்கவில்லை என்று கூறினார். (ம)




பென்ரகனில் ரம்ஸ்பீல்ட் நேற்று உரைநிகழ்த்தினார்.

## இஸ்ரேல்-பலஸ்தீன பிரதமர்கள் சந்திப்பின் இடையில்

# யுத்தநிறுத்த பிரகடனத்தின் பின்பும் மேற்குக்கரையில் சில வன்முறைகள்

ஜெருசலேம்,ஜுலை2

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் யுத்த நிறுத்தப் பிரகடனம் செய்யப்பட்டதை அடுத்து இரு வெவ்வேறு சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன.

மேற்குக் கரையில் பலஸ்தீனர்கள் நடத்திய தாக்குதலில் பல்கேரிய நாட்டுத் தொழிலாளி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இஸ்ரேலிய பகுதியில் உள்ள சோதனை நிலையத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் பலஸ்தீனர் ஒருவர் கொலலப்பட்டுள்ளார்.

இச்சம்பவங்கள் நேற்று நடந்தன. இது குறித்துக் கருத்து வெளியிடாத இஸ்ரேல்-பலஸ்தீனப் பிரதமர்கள் நேற்றுச் சந்திப்பு ஒன்றை நடத்தினர். அவர்களது சந்திப்புக்கு முன்னதாகவே இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றன.

பலஸ்தீன தீவிரவாத அமைப்புக்களால் போர்நிறுத்தப் பிரகடனம் செய்யப்பட்ட அதேதினத்தில், மேற்குக்கரை நகரமான யாவெட்டில் பல்கேரியரான கட்டடத் தொழிலாளி ஒருவர் பலஸ்தீனரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அல்-அக்ஷா மாவீரர் படையணியில் இருந்து விலகிய உறுப்பினர்கள் இத்தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளனர்.



தீப்பிழம்பு வளையங்களுக்குள்ளால பாய்ந்து பயிற்சி பெறுவதில் பலஸ்தீன பொலீஸார் தீவிரம்.

இச்சம்பவத்தின் பின்னர் மேற்குக் கரை நகரான கவெல்கிலியாவில் பாதுகாப்புவேலி அமைப்பதில் ஈடுபட்டிருந்த இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இஸ்ரேலியப் படையினரும் பதிலுக்குச் சுட்டனர். இதில் ஒரு பலஸ்தீனர் உயிரிழந்தனர். (ம)

# 12 தொன் மருந்துப் பொருள்கள் லைபீரியாவுக்கு அனுப்பப்பட்டன

மொன்ரோவியா,ஜுலை2

லைபீரியாவில் கிளர்ச்சியாளர்களுக்கும் - அரச படையினருக்கும் இடையில் நடந்த சண்டை சற்று ஓய்ந்துள்ளதை அடுத்து அங்கு சிகிச்சைக்காக அல்லற்படுவோரைக் கருத்தில் கொண்டு 12 தொன் எடையுள்ள மருந்துப் பொருள்களைச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு விமானம் மூலம் எடுத்துச் சென்றுள்ளது.

கடந்த ஒரு வாரமாக அங்கு நடைபெற்ற சண்டையில் 800இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அங்குள்ள மிகப்பெரிய வைத்தியசாலையில் 400இற்கும் மேற்பட்டவர்கள் உடனடி வைத்திய உதவியை எதிர்நோக்கியபடி ஆபத்தான கட்டத்தில் இருக்கின்றனர். ஆனால், அங்கு மருத்துவர்கள் பற்றாக்குறையும் மருந்துகளின் பற்றாக்குறையும் நிலவுகின்றது.

இதனால், நோயாளிகளின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருகின்றது.

மோதல் காரணமாக இடம்பெயர்ந்து பாடசாலைகள், விளையாட்டரங்குகள் மற்றும் பொதுக் கட்டடங்களில் தங்கியுள்ள சுமார் இரண்டு லட்சத்துக்கும் அதிகமானோருக்கு தொற்று நோய்கள் பரவி வருகின்றன.

இதனை அடுத்தே செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அவசர மருந்துப் பொருள்களை அனுப்பி வைத்துள்ளது. (ம)



லைபீரியத் தலைநகர் மொன்ரோவியாவில் அரச படையினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான மோதல் தணிந்துள்ளது. ஆனால், அரச ஆதரவு இளைஞர்கள் வீதிகளில் ஆயுதங்கள் சகிதம் ரோந்து சுற்றி வருகின்றனர்.

## தேசிய பாதுகாப்புச் சட்டத்தை எதிர்த்து

# லட்சக்கணக்கானோர் திரண்டு ஹொங்கொங்கில் ஆர்ப்பாட்டம்

ஹொங்கொங்,ஜுலை2

ஹொங்கொங்கில் எதிர்வரும் 7 ஆம் திகதி நிறைவேற்றப்படவுள்ள சர்ச்சைக்குரிய தேசிய பாதுகாப்புச் சட்டத்திற்கு எதிராக லட்சக்கணக்கானோர் வீதிகளில் திரண்டு நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.


பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த ஹொங்கொங் 6 ஆண்டுகளுக்கு முன்பு சீனாவின் கைகளுக்கு மாற்றப்பட்ட பின்பு, அங்கு நடைபெறும் மிகப்பெரிய ஆர்ப்பாட்டம் இதுவாகும்.

நேற்றுக்காலை ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையே சிறு மோதல்கள் இடம்பெற்றன. சுமார் ஆயிரம் பொலீஸாரும் 800 வரையான படையினரும் வீதிகளில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

புதிய சட்டமூலத்தின்படி ராஜதுரோகம், அரச இரகசியங்களை களவாடிப் பிறருக்கு வெளியிடல்போன்ற குற்றங்களுக்கு ஆயுள் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

ஹொங்கொங்கின் பாதுகாப்பைப் பேணுவதற்கு இவ்வகையான சட்டங்கள் அவசியமானவை என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், ஆர்ப்பாட்டக்காரர்கள் இச்சட்டமூலம் அடிப்படை உரிமைகளையும், தகவல்களையும் பெற்றுஅடையும் சுதந்திரத்தையும் இல்லாதொழிக்கிறது என்று தெரிவிக்கின்றனர்.



ஹொங்கொங்கில் நேற்று வீதிகளில் இறங்கி ஆயிரக்கணக்கானவர்கள் சீன அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். தமது ஆத்திரத்தை வெளிப்படுத்தும் வகையில் அவர்கள் சீனத் தேசியக் கொடிகளையும் தீயிட்டு எரித்தனர்.

ஹொங்கொங்கின் சுயாட்சியுரிமையை இந்தச் சட்டம் பாதிக்கும் என்று ஐரோப்பிய ஒன்றியம் விமர்சித்துள்ளது. மக்களின் சுதந்திரத்தில் தலையிடும் செயல் இது என்று வெள்ளைமாளிகை கருத்து வெளியிட்டுள்ளது.

இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படுமாயின், சீனாவில் தடைசெய்யப்பட்ட இயக்கங்கள், ஹொங்கொங்கிலும் தடைசெய்யப்பட வழியேற்படும். பொலீஸார் நீதிமன்ற உத்தரவில்லாமலேயே வீடுகளில் தேடுதல் நடத்தலாம். செய்தி ஊடகங்கள் சுதந்திரமாகச் செய்திகளைப் பெறவும் வெளியிடவும் முடியாமல் போகும். சீனாபோன்றே இங்கும் கட்டுப்பாடுகள் அதிகமாகும். (ம)

# SHARP ஜப்பானியத் தொழில்நுட்பம் இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

be sharp



உத்தரவாதத்துடன் கூடிய பணத்திற்கேற்ற பெறுமதி.
யாழ் நகரிலேயே அனைத்துச் சாதனங்களுக்குமான உதிரிப்பாகங்களை (Spare Parts) பெற்றுக்கொள்ளலாம்.
நிபுணத்துவம் மிக்கவர்களால் விற்பனைக்குப் பிந்திய சேவைகளை யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

Browns Electronics Live it up

BG Browns Group of Companies

இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225150


## சன்றைஸ் மெடிகிளினிக் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை2

'சன்றைஸ்' மெடிகிளினிக் நிறுவனம் நேற்றுமுன்தினம் யாழ். பஸ்நிலையம் முன்பாக உள்ள கட்டடத்தில் வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.

இத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.ரவிராஜ் புதிய கிளினிக்கை திறந்துவைத்தார்.

யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியை செல்வி வசந்தி அரசரட்ணம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இலங்கை அணுசக்தி அதிகாரசபையால் பாதுகாப்பான முறையில் எக்ஸ்-ரே படம் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ள இந்நிறுவனத்தில், சர்வதேச தரம்வாய்ந்த - அதிநவீன கணனி முறையிலான - இரத்தப் பரிசோதனை உபகரணம் அடங்கிய மருத்துவ ஆய்வுகூட வசதி உண்டெனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், 'ஈசிஜி', 'அல்ரா சவுண்ட் ஸ்கானிங்' வசதிகளும் இங்கு உள்ளன. இக்கிளினிக் திறப்பு விழாவில் டாக்டர்கள், அரச அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-8)


உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் ஆனி மாதம் 21ஆம் நாள் (06.07.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.57 மணிமுதல் 10.27மணிவரையுள்ள உத்தர நட்சத்திரமும் சிங்க லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த நல்வேளையில்,

எமது புத்திரன் திருநிறை செல்வன்
**சற்குணபாலன்**
அவர்களுக்கும்




எமது புத்திரி திருநிறை செல்வி
**ஜெயந்தி**
அவர்களுக்கும்

இறையருள் துணைகொண்டு தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பசமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து வாழ்த்தும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

☆ மணமகள் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் அன்புடன் பங்கேற்றுச் சிறப்பிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி இராமகிருஷ்ணன்,
தெணியம்மை தெரு,
வல்வெட்டித்துறை.

திரு. திருமதி ஞானதிலகம்,
திருமால்பட்டி, காங்கேசன்துறை வீதி,
வல்வெட்டித்துறை.

(19192) (இருவீட்டார் அழைப்பு) (24-19-15)


## பெண்களை வன்முறைக்குட்படுத்தாத சமுதாயம் வேண்டும்



மக்களே!

★ பெண்களை பெண்களாக மதிக்காவிட்டாலும் மனிதர்களாக ஆவது மதிப்போம்.

★ தொழிலாளர் சட்டப்படி எட்டு மணித்தியால வேலைதான், பெண்களுக்கு மட்டுமேன் 24 மணித்தியாலம்?

★ பெண்களும் சமுதாயத்தின் அங்கம்தான் என்பதை உணர்வோம்.

பெண்களின் பாதுகாப்புத் தொடர்பான மேலதிக தகவல்களுக்கும் உதவிக்கும்:

உப அலுவலகம்:-
கச்சாய் றோட்,
சாவகச்சேரி.

தலைமை அலுவலகம்:-
#159, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(சி-28540) (24-19-15)


## கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை

வெற்றிடங்கள்

பாதுகாவலர்கள் - 30இற்கு மேற்பட்ட வெற்றிடங்கள்

**WALK IN INTERVIEW**

தகைமைகள் :- G.C.E. (சா/த) சித்தி
22 வயது தொடக்கம் 55 வயதுவரை
(பொலீஸ்/படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை)
மார்பு :- 32" குறையாமல்
உயரம்:- 5'4" குறையாமல்
(நல்ல தேகாரோக்கியமும் கண்பார்வையும் இருத்தல் வேண்டும்)
நேர்முகப்பரீட்சை:- கிழமை நாளகள்: பி.ப. 5.00 மணி தொடக்கம் 6.30 மணி வரை
சனிக்கிழமை :- காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை.
ஆவணங்கள்:- 1) கிராம அதிகாரியின் நற்சான்றிதழ் (6மாதங்கள் உட்பட்டது)
2) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
3) தேசிய அடையாள அட்டை 4)விசேட அடையாள அட்டை

43,கல்லூரி வீதி
(யாழ்.இந்துமைதானம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

பணிப்பாளர்.

(C/28674) (29-24-19-15)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

02.07.2003

HAPPY BIRTHDAY



# செல்வி லைசதன்யா

சங்கானை நிற்சாமம் சிறிதரன் - சத்தியமதி தம்பதிகளின் செல்வப் புதல்வி

**சைதன்யா**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (02.07.2003) புதன்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, லண்டன் மாமா சத்தியேந்திரா, சுவிஸில் இருக்கும் பெரியம்மா சத்தியறஜனி, பெரியப்பா யுகதீசன், சித்தப்பாமார் கரன், ஜெகன், அத்தை தேவகி, மாமா முரளீதரன் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்லாண்டுகாலம் சுகமாக வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
சங்கானை மேற்கு, நிற்சாமம். (19464) (24-19-15) லண்டன் மாமா இ.சத்தியேந்திரா.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### கேள்விப்பத்திரம்

**விடைப்புத்தகங்கள் அச்சிடல்**

விடைப்புத்தகங்கள் அச்சிடுவதற்கு அனுபவமுள்ள அச்சகங்களிலிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| புத்தகங்களின் எண்ணிக்கை: | 40,000 புத்தகங்கள் |
| புத்தகங்களின் பக்கங்கள்: | 12 பக்கங்கள் |
| புத்தகங்களின் அளவு: | 27 செ.மீ. 21 செ.மீ. |
| காகிதாதி வகை: | வெள்ளை கென்யோ பாங் 70 கிராம் (இறக்குமதி செய்தது) |

01. கேள்விகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவி நிதியாளர்/வழங்கல் பகுதியில் தொடர்புகொண்டு மாதிரியைப் பார்வையிடலாம்.

02. கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிப்போர் மீளளிக்கப்படமுடியாத வைப்புப்பணமாக ரூபா 250.00ஐ பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் கேள்விப்பத்திரங்களை 01.07.2003 அன்று காலை 10.00மணிக்கு முன்னர் 'நிதியாளர்' அறையில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் தபால் மூலமாகவோ அன்றேல் நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப்பத்திரத்தின் இடதுபுற மேல் மூலையில் 'விடைப்புத்தகங்கள் அச்சிடல்' என்று குறிப்பிட்டிருத்தல்வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விப்பத்திரதாரர் அல்லது அவரது பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(C/28676) (29-24-19-15)

# புலிகளின் பதிலடி!

ஜப்பான் தூதுவர் சிசிரோ ஒட்சுகா நேற்று முன்தினம் கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசினார்.

நாளை கனடாத் தூதுவர், தமிழ்ச்செல்வனைச் சந்திக்கச் செல்கிறார் என்று செய்திகள் கூறுகின்றன.

சமாதானப் பேச்சுக்களுக்கு அனுசரணை வழங்கும் நோர்வே நாட்டின் முன்னாள் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் கடந்த திங்கட்கிழமை கொழும்புக்கு வந்திருக்கிறார்.

அவரும் கிளிநொச்சி சென்று தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச இருக்கிறார்.

கிளிநொச்சி சென்று தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசும் வெளிநாட்டவர்களின் பட்டியல் மிக நீளமானது. பலர் ஏற்கனவே பேச்சு நடத்திவிட்டார்கள். இன்னும் பலர் போய்ப் பேச இருக்கிறார்கள்.

வெளிநாடுகளின் தூதுவர்கள், அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள் முதலான எல்லோரும் கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்து என்ன பேசுகிறார்கள்?

தமிழ் மக்களின் இன்றைய நிலைமை, அரசியல் நிலைவரம் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு - இவை பற்றி தமிழ்ச்செல்வனிடமிருந்து நேரில் அறிந்துகொள்ள விளைகிறார்கள்.

வெளிநாட்டவர்கள் எல்லோரும் தமிழ்ச்செல்வனைச் சந்தித்ததும் மாமூலாக ஒன்றைக் கூறுகிறார்கள். அரசுடன் சமாதானப் பேச்சுக்களுக்கு மீண்டும் செல்லுங்கள்; விரைவில் செல்லுங்கள் என்று கூறுவதோடு நின்றுவிடாமல் வேண்டுகோளும் விடுக்கின்றார்கள்; வற்புறுத்தவும் செய்கிறார்கள்; அழுத்தம் வேறு கொடுக்கவும் முனைந்துவிடுகிறார்கள்.

டோக்கியோ மாநாட்டின் தீர்மானப்படி அந்த மாநாட்டின் பெறுபேறுகளை விடுதலைப் புலிகளுக்கு நேரில் அறிவிப்பதற்காகக் கிளிநொச்சி சென்று தமிழ்ச்செல்வனைச் சந்தித்த ஜப்பான் தூதுவரும், புலிகள் மீண்டும் விரைவிலே பேச்சுக்களில் கலந்துகொள்ளவேண்டும் என்று வற்புறுத்தினார்.

ஜப்பான் தூதுவரைச் சந்தித்துப் பேசிய பின்னர் தமிழ்ச்செல்வன் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் இந்த சர்வதேச அழுத்தம் பற்றிக் குறிப்பிட்டார்.

சர்வதேச சமூகத்தின் அழுத்தம் புலிகளுக்குத் தேவையில்லை.

தமிழ்மக்களின் நலனுக்காகவே விடுதலைப் புலிகளாகிய நாம் செயற்பட்டு வருகிறோம்; அவர்களின் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டுகிறோம்; அவர்களின் அபிலாஷைகள், தேவைகள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை நாம் முன்வைக்கிறோம்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவும் தேவைகளைப் பூர்த்திசெய்யவும் எதிர்பார்ப்புகளை வழங்கவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய பொறுப்பு அரசைச் சார்ந்தது. அதனால், சர்வதேச சமூகம் அரசுக்குத்தான் அழுத்தம் கொடுத்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். அப்படி நடந்தால் பேச்சுக்களை மீண்டும் தொடர்வதில் பிரச்சினை இல்லை என்றார் தமிழ்ச்செல்வன்.

அரசு யுத்த நிறுத்தம் செய்வதற்கு முன்னரே ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் செய்தவர்கள் புலிகள். இனிமேல் யுத்தத்திற்குப் போகாமல் பேச்சு மூலமே பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண வேண்டுமென்பதில் உறுதியாக இருக்கிறார்கள்.

அரசுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொண்டு ஆறு சுற்றுப் பேச்சுக்களிலும் பங்குபற்றியிருக்கிறார்கள்.

புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து சுமார் ஒன்றரை வருடகாலம் கடந்தும் தமிழ் மக்களின் அவலங்கள் தீரவில்லை; இயல்பு நிலை ஏற்படவில்லை; அகதி வாழ்வு நீங்கவில்லை; படையினர் ஆக்கிரமித்துள்ள தமது வீடுகளுக்குச் சென்று குடியிருக்கமுடியவில்லை.

ஆறு சுற்றுப் பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள்கூட நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த நிலையில் மீண்டும் பேசி என்ன பயன் என்றுதான் புலிகள் பேச்சுக்களை இடைநிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

இவையெல்லாம் சர்வதேச சமூகத்துக்குத் தெரியாதவை அல்ல. தெரிந்தும் அரசைச் செயலில் இறங்கத் தூண்டாமல் புலிகள் பேச்சு மேசைக்குத் திரும்ப வேண்டும் என்று சர்வதேச சமூகம் பல்லவி பாடிக்கொண்டிருப்பது பாஷனாகிவிட்டது.

சர்வதேச சமூகத்தின் இந்தப் பல்லவியால் புலிகள் சமாதானத்தை விரும்பவில்லை. அதனால்தான் அவர்கள் பேச்சைத் தவிர்த்துக்கொள்கிறார்கள் என்ற தவறான எண்ணம் உருவாக்கப்படுகிறது. இது விஷமத்தனம் இல்லையா? இதற்குத் தமிழ்ச்செல்வன் இப்போது சரியான பதிலடி கொடுத்திருக்கிறார்.

# தேன் எடுக்கச் சென்ற நால்வரைக் காணோம்

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜூலை2

வவுனியா, தரணிக்குளத்தில் இருந்து தேன் எடுப்பதற்காகக் காட்டுக்குச் சென்ற நான்கு இளைஞர்கள் காணாமற் போயுள்ளனர்.

நேற்றுமுன்தினம் சென்ற இவர்கள் படையினரின் முன்னணிக் காவலரண்களைக் கடந்து சென்றிருக்கக் கூடும் எனவும் இவர்கள் தொடர்பாக எவ்வித தகவலும் கிடைக்கவில்லை எனவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்தில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தனபாலசிங்கம் சரவணபவனேஸ்வரன் (வயது 21), சதானந்தம் செந்தூர்ச்செல்வன் (வயது 23) ஆகிய இருவரின் பெற்றோர்களே இந்த முறைப்பாட்டைத் தெரிவித்துள்ளனர். ஏனைய இரு இளைஞர்களின் பெயர், விவரங்கள் எதுவும் ஆணைக்குழு அலுவலகத்துக்குக் கிடைக்கவில்லை.

இது விடயம் தொடர்பாக ஆணைக் குழு அதிகாரியினால் படையினர், பொலீஸார் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய தரப்பினருக்கும் முறையிடப்பட்டுள்ளது.

(ம-10)

## நாட்டு நடப்பு

பழமும் பாலும் பன்னீரும்
பணமும் ஒன்றாய் தட்டிலேந்தி
கிழவி நீயும் ஓடுவது
கிருஷ்ண பகவானை காண்பதற்கோ?
அள வில்லாத கொடை வள்ளல்
அவனுக்கு ஆச்சி! இவை எதற்கு?
வளமில்லாமல் ஓர் ஓரம்
வாய்விட்டலறி கிடைக்கின்ற
களங்க மில்லா ஏழைகளை
கண்ணாக கண்டு கொண்டு
உள்ளம் மிகவும் நீ உருகி
உண்ண ஏதும் கொடுத்திட்டால்
வள்ளல் அந்த மாயவனும்
வந்துன் அருகில் நிற்பானே!
கிள்ளிக்கொடுத்த குசேலருக்கு
அள்ளிக் கொடுத்ததை அறிவாயோ?

- விகடகவி.

# உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக இராணுவத் தளபதியிடம் விசாரணை

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் வெள்ளியன்று நடந்தது

கொழும்பு,ஜூலை2

யாழ்.குடாநாட்டில் பொதுமக்களின் வாழ்விடங்களில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்கள் நிறுவப்பட்டுள்ளமை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பலகல்லவை தமது அலுவலகத்துக்கு அழைத்து விசாரணை செய்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பு அலுவலகத்தில் இந்த விசாரணைகள் இடம்பெற்றுள்ளன. இந்த விசாரணைகளில் ஆணைக்குழுவின் தலைவர், ஆணையாளர்கள் உட்பட பல உயர் அதிகாரிகளும் இராணுவத்தளபதியும் பொலீஸ் மற்றும் கடற்படை ஆகியவற்றின் உயர்அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இவ்விசாரணையின்போது பொதுமக்களின் வாழ்விடங்களில் இராணுவத்தினர் உயர் பாதுகாப்பு வலயங்களை வைத்திருக்க முடியாதென மனித உரிமை ஆணைக்குழுவின் உயர் அதிகாரிகள் இராணுவத் தளபதியிடம் தெரிவித்ததாக கூறப்படுகின்றது.

பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி உயர் பாதுகாப்பு வலயத்தை இப்போது அவை இருக்கும் இடங்களில் இருந்து அகற்றமுடியாத நிலை காணப்படுவதாக இராணுவத் தளபதி பதிலளித்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி விரைவில் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்திற்கு அறிவித்தல் கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-8)

# புலிகள் எனக் கூறப்படும் 2பேர் வவுனியா படையினரிடம் சரண்!

## தெல்லிப்பழையில் தங்கவைக்கப்படுவர்

வவுனியா,ஜூலை2

வவுனியா, பம்பைமடுப்பகுதியில் உள்ள படையினரிடம் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் என்று தம்மை கூறிக்கொண்ட இருவர் சரணடைந்துள்ளனர்.

கடந்த 24ஆம் திகதி சரணடைந்த இந்த இரண்டு பேரும் வவுனியா பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து அவர்கள் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர்.

தாம் விடுத்லைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் -

மீண்டும் அந்த இயக்கத்தில் இணைந்திருக்க விரும்பவில்லை என்றும் - மன்றில் அவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து அந்த இருவரையும் தெல்லிப்பழையில் உள்ள புனர்வாழ்வு முகாமில் ஒப்படைக்குமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மருதங்கேணி, தாழையடியைச் சேர்ந்த தாமு ஸ்ரீதரன் (வயது 26), மானிப்பாயைச் சேர்ந்த குணவாசன் ஜெகன் (வயது24) ஆகிய இருவருமே சரணடைந்தவர்களாவர். (ஒ-10)

# மனித உரிமை ஆணைக்குழுவுக்கு மூன்று வெளிநாட்டு ஆலோசகர்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை2

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்திற்கு மூன்று வெளிநாட்டவர்கள் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நியமிக்கப்பட்ட ஆலோசகர்களில் ஒருவர் இன்று யாழ்ப்பாணம் வருவார் என்றும் நாளை வியாழக்கிழமைமுதல் அவர் பணியில் ஈடுபடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஏனைய இருவரும் அடுத்த சில தினங்களில் யாழ். வந்து இங்கு தங்கியிருந்து பணியில் ஈடுபடுவார்கள் என யாழ். அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் இந்த ஆலோசகர்கள் யாழ். அலுவலக அதிகாரிகளுக்கு வழங்கவுள்ளனர். அத்துடன், குடாநாட்டில் மனித உரிமைகள் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்பாகவும் அவதானிப்பார்கள். (ம-8)

# வடகடல் தொழிற்சாலையின் நான்கு இயந்திரங்கள் பழுது

## இதனால் வலைபின்னும் தொழில் பாதிப்பு

குருநகர், ஜூலை2

குருநகரில் உள்ள வடகடல் தொழிற்சாலையில் வலை பின்னும் தொழிலை மேற்கொள்ளும் இயந்திரங்களில் நான்கு இயந்திரங்கள் பழுதடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலையில் உள்ள ஆறு இயந்திரங்களில் பெரும்பாலான இயந்திரங்கள் பழுதடைந்துள்ள காரணத்தினால் வலை பின்னும் பணிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன.

இவற்றைத் திருத்தித் தருமாறு வடகடல் தொழிற்சாலையின் பணிப்பாளரிடம் பலதடவைகள் வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதும் இன்னமும் அவை திருத்தப்படவில்லை.

இந்தத் தொழிற்சாலை தொடர்பாக இந்து விவகார அமைச்சுக்கும் புனர்வாழ்வு அமைச்சுக்கும் இடையே இழுபறி இருந்து வருவது தெரிந்ததே.

(ம-10-51)

## நாளை

ஆனி 18
வியாழக்கிழமை
03.07.2003
திதி : சதுர்த்தி
முன்னிரவு 10.11 வரை
நட்சத்திரம் : ஆயிலியம்
பிற்பகல் 2.32 வரை
சுபநேரம் : 7.27-8.57
ராகுகாலம் : 1.27-2.57
(பழைய நேரப்படி)

## உதய வாக்கு

கேள்வியை நீர்த்துப் போக வைக்கும் பதிலே சுவையானது.

# துரையப்பா விளையாட்டரங்கில் புற்கள் நடும் பணிகள் ஆரம்பம்



அரியாலை,ஜூலை2

தேசிய விளையாட்டு விழாவுக்காக துரிதமாகப் புனரமைக்கப்பட்டு வரும் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் புற்கள் நடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

செம்மண் பறிக்கப்பட்டு மைதானத்தை மட்டப்படுத்தும் பணிகள் ஏற்கனவே பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. மட்டப்படுத்தப்பட்ட தரையில் தற்போது புற்கள் நடப்பட்டு வருகின்றன.

வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட புல் விதைகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட நாற்று மேடையில் குறிப்பிட்ட நாள்கள் வரை வளர்க்கப்பட்ட 'பேமலோக' (Pemaloka) என்ற ரக புற்களே தற்போது மைதானத்தில் நடப்பட்டு வருகின்றன.

தருவிக்கப்பட்ட புல் விதைகள் மைதானம் முழுவதும் நடுவதற்குப் போதுமானதாக இல்லை. இதனால், உள்ளூரில் கிடைக்கும் அறுகம் புற்களையும் கலந்தே தற்போது புற்கள் நடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

'பேமலோக' ரகப் புற்கள் வரட்சிக் காலத்தில் காய்ந்து போனாலும் முற்றாக அழிந்துபோய்விடமாட்டாது. போதிய தண்ணீர் கிடைத்ததும் அவை மிக விரைவில் மீண்டும் தழைத்துப்படர ஆரம்பித்துவிடும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் கவனத்திற்கு!

அனைத்து இறுதிவருட வணிக மாணவர்களும், வணிக மாணவ மன்ற செயற்குழு உறுப்பினர்களும் புகைப்படம் எடுப்பதற்காக 03-07-2003 ( வியாழன் ) பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக முன்றலில் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம.

தலைவர்,
வணிக மாணவர் மன்றம்

(19707) (21-14)

---

## UNHCR அனுசரணையுடன்
யாழ்ப்பாண சமூகசெயற்பாட்டு மையத்தினால் நடத்தப்படும்
"பெண்கள் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு - 2003"

இடம - சென். அன்ரனீஸ் கல்லூரி, ஊர்காவற்றுறை.
காலம - 02-07-2003 புதன்கிழமை
நேரம - 9.00 a.m.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- ஏற்பாட்டாளர்.

(C/28541) (21-14)

---

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின்
## மூன்றாவது ஆண்டு
## நிறைவு நிகழ்ச்சிகள் - 2003

தலைவர் : கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
(பீடாதிபதி - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

இடம் : பிரதான மண்டபம்
யாழ்ப்பாணம் தேசிய
கல்வியியற் கல்லூரி, கோப்பாய்

காலம் : 2003/ஜுலை/02, 04, 07, 09, 10

நினைவுப் பேருரைகள்:
"எம் மண்ணின் கல்வி வளர்ச்சிக்கும்
பண்பாட்டு எழுச்சிக்கும் உழைத்த
எம்மவர்கள் நினைவாக...."

சான்றோர் கௌரவிப்பு:
"எம் மண்ணிற்குத் தொண்டாற்றும்
எம்மவர்களைக் கௌரவித்தல"

### நிகழ்ச்சி I



பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப்பேருரை
பொருள் : "இலங்கைத் தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளில் எதிர்நோக்கும் சிக்கல்கள" (புலம்பெயர்ந்தோர் கவிதைகளை அடிப்படையாகக்கொண்டது)
பேருரையாளர் : கலாநிதி கி.விசாகரூபன்
(முதுநிலை விரிவுரையாளர் - தமிழ்த்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்)
காலம் : 02.07.2003 மாலை 4.30மணி

### நிகழ்ச்சி II



பேராசிரியர் ப.சந்திரசேகரம் நினைவுப்பேருரை
பொருள் : "ஆபத்து விளிம்பிலுள்ள கற்போர்"
பேருரையாளர் : பேராசிரியர் சபா ஜெயராசா
(கல்வித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
காலம் : 04.07.2003 மாலை 4.30மணி

### நிகழ்ச்சி III



பேராசிரியர் க.கைலாசபதி நினைவுப்பேருரை
பொருள் : "பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் காதலியாற்றுப்படை காட்டும் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக்கோலங்கள"
பேருரையாளர் : கலாநிதி S.சிவலிங்கராஜா
(முதுநிலை விரிவுரையாளர் - தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
காலம் : 07.07.2003 மாலை 4.30மணி

### நிகழ்ச்சி IV



பேராசிரியா அ.துரைராஜா நினைவுப்பேருரை
பொருள்: "கல்வி மூலமாகத் தேசத்தைக் கட்டியெழுப்ப வழிகாட்டும் நவீன முகாமைத்துவப் பிரவேசங்கள்"
பேருரையாளர் : திரு.பா.தனபாலன்
M.Phil., Dip. in Ed.
உபபீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்) யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
காலம் : 09.07.2003 மாலை 4.30மணி

### நிகழ்ச்சி V



சான்றோர் கௌரவிப்பு
"எம் மண்ணில் அறப்பணிகள், பொதுப்பணிகள் ஆற்றிவரும் நல்லாசான் தன்னலங்கருதாக் கருமவீரா"
செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினரால் கௌரவிக்கப்படுவார்.
காலம் : 10.07.2003 மாலை 4.30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பீடாதிபதி, உபபீடாதிபதிகள், விரிவுரையாளர்கள்,
கல்வி சாரா உத்தியோகத்தர்கள்,
முகிழ்நிலை ஆசிரியர்கள்.

(21-14) (C28959)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் மூன்றாவது ஆண்டு நிறைவு நிகழ்ச்சிகள் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**துயா நகைப் பூங்கா**

இல.213C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

## விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை2

உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலய மாணவி மரணம் தொடர்பாக ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாடசாலை காவலாளியான தில்லையம்பலம் ரமணன் என்பவரை எதிர் வரும் 14ஆம் திகதி வரை விளக்க மறியலில் உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் பா. சுப்பிரமணியம் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

(எ-8)

---

## பருத்தித்துறை புனித தோமையார் ஆலயப்
## பெருவிழா

இன்று (02-07-2003) புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை வழிபாடும் ஆசீரும் இடம்பெற்று நாளை (03-07-2003) வியாழக்கிழமை காலை 6.45 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும்.

பக்தர்கள் அனைவரும் கலந்துகொண்டு இறையாசீர் பெறுமாறு அழைக்கப்படுகிறீர்கள்.

பங்குத் தந்தையர்களும்
பங்கு மக்களும்.

பருத்தித்துறை. (21-14) (19699)

---

## அதிபோஷாக்கு மிக்க உன்னத பானம்

புரோவின்எக்ஸ் இல் 16 வகையான விற்றமின்களும் மேலதிக கனியுப்புக்களும் அடங்கியது.

**PROVIN-X**

- இழந்த சக்தியை விரைவாக மீட்டெடுத்தல்
- நோய்வாய்ப்பட்டோர் உடன் புத்துணர்வு பெற
- கண்பார்வை சக்தியை அதிகரித்தல்

மேலும் விளையாட்டு வீரர், கர்ப்பிணித்தாய்மார், வளரும் பிள்ளைகள், வயோதிபர் உட்பட குழுக்குடும்பத்துக்கும் ஏற்ற சிறந்த பானம்






யாழ். முகவர்: ஜெகன் பார்மஸி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 3191

வன்னி முகவர்: அகிலன்ஸ் பார்மஸி
(பிள்ளையார் மருந்தகம்), கிளிநொச்சி.

இலங்கையில் சந்தைப்படுத்துவோர்:
ARKEM COLOMBO
T.P.: 470290, 075 344436
E-mail: arkem@sltnet.lk

PROVIN - X தற்போது அனைத்து முன்னணி பார்மஸிகளிலும் பிரதான கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

---

## STUDY IN INDIA

A/L சித்தியடைந்தவர்களும், 2003 ஆண்டு A/L பரீட்சை எழுதியவர்களும், O/L சித்தியடைந்தவர்களும் இந்தியாவில் Bangalore University, Anna University, Periyar University ஆகிய பல்கலைக்களகங்களின் பட்டதாரியாக வாய்ப்பு

Admissions are open from,

### Garden City College affiliated to Bangalore University

| Garden City College | COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|---|
| | B.Sc. (Computer Science) | 3 Year | Maths, Physics & Statistics |
| | B.Sc. (Fashion & Apparel Design) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| | B.Sc. (Microbiology) | 3 Year | Chemistry and Biology |
| | B.Sc. (Genetics) | 3 Year | Chemistry, Physics, Biology, Zoology, Botany |
| | B.Sc. (Biotechnology) | 3 Year | Chemistry, Physics, Biology |
| | BCA. (Bachelor of Computer Applicants) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| | BBM. (Bachelor of Business Management) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| | BHM. (Bachelor of Hotel Management) | 4 Year | Pass in All Subjects in any discipline |
| | B.A. (Journalism) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| | B.Com (Computers) | 3 Year | Pass in All Subjects in any discipline |

### SSM College of Engineering affiliated to ANNA University

| SSM College | | | |
|---|---|---|---|
| | B.E. Information Technology | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| | B.E. Computer Science and Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| | B.E. Electronics and Communication Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| | B.E. Mechanical Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| | B.Sc. Information Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| | B.Sc. Computer Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| | B.Sc. Apparel and Fashion Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| | M.S.C. Information Technology | 5 Year | Pass in All Subjects in any discipline |

### Muthayammal Arts & Science College affiliated to Periyar University

| Mmuthayammal College | COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|---|
| | B.Sc. Biochemistry or Microbiology | 3 Year | Biology, Physics & Chemistry |
| | B.Sc. Biotechnology or Bio Informatics | 3 Year | Biology, Physics & Chemistry |
| | B.Sc. Maths / Physics / Electronics / Chemistry | 3 Year | Maths, Physics & Chemistry |
| | B.Sc. Computer Science | 3 Year | Maths, Physics & Chemistry |
| | Bachelor of Computer Applications | 3 Year | Pass in All Subjects in any discipline |
| | B.Com | 3 Year | Pass in All Subjects in any discipline |
| | BBA. Bachelor of Business Administration | 3 Year | Pass in All Subjects in any discipline |
| | Govt. Diploma in Civil, Mechanical, Electrical, Electronics, Computer Tech, IT, Automobile, Communication | 3 Year | Pass in All Subjects in G.C.E. O/L |

Become a World Recognized GRADUATE

Admission, Visa and Hostel arrangements செய்து கொடுக்கப்படும்

எமது நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட 50ற்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்வி கற்றுக் கொண்டு இருக்கிறார்கள்.



மேலதிக விபரங்களுக்கு Call: 0777-767818

**SCHOLARS INFORMATION CENTER**
2nd Floor, Colombo Plaza, 50 Galle Road, Colombo-06. Tel: 074- 512 591

S.K Ads

# தனிமனித சுதந்திரம் மிக ஒழுங்காக பேணப்படுவது புலிகள் பகுதியிலேயே!

## நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா 'உதயனுக்கு' செவ்வி



எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் எந்தநேரத்திலும் எவரும் பயப்பீதியின்றி, சுதந்திரமாக, அச்சமின்றி நடமாடமுடியும்.

இங்கு சட்டம், ஒழுங்கு வலுவாக உள்ள. ஆனால், அரசின் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் எவரும் சுதந்திரமாக, பயம் பீதியின்றி நடமாட முடியாது.

தெற்கில் அரசியல் தலையீடு, பாதாள உலகக் கோஷ்டியின் செயற்பாடு, இரணுவம் மற்றும் பொலீஸில் இருந்து தப்பி ஓடியவர்களின் அடாவடித்தனம், பொலீஸ், இராணுவம் மற்றும் சிவில் அதிகாரிகளின் லஞ்சம், ஊழல் போன்றவற்றால் சட்டம், ஒழுங்கு என்பன சீர்குலைந்துள்ளன.

தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பரா 'உதயன்' செய்தியாளருக்கு வன்னியில் வைத்து வழங்கிய பிரத்தியேகப் பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார். அதன் முழு விவரமும் வருமாறு:

*கேள்வி:-* நீதி, நிர்வாகத்துறையின் தோற்றம் பற்றி விளக்குவீர்களா?

*பதில்:-* தமிழீழத்தின் நீதி, நிர்வாகத்துறை தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் நெறிப்படுத்தலின்கீழ் உருவாக்கப்பட்டது. 1993ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி சட்டக் கற்கையினைப் பூர்த்திசெய்த போராளிகள் அணியினருடன் இது முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது.

நீதி வழங்குவதில் பக்கச் சார்புகள், செல்வாக்குகள், தாமதங்கள் என்பவை ஏற்படாதவாறு செயற்படும் பொருட்டு தம்மைத் தேச விடுதலைக்காக முழுமையாக அர்ப்பணித்த போராளிகளில் தலைவரால் திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டவர்கள் சட்டக்கல்லூரியில் கற்கை நெறியினைப் பயின்றனர். பின்னர் அவர்களில் இருந்து நீதியாளர்களும் சட்டவாளர்களும் தெரிவுசெய்யப்பட்டு தமிழீழ நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டது.

எமது நீதித்துறையானது நீதிமன்றங்களின் செயற்பாடு, சட்டக்கல்லூரி, சட்டவாக்கச் செயற்பாடுகள் எனப் பிரிக்கப்பட்டுள்ளது.

*கேள்வி:-* நீதி, நிர்வாகத்துக்குரிய சட்டங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன?

*பதில்:-* நீதித்துறையில் நிபுணத்துவம்பெற்ற சட்டமாக்கல் பிரிவினால் சட்டங்கள் வரையறுக்கப்படுகின்றன. அவ்வாறு வரையறுக்கப்படும் சட்டங்கள் சட்டப் பரிசீலனைக் குழுவால் பரிசீலிக்கப்படும்.

சட்டப் பரிசீலனைக்குழு, புலிகளின் மூத்த உறுப்பினர்களையும் நீதித்துறை நிபுணர்களையும் கொண்டிருக்கும்.

பின்னர் தமிழீழ தேசியத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றபின் சட்டமாக வெளியிடப்படுகின்றது.

சட்டங்கள் யாவும் தூய நீதியினை நிலைநாட்டவும், மக்கள் வாழ்வினை சீராக அனுபவிக்கவும், அதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான விடயங்களை அடிப்படையாகக் கொண்டும் இயற்றப்படுகின்றன.

இவ்வாறு இயற்றப்படும் சட்டங்கள் மக்களின் இறைமை, நீதித்துறைச் சுதந்திரம் என்பன ஐ.நா. சபையின் மனித உரிமை பிரகடனத்திற்கு அமைவாக மக்களின் உரிமைகளைப் பேணும் நோக்குடன் இயற்றப்படுகின்றன.

சர்வதேச சட்டங்கள் எப்படி உள்ளதோ அதே வடிவில் எமது பண்பாடு, கலாசாரம் போன்ற சூழலுக்கு ஏற்றவகையில் தமிழீழச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

*கேள்வி :-* நீதித்துறையினால் இயற்றப்பட்ட சட்டங்கள் பற்றிக் கூற முடியுமா?

*பதில் :-* இதுவரை பிரதான சட்டங்களும், திருத்தச் சட்டங்களுமாக மொத்தமாக 19 சட்டக் கோவைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் குற்றவியல் சட்டம், சான்றியல் சட்டம், தமிழீழ சட்டக் கோவை, தேச வழமைச் சட்டம், உணவுச் சட்டம், சீட்டுச் சட்டம் போன்ற பிரதான சட்டங்களைக் குறிப்பிடமுடியும்.

பொதுவாக இயற்றப்பட்ட சட்டங்கள், நாகரிக விருத்தி, மனித உரிமைகள் பேணல், மக்களின் இயல்பான சமூக வாழ்க்கையை அனுபவிக்க வாய்ப்பளித்தல், நீதித்துறை சுதந்திரம் ஆகிய பிரதான விதிகளை அடியொட்டியே மேற்படி சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

இதன் மூலம் கடந்த பத்து ஆண்டுகளாக நீதி நிர்வாகத் துறை, ஓர் அரசிற்குரிய பிரதான கட்டமைப்பாகச் செயற்படக் கூடியதாய் அதன் செயற்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. அதனால் இத்துறை செம்மையான பணியை ஆற்றி வருகின்றது.

நீதித்துறையின் இன்றைய செயற்பாடுகள், நாளைய அரச நிர்வாகத்திற்கான ஓர் அலகாக தொடர்ந்து வளர்ச்சியடைந்து செல்கிறது. இதன் பரிணாம வளர்ச்சியை நீதிமன்றங்களின் செயற்பாடுகள் மூலம் அறிய முடியும்.

*கேள்வி:-* சட்டக்கல்லூரியின் பாடவிதானம் பற்றிக் கூறமுடியுமா?

*பதில:-* சட்டக் கல்லூரியின் உள்ளக கற்கைநெறியானது 22 முழுமையான சட்டப் பாடநெறிகளையும் ஏனைய நான்கு உபபாடநெறிகளையும் கொண்டுள்ளது.

வெளிவாரிக் கற்கைநெறி 18 சட்டக் கற்கைநெறிகளையும், ஓர் உப கற்கைநெறியினையும் கொண்டுள்ளது. மூன்று ஆண்டுகள் கற்கை நெறியினைச் சட்டக் கல்லூரிகள் கொண்டுள்ளன.

*கேள்வி:* - தலைவர் பிரபாகரனின் பங்கு நீதித்துறையில் எவ்வாறு உள்ளது?

*பதில் :* -தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் முன்னிலையில் நீதியாளர்கள் உறுதியுரை செய்துகொள்ள வேண்டும். அதன் பின் தலைவரால் அவர்கள் நீதியாளர்களாக அங்கீகரிக்கப்படுகின்றனர்.

குற்றவாளிகளுக்குத் தண்டனை குறைத்தல், குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குதல் மற்றும் சட்டத் தவறுகள் காணப்படுகின்றதான விடயங்களில் நியாய விளக்கம் ஒன்றிற்கு பணிப்புரைகளை விடுக்கலாம்.

தமிழீழத்தின் அனைத்துச் சட்டங்களும் தலைவரின் ஒப்புதலின் அடிப்படையிலேயே சட்டமாக்கப்படுகின்றன.

*கேள்வி:-* நீதி, நிர்வாக சேவையின் நீதிமன்றங்கள் பற்றிக் கூறுவீர்களா?

*பதில்:-* எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் 6 மாவட்டங்களில் நீதிமன்றங்கள் உள்ளன. இரண்டு மேல் நீதிமன்றங்களும் உண்டு. ஒரு சிறப்பு மேல் முறையீட்டு நீதி மன்றமும் உண்டு.

**நேர்காணல் : சசி**

இதுவரை காலமும் 24ஆயிரம் வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 19ஆயிரம் வழக்குகள் தீர்க்கப்பட்டு விட்டன. இவற்றில் 750 வழக்குகள் மேன்முறையீடு செய்யப்பட்டன. அவற்றில் 500 தீர்க்கப்பட்டுவிட்டன.

சிறப்பு நீதிமன்றில் 50 வரையான வழக்குகள் இதுவரை காலமும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவையாவற்றிலும் திருப்தி இல்லாவிட்டால் இறுதியாகத் தலைவருக்கு மனுச் செய்ய முடியும். அதனைத் தலைவர் பரிசீலனை செய்வார்.

*கேள்வி:-* சட்டவாளர்கள் வழக்காளிகளிடம் வழக்குகளுக்காகப் பெறுகின்ற நிதி தொடர்பாகக் கூற முடியுமா?

*பதில்:-* மக்களின் பாரச் சுமைகளைக் குறைப்பதற்கு நீதிமன்றின் ஊடாகவே சட்டவாளர்களுக்கான கொடுப்பனவை வழங்கமுடியும். இங்கு லஞ்சம், ஊழல் எதுவும் இல்லை. ஸ்ரீலங்கா நீதிமன்றைப் போன்று சட்டவாளர்கள் தீர்மானிக்கும் தொகையினை ஏழை வழக்காளிகளால் கொடுக்கமுடியாது. அதனால், வழக்காளி ஒழுங்காக வழக்குகளைத் தொடரமுடியாது.

இவ்வாறான சூழலில் ஏழை வழககாளிக்கு நீதி கிடைப்பதில்லை. சட்டவாளர்கள் வரையறுக்கப்பட்ட தொகைப் பணத்தையே பெற முடியும்.

*கேள்வி:-* தமிழீழ நீதிமன்றில ஸ்ரீலங்கா அல்லது வெளிநாட்டு சட்டவாளர்களும் சட்டவாளராக வழக்காடமுடியுமா?

*பதில்:-* தமிழீழ நீதிமன்று தமிழீழ அரச சட்டவாளர்களையும், பிரத்தியேகச் சட்டவாளர்களையும் கொண்டு செயற்படுகின்றது. வேறு நாடுகளில் (தமிழீழத்திற்கு வெளியே) சட்டக் கல்வி பயின்ற சட்டவாளர்கள் தமிழீழ சட்டக் கல்லூரியில் பரீட்சை எழுதித் சித்தியடைந்து பின்னர், நீதியாளர் முன்னிலையில் உறுதியுரையினைச் செய்த பின் சட்டவாளராகப் பணியாற்றமுடியும்.

*கேள்வி:-* தமிழீழ நீதி, நிர்வாகத் துறையில் பெண்களுக்குச் சார்பாக நீதி வழங்கப்படுவதாகப் பரவலாக ஆண்களால் நீதி, நிர்வாகத் துறை மீது குற்றஞ்சுமத்தப்படுகின்றதே. இது தொடர்பான விமர்சனம் குறித்து யாது கூற விரும்புகின்றீர்கள்?

*பதில்:-* எமது தேச வழமையின் படி குடும்ப சூழலில் பெண்கள் ஆண்களால் அதிகம் கட்டுப்படுத்தப்படுகின்ற வழமை தமிழர் நாகரிகத்தில் மட்டும்தான் அதிகம் உண்டு. இதனை ஆண்கள் வர்க்கம் உணர வேண்டும். எங்கு எதற்கான தேவையிருக்கின்றதோ அங்கு அதற்கான சட்டம் உருவாக்கப்படும். பெண்களின் சகல சுதந்திரங்களும் ஆண்களால் கட்டுப்படுத்தப்படுவது நியாயமற்றது; அநீதியானது.

தமிழ்ப் பெண்கள் மூட நம்பிக்கையின் அடிப்படையில் எமது மூதாதையரால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். எழுதப்படாத பல சட்டங்கள் பெண்கள் மீது திணிக்கப்பட்டிருக்கின்றன. பெண்களின் சுதந்திரம் வட்டுச் சூழலில் அவர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கின்றது.

அபபோது தனக்கு நீதி, நியாயம் கிடைக்கும் என்றுதான் அவள் நீதிமன்றம் வருகின்றாள். 90வீதமான பெண்கள் தொடர்பான வழக்குகள் ஆண்களினால் துன்புறுத்தப்பட்ட வழக்குகளாகவே இருக்கின்றன. ஆகவே, அவை பெண்களுக்குச் சாதகமாக இருப்பதில் எதுவிதமான விமர்சனமும் இருப்பதற்கு நியாயம் இல்லை.

பெண்கள் மீதான ஆண்களின் துன்புறுத்தல்கள் என்று ஓய்கின்றதோ அன்று ஆண்களும் பெண்களும் சமத்துவமுடையவர்கள் ஆகின்றனர். அப்போது நீதியும் சமமாகும்.

*கேள்வி:-* யாழ்ப்பாணத்தில் தற்போது குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன பற்றி யாது கூறவிரும்புகின்றீர்கள்?

*பதில்:-* யாழ்ப்பாணத்தில் இன்று கொலையும், கொள்ளையும், பாலியல் வல்லுறவும் மலிந்துவிட்டன. இராணுவக் கட்டுப்பாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது.

யாழ்ப்பாணத்தில் லஞ்சம் வழங்கி எதனையும் செய்யமுடியும் என்ற நிலை உருவாகியுள்ளது. இளைஞர்களிடம் ஸ்ரீலங்கா புலனாய்வுத்துறை, அவர்களின் இளவயதுப் பசியைத் தீர்ப்பதற்கு உடந்தையாக இருந்து அதற்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதுடன், எமது போராட்டத்திற்கு எதிராக அவர்களைப் பயன்படுத்துகின்ற சூழல் உருவாகியுள்ளது.

கொள்ளைகள் அதிகரிப்பதற்கும் இளைஞர்கள் மத்தியில் மது, போதைப் பழக்கம் அதிகரிக்கவும் இராணுவ புலனாய்வுத்துறையினின் செயற்பாடுகளும் காரணமாக அமைகின்றன.

*கேள்வி:-* சம காலத்தில் மரண தண்டனைக்கு எதிராக வாதங்கள் முன்வைக்கப்படும்போது தமிழீழ நீதி, நிர்வாகம் மரணதண்டனை வழங்குவது தொடர்பாகப் பரிசீலிக்கவில்லையா?

*பதில்:-* இதுவரை காலத்தில் 10 ஆயிரம் வரையிலான கிரிமினல் வழக்குகள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. இவற்றில், பாலியல் வல்லுறவு, கொலை போன்றவற்றுக்கு 4பேருக்கு மட்டுந்தான் மரணதண்டனை நிறைவேற்றியுள்ளோம்.

மரணதண்டனை நிறைவேற்றப்பட்டவர்கள் கருணை மனுச் செய்யலாம்.அவற்றை ஆலோசனைக்குழு பரிசீலனை செய்யும்.

இது தொடாபாகத் தலைவர் அவர்கள் எமது தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் வரை மிகவும் இறுக்கமான தண்டனைகளை வழங்கவும் குற்றவாளிகளின் வீதத்தைக் குறைப்பதற்கு ஏற்ற சகல நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நீதித் துறைக்கு அனுமதி வழங்கியிருக்கின்றார். எமக்கு விடுதலை கிடைத்து, எமது வெளிப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, எமது தேசம் சுமுகமான நிலைக்கு வரும்போது, மரணதண்டனைச் சட்டம நிச்சயமாக நீக்கப்படும் எனத் தலைவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

*கேள்வி:-* போராளிகள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்று பரவலாக விமர்சனங்கள் எழுகின்றன. இது தொடர்பாகத் தங்கள் கருத்து என்ன?

*பதில்:-* போராளிகளுடனான பிரச்சினைக்கும், தற்போது பொது மக்கள் நீதிமன்றில் வழக்குத் தொடர முடியும். அவ்வ தேச நலன் போராட்டம் சாராத போராளியின் தனிப்பட்ட பிரச்சினையாக இருந்தால் போராளியையும் நீதிமன்றில் நிறுத்தமுடியும். அத்துடன், போராளிகள் தொடர்பான வழக்குகள் பெரும்பாலும் இராணுவ நீதிமன்றில் விசாரணை செய்யப்படும். அல்லது சம்பந்தப்பட்ட பொறுப்பாளாகள், பிரச்சினைக்குரிய போராளிக்குரிய தண்டனையை வழங்குவார்கள். சட்டம் என்பது அனைவருக்கும் ஒன்று. போராளிக்கு வேறு பொது மகனுக்கு வேறு அல்ல.

பொது மக்களுக்கு வழங்கும் தண்டனையை விடப் போராளிகளுக்கு அதிக தண்டனை வழங்கப்படும். இவை வெளிப்படையாகத் தெரிவதில்லை - என்றார். ★

---

# நாட்டில் 5. 5வீத பொருளாதார வளர்ச்சி; பெரிய சாதனை என்கிறார் நிதியமைச்சர்

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் முறையான நிதி முகாமைத்துவம் காரணமாக இவ்வாண்டின் முதல் மூன்று மாத காலத்தில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 5.5சத வீதத்தால் உயர்ந்துள்ளது.

நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி நேற்றுமுன்தினம் காலை நிதி அமைச்சில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையிலேயே கூறியதாவது:-

ஈராக் யுத்தம் காரணமாக பெற்றோலியப் பொருள்களின் விலை அதிகரித்தது. தேயிலை ஏற்றுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டது. நாட்டின் ஐந்து மாவட்டங்களில் வெள்ள அனர்த்தங்களும் ஏற்பட்டன. இந்த நிலையிலும் நாடு பொருளாதாரத்தில் வளர்ச்சி கண்டுள்ளது பெரிய சாதனையாகும்.

கைத்தொழில் உற்பத்தி 5.6 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. உல்லாசப் பயணத்துறை 28சதவீத வளர்ச்சி கண்டுள்ளது. ஏற்றுமதி, இறக்குமதி அமெரிக்க டொலர்களில் 13சத வீதத்தால் அதிகரித்துள்ளது.

புலிகளுடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசு செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உந்துசக்தியாக அமைந்துள்ளது.

ரூபாவின் பெறுமதியை ஒரே நிலையில் வைத்திருக்கின்றோம். வங்கிகளில் வட்டிவீதம் குறைக்கப்பட்டுள்ளது. பாவனையாளர்கள் அன்றாடம் பாவிக்கும் பொருள்களின் மீது பெறுமதி சேர்க்கப்பட்டவரி விதிக்கப்படவில்லை - இவ்வாறு அவர் சொன்னார்.

---

# பதுளை வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் திடீர் வேலைநிறுத்தம்

பதுளை வைத்தியசாலையைச் சேர்ந்த கனிஷ்ட சேவையாளர்கள் நேற்றுமுன்தினம் முற்பகல் திடீர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வந்த கனிஷ்ட சேவையாளர் ஒருவரின் உறவினரான ஒரு நோயாளியை வைத்தியசாலை பாதுகாப்புப் பிரிவினர் தாக்கினராம். இதனை ஆட்சேபித்தே கனிஷ்ட சேவையாளர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கினர்.

தாக்கப்பட்டவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். முன்னரும் இதுபோன்ற தாக்குதல்கள் இடம்பெற்றிருக்கின்றன.

வைத்தியசாலையில் கடமைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் தனியார் பாதுகாப்பு பிரிவினர் வைத்தியசாலையிலிருந்து அகற்றப்படும்வரை வேலைநிறுத்தம் தொடருமென கனிஷ்ட சேவையாளர்கள் கூறியிருக்கின்றனர்.

---

**கச்சாயில் உள்ள வீட்டில்**

# திருடப்பட்ட நகைகளில் ஒருபகுதி ஒருவருடத்தின் பின் மீட்கப்பட்டது!

சாவகச்சேரி, கச்சாய் வீதியில் ஒரு வீட்டில் சுமார் ஒரு வருடத்திற்குமுன்னர் திருட்டுப்போன 30பவுண் தங்க நகைகளில் ஒரு பகுதியை கடந்த ஞாயிறன்று சாவகச்சேரி பொலஸார் மீட்டுள்ளனர். திருட்டுடன் தொடர்புடையவர் என்று கூறப்படும் நபரும் உடுப்பிட்டியில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

கடந்த வருடம் ஜூலை மாதம் ஒரு வீட்டில் தலையணைக்குக் கீழ் நகைகளை வைத்துவிட்டு வீட்டுக்காரர் உறங்கிய வேளையே இந்த நகைகள் திருடப்பட்டிருந்தன. இத்திருட்டுத் தொடர்பாக சாவகச்சேரிப் பொலீஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி எஸ்.ஏ. ளிக்றோஹித தலைமையில் சென்ற பொலீஸ் குழுவினர் உடுப்பிட்டியில் வைத்து சின்னக்கிளி இரகுநாதன் என்பவரைக் கைதுசெய்துள்ளனர்.

அத்துடன், நெல்லியடி, புலோலி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் விற்பனை செய்யப்பட்ட நகைகளையும் மீட்டுள்ளனர்.

பொலீஸார் இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை - மேற்படி நபரை சாவகச்சேரிப் பொலீஸார் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 14ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-4-117)

## யாழ். நல்லூர் சிவஞானப் பிள்ளையார் கோயில்

# மஹா கும்பாபிஷேகம்

# 02.07.2003

### ஆதீன முதல்வரின் அருளாசி

யாழ்ப்பாணம் நல்லூர்ப் பதியில் நீண்டகாலமாக எழுந்தருளி இருக்கும் சிவஞானப் பிள்ளையாருக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. பல சிறப்புக்களைக் கொண்ட நல்லூரில் பழைமையான ஆலயங்கள் பல காணப்படுகின்றன. அவ்வரிசையில் இவ்வாலயம் 175 வருடங்களுக்கு மேற்பட்ட பழைமையான ஆலயமாகும். இவ்வாலயத்தைப் பராமரிக்கும் அறங்காவலர்கள் கருணைத் தெய்வமாம் கந்தப் பெருமானின் முதலமைச்சராக விளங்கிய வீரபாகு தேவருடைய பரம்பரையைச் சேர்ந்தவர்கள். நல்லூர் சூரசங்காரத் தன்று முருகனுடைய படைகளாக இவர்கள் வெளிப்படுவது சிறப்பானது. கும்பாபிஷேகம் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும். இதன் மூலமாக அனைவரும் புனிதமடைகிறோம். விக்கினங்கள் தீர்க்கும் விநாயகப் பெருமானது கும்பாபிஷேகத்தைக் கண்ணாரப் பார்த்து மனதார அனுபவித்து வாழ்வோமாக. சாந்தியும் சமாதானமும் பெற்று அனைவரும் இன்புற்றிருக்க இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமகா சந்நிதானம்,
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
நல்லை திருஞான சம்பந்த ஆதீனம்.

### ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி

பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்குரிய சிறந்த மார்க்கமாக இறைவழிபாடு விளங்குகிறது. இறைவனை மனமுருகி வழிபட நமது முன்னோர்கள் ஒன்பது வழிபாட்டு முறைகளை வகுத்து நமக்குக் கொடுத்துள்ளனர். உவமை இல்லாத விநாயகனுடைய கல்யாண குணத்தையும் வீரதீரச் செயல்களையும் ஒவ்வொரு புராணங்களும் இதிகாசங்களும் மற்றும் வேததோத்திரத் திருமுறைகளும் எடுத்தியம்புகின்றன. இவ்வாறான மேன்மையும் தெய்வீகத்தன்மையும் தன்னுள்ளடக்கித் தன்னைநாடி வரும் அடியவர்களின் விக்கினங்களைத் தீர்த்தருளும் சிவஞானப்பிள்ளையாருக்கு அடியேன் மட்டுமல்லாது எனது வழித்தோன்றல்களான எனது தந்தையார், பெரியதந் தையார்களுமாக ஏறக்குறைய மூன்று தசாப்தங்களாக அர்ச்சனைசெய்யும் பணியை மேற்கொண்டு வருகின்றோம் என்று கூறிக்கொள்வதில் பெரு மகிழ்வடைகின்றேன். எனது காலத்தில் சிவஞானப் பிள்ளையாருக்கு நடைபெறும் இரண் டாவது மஹாகும்பாபி ஷேகம் இதுவாகும். இது இறைவனது திருவருள் என்றே குறிப்பிட வேண்டும். இவ்வாறான திரு வருளுடன் கூடிய விநாயகனை மனதிலே நிறுத்தி இந்தச் சிறப்பான பெருநாளிலே பக்த ஜனங்கள் அனைவரும் இறை வனின் இஷ்டசித்திகளைப் பெற்றுப் பெருவாழ்வு வாழும் வண்ணம் ஆசீர்வதிக்கிறேன்.

"சர்வே ஜெனகா சுகினோபவந்து"

**சிவாகம சிரோன்மணி**
**சிவாகம கிரியா தத்துவநிதி**
**ப்ரம்மஸ்ரீ பொன். வரதராஜக்குருக்கள்**
**-கல்வியங்காடு-**

### நல்லையில் அருள்பாலிக்கும் கலட்டியான்

"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே"

-சிவஞானபோதம்

எமது சான்றோர் எல்லோருமே ஆலயதரிசனத்தின் மகத்துவத்தை வலியுறுத்தியிருக்கின்றனர். வாழ்வின் தத்துவமாக அமைந்திருப்பது ஆலயம். நம்முன்னோர்கள் ஊர்தோறும் ஆலயங்களை அமைத்து வழிபாடு செய்து வந்திருக்கின்றனர். இந்த வகையிலே, நல்லையம்பதியிலே சமய அபிமானிகளால் சிறிதாக அமைக்கப்பட்டு பூஜிக்கப்பட்டு வந்த சிவஞான விநாயகர் ஆலயம் இன்று புதுப்பொலிவுடன் அழகுற நிமிர்ந்து நிற்கிறது.

இறைவன் அபிஷேகப் பிரியன். பலவகையான அபிஷேகங்களுள் சிறந்தது கும்பாபிஷேகம். நாள்தோறும் நாம் இயற்றும் வழிபாடுகளுள் ஏற்படக்கூடிய சிறிய தவறுகள் யாவும் இந்த கும்பாபிஷேகத்தினாலே நீக்கப்படுகிறது என்பது ஆன்றோர் கருத்து. அந்த வகையிலே, இன்று கும்பாபிஷேகம் காணும் சிவஞான விநாயகர் ஆலயம் தானமைந்த பூமியைத் திருத்தலமாக்குவதுடன் நாடிவரும் அடியவர் மனதில் தூய்மையையும் சாந்தியையும் பரவச் செய்யும் என்பதில் எள்ளளவும் சந்தேகமேயில்லை.

கோயில் எனப்படுவது சமூகத்தை நெறிப்படுத்திச் செல்லவேண்டிய ஓர் அமைப்பு. அந்தவகையிலே, இந்த ஆலயமும் அந்தந்தக் காலங்களிலே ஏற்றவகையிலே சமூகப் பணியாற்றி வருகிறது. தைப்பூசம் முதல் மார்கழித் திருவாதிரை வரை அனைத்துத் திருநாள்களும் சிறந்த முறையிலே கொண்டாடப்பட்டுவருகிறது. அது மட்டுமல்ல, இங்கே எழுந்தருளியிருக்கும் சிவஞான விநாயகர் தான் சார்ந்த சமூகம் அவ்வப்போது எதிர்கொண்டுவரும் அனைத்துச் சோதனைகளில் இருந்தும் அடியவர்களைக் காத்து வருகிறார்.

இத்தனை அருள்மிகு சிவஞான விநாயகரின் கும்பாபிஷேக நிகழ்வைக் கண்ணாரக் காண்பது கோடி புண்ணியம். ஒருவர் தனது வாழ்க்கைக் காலத்திலே ஒரு கும்பாபிஷேகத்தையேனும் கண்ணாரக் காண்பது முத்திக்கு வழிவகுக்கும் என்பது சான்றோர் கருத்து. எனவே, இந்துக்களாகிய நாம் அனைவரும் ஒன்று கூடி இன்று நடைபெறும் இந்த மகா கும்பாபிஷேகப் பெருவிழாவிலே கலந்து எம் பெருமானைத் தரிசித்துப் பெருவாழ்வு பெறுவோமாக.

*சிரேஷ்ட சட்டத்தரணி திரு சி. கனகரட்ணம் J.P.U.M*
*(தலைவர், நல்லூர் பிரதேச சபை)*



### சிவஞான விநாயகனின் தாள் பணிவோம்

**கா.ச.சிவானந்தன்**
**ஆலய பரிபாலகர்.**

அடியார்களினால் அன்பாகவும் பக்தியாகவும் 'கலட்டியான்' என அழைக்கப்படுகின்ற நல்லூர் சிவஞான விநாயகருக்கு இன்று மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இந்நிகழ்வையொட்டி இந்த ஆலயத்தின் பூர்வீக வரலாற்றை வெளியிடுவதில் ஆலயத்தின் நிர்வாகி ஆகிய நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆலயம் 1825ஆம் ஆண்டளவில் எமது மூதாதையரில் ஒருவரான வலவியப்பர் ஆறுமுகம் என்பவரால் கலட்டிபூமியிலே இலந்தைப்பற்றைகளின் மத்தியிலே ஒரு சிறிய கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் எமது குலதெய்வமாகிய விநாயகப்பெருமானுக்கு நித்திய பூசைகளை பயபக்தியுடன் இவரே செய்து வந்தார். கலட்டியில் பிரதிஷ்டை செய்யப்பட்டதால் கலட்டியான் எனும் காரணப்பெயரை சிவஞான விநாயகன் பெற்றார். இந்த ஆலயம் நல்லூர், திருநெல்வேலி, கல்வியங்காடு ஆகிய மூன்று கிராமங்களின் மத்தியில் அமைந்திருப்பதால் இக்கிராமமக்கள் அனைவரும் விநாயகரைப்பூசித்து இஷ்ட சித்திகளைப் பெற்று வந்தனர். ஆலயம் சிறிது சிறிதாக வளர்ந்து மூர்த்தி தலம் பெற விநாயகப் பெருமானுக்கு நிரந்தரமான ஒரு கோயிலைக் கட்டி சாஸ்திர விதிப்படி கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமென்ற அவா எம் மூதாதையினர் உள்ளத்தில் எழுந்ததன் பயனாக 1916ஆம் ஆண்டிலிருந்து திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1917ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 18ஆம் திகதி ஆலய முன்றிலில் அடியார்கள் முன்னிலையில் இப்போதிருக்கின்ற எழுந்தருளி விநாயகர் விக்கிரகம் வார்க்கப்பட்டது. சாஸ்திர விதிப்படி கட்டட வேலைகளை ஆரம்பிப்பதற்காக முதுபெரும் பிராமணக் குருக்களான திருநெல்வேலி சபாபதிக் குருக்களின் ஆலோசனைப்படி 1925ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 6ஆம் திகதி முதன்முதலாக பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. மூலமூர்த்திக்கு புனித நீரால் அபிஷேகம் செய்யவேண்டி 1927ஆம் ஆண்டு ஒரு திரு மஞ்சனக்கிணற்றை நிர்மாணித்தனர். இதைத் தொடர்ந்து, 1931ஆம் ஆண்டிலிருந்து 1935ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூலஸ்தானம், மடைப்பள்ளி, முன்றிலில் பெரிய கொட்டகை, பலிபீடம் ஆகியனவற்றை நிர்மாணித்து 21.01.1936ஆம் ஆண்டு திருநெல்வேலி சபாபதிக் குருக்கள் தலைமையில் மிகச் சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றது. இது வரைகாலமும் எமது மூதாதையினரால் நடத்தப்பட்டு வந்த நித்திய பூசைகள் இக்கும்பாபிஷேக நிகழ்வை தொடர்ந்து பிராமணக் குருமாரினால் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்பிரதேசம் கந்தபுராணக் கலாசாரத்தில் ஊறி இருக்கும் மக்கள் வாழும் பிரதேசமாகையால் ஆரம்பகாலத்திலிருந்தே சைவ ஆசாரமுறைகளை இறுக்கமாகக் கைக்கொண்டதோடு, ஆலயத்திலும் புராணபடனம் படித்தல், திருமுறை ஓதுதல், கதாப்பிரசங்க நிகழ்ச்சிகளை நடத்துதல் முதலான நிகழ்வுகளை ஒழுங்காக நடத்தி வந்தார்கள். பிள்ளையார் கதை, திருவாதவூரடிகள் புராணம், திருவெம்பாவை போன்றவையெல்லாம் அவ்வப்போது படிக்கப்பட்டும், பாடப்பட்டும் வந்ததாக அறியக்கிடக்கிறது. புராணப்படிப்பில் தேர்ச்சி பெற்ற பாணர் என்று அழைக்கப்பட்ட முருகேசு எனும் பெரியாரினாலும், மற்றும் பெரியார்களான தம்பு, பொன்னம்பல சட்டம்பியார், தர்மலிங்கம் சட்டம்பியார் ஆகியோரினாலும் புராண படனம் நடைபெற்றதாகத் தெரியவருகிறது. பிள்ளையார் கதைப் படிப்பு சிறப்பாக நடந்துவரும் காலத்தில் 1940ஆம் ஆண்டு கஜமுக சங்காரத் திருவிழாவை நடத்த வேண்டுமென் எண்ணி அழகான ஒரு கஜமுகன் வாகனத்தைச் செய்து பலவருடங்களாக கஜமுக சங்காரத் திருவிழாவை மிகச் சிறப்பாக நடத்திவந்தார்கள். பின்பு நாட்டுச் சூழல், வசதிக் குறைவு போன்ற பல காரணங்களினால் இத்திருவிழா கைவிடப்பட்டது. ஆலயத் திருப்பணி வேலைகள் பல மேற்கொள்ள வேண்டியிருந்ததால் எனது பாட்டனார் வைத்தியர் சபாபதி கார்த்திகேசு அவர்களது நிர்வாகத்தின் கீழ் மணிக்கூட்டுக் கோபுரம், வசந்த மண்டபம், களஞ்சியம், மஹாமண்டபம் ஆகியவற்றைக் கட்டி 04.07.1960ஆம் ஆண்டு திங்கட்கிழமை அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இக்காலப்பகுதியில் வருடந்தோறும் ஆனி மாதத்தில் மிகச் சிறப்பாக பத்துத் தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெற்று வந்தது. இறுதி நாளன்று உற்சவம் மிகக் கோலாகலமாக ஆலயத்தைச் சுற்றியுள்ள மூன்று கிராமங்களையும் சுற்றி வெளி வீதித்திருவிழாவாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வுகளைத் தொடர்ந்து வந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக மேற்கொள்ளவேண்டிய திருப்பணி வேலைகள் தடைப்பட்ட காரணத்தால் ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளாக மஹாகும்பாபிஷேகம் நடத்த திருவருள் கைகூடவில்லை. இருந்தும், அடியார்களின் ஒத்துழைப்புடன் 19.03.1987ஆம் திகதி எனது தகப்பனார் திரு.கா.சபாபதி அவர்களின் நிர்வாகத்தின் கீழ் பிரதம குரு கு. பாலசுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் மஹாகும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நால் முதல் வருடந்தோறும் பத்துத் தினங்கள் அலங்கார உற்சவம், மாதாந்த சதுர்த்தி, நவராத்திரி, கார்த்திகை விளக்கீடு, பிள்ளையார் கதை திருவெம்பாவை, சிவராத்திரி, ஆவணி ஞாயிறு, சித்திரை வருடப்பிறப்பு ஆகிய விசேஷ தினங்களுக்கு திருவிழாக்களும், அபிஷேகங்களும் நடைபெற்று வருகின்றன. நீண்ட காலமாகச் சிறப்பாக நடைபெற்றுவரும் பிள்ளையார் கதைப் படிப்பை முன்னின்று நடத்தி வந்ததோடு ஆலயத்தின் ஓதுவாராக இருந்து வேண்டிய போதெல்லாம் திருமுறைகளை ஓதி ஆலயத்தில் ஒரு தெய்வீக சூழலை ஏற்படுத்திய அமரர் ச.கனகசிந்தாமணி அவர்களை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூரவேண்டியது எமது தலையாய கடமையாகும். மேலும் ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு மேல் நித்திய பூசைகளைப் பயபக்தியோடு செய்து ஆலய வளர்ச்சியில் பல வழிகளிலும் பங்கேற்றுவரும் ஆலய பிரதமகுரு பொன்.வரதராஜக் குருக்களையும், அவரது மகன் கேதீஸ்வர சர்மா மற்றும் அவரது குடும்ப உறுப்பினர் அனைவரது சேவையையும் பாராட்ட வேண்டும். ஆலயத்தில் நடைபெறுகின்ற சிறப்பு நிகழ்ச்சிகள் அனைத்திலும் பங்கேற்று மங்கல வாத்தியம் இசைத்துவரும் சுந்தரம் – தையல்நாயகி அவர்களையும் அவரது புதல்வர்களையும் பாராட்டுகிறோம். நீண்டகாலமாக எமது ஆலயத்திற்கு ஓர் ஊஞ்சல்பாட்டு இல்லையே என்ற குறையை நிவர்த்திசெய்துதந்த கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்) அவர்களுக்கும் எமது நன்றிகள். மேலும் கந்த சஷ்டி காலத்தில் ஆறுநாள்களும் உபவாசம் இருந்து வீரவாகு தேவர் முதலான நவவீரருக்கான உடைகளை அணிந்து ஊர்வலமாக இந்த ஆலயத்திலிருந்து நல்லூர் கந்த சுவாமி கோயிலுக்குச் சென்று சூரன்போர் திருவிழாவில் பங்குபற்றும் வழக்கம் பன்னெடுங்காலமாக இருந்து வருகின்றது. இந் நடைமுறை இப்பொழுதும் பின்பற்றப்படுதல் எமக்கும் எமது ஆலயத்துக்கும் பெருமைதரும் விடயமாகும். (11ஆம் பக்கம் பார்க்க...)

### வாழ்த்துச் செய்தி

**தி.மகேஸ்வரன் (நா.உ.)**
**இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்.**

இந்துக்கள் தாம் வாழும் இடமெல்லாம் விநாயகப்பெருமானுக்கு கோயில் கட்டி வழிபடுகிறார்கள். கோயில் கிரியைகள், வீட்டுக்கிரியைகள் ஆகிய எல்லாக்கிரியைகளிலும் விநாயகப் பெருமானுக்கே முதல் வணக்கம் செய்யப்படுகின்றது.

'சுக்லாம் பரதம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் பிரசன்ன வதனம் தியாயேத் சர்வவிக்னோப சாந்தயே' என விநாயகரை வணங்கியே சிவாச்சாரியார்கள் கிரியைகளை ஆரம்பிக்கிறார்கள். நமது நாட்டிலே பெரும் ஆலயங்களை அமைத்து அடியார்கள் விநாகரை வணங்கி வருகிறார்கள். மிக எளிமையான வடிவில் ஆற்றங்கரையிலும் அரசமர நிழலிலும் விநாயகர் உருவங்களைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வருகிறார்கள்.

கலைகளின் தெய்வமாக வாணி சரஸ்வதி போற்றப்படுகிறாள். அறிவுத் தெய்வமாக விநாயகப் பெருமானே திகழ்கிறார். "வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்...." என்ற பாடல் வரிகள் இதனை உணர்த்துகின்றன. நல்லூர் சிவஞானப் பிள்ளையார் கோயில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு இன்று மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். மகா கும்பாபிஷேகம் நடைபெற்றால் ஆலயத்தில் தெய்வ சாந்நித்தியம் ஒளி வீசும். இந்த ஆலயம் பழைமையும் பெருமையும் மிக்க தலமாகும். நல்லைக்கந்தன் ஆலயத்தில் நடைபெறும் சூரன்போர் நிகழ்வில் பங்கு பற்றுபவர்கள் இங்கிருந்தே புறப்பட்டுச் (11ஆம் பக்கம் பார்க்க....)

### புகழ்பூத்த புனித திருத்தலம்

கலாநிதி.எஸ்.சிவலிங்கராஜா
தமிழ்த்துறை, யாழ்ப்பாணம், பல்கலைக்கழகம்.

நல்லூர்க் கோவிற்பற்றைச் சேர்ந்த கலட்டியம்பதியிலே வீற்றிருந்து திருவருள் பாலிக்கின்ற அருள்மிகு சிவஞான விநாயகர் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

யாழ்ப்பாண மன்னர்களின் இராஜதானியாக விளங்கிய நல்லூரிலே சைவமும் தமிழும் செழிப்புற்று வளர்ந்து வந்தமையை எல்லோரும் நன்கு அறிவர். யாழ்ப்பாணத்தின் கலாசாரம் கந்தபுராண கலாசாரம் என்று இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையவர்கள் எழுதியுள்ளார்கள். கச்சியப்பசிவாசாரியாரினாலே கந்தபுராணம் காஞ்சிபுரத்திலே அரங்கேற்றப்பட்ட காலத்திலே யாழ்ப்பாண அரசு பேருடனும் புகழுடனும் நிலவியதாக அறியமுடிகின்றது.

கந்தபுராணத்தைப் படிக்கவும் பாடஞ்சொல்லவும் வல்ல தமிழறிஞர்கள் காஞ்சிபுரத்தில் இருந்து யாழ்ப்பாண மன்னர்களால் வரவழைக்கப்பட்டு நல்லூரிலே குடியமர்த்தப்பட்டனர் என்ற செவிவழிச் செய்தியும் உண்டு.

யாழ்ப்பாண மன்னர்களின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ்ப்பாணம் வந்து குடியேறியோரிற் பலர் வித்துவான்களாகவும் வைத்தியர்களாகவும் சோதிடர்களாகவும் கலைஞர்களாகவும் விளங்கினர் என்று கூறப்படுகின்றது.

மிக நீண்டகாலமாகக் கந்தபுராண படனமும் சமயப் பிரசங்கங்களும் நடைபெற்ற திருத்தலங்களிலே நல்லூர் (கலட்டி) சிவஞானப் பிள்ளையார் ஆலயமும் ஒன்றாகும்.

ஐரோப்பியர் வருகையை ஒட்டிச் சைவம் நலிவடைந்த காலத்திலே கூட இவ்வாலயத்திலே சமய அனுட்டானங்களும் புராணபடனமும் சமயச் சொற்பொழிவும் நடைபெற்றன என்று அறிய முடிகின்றது.

புகழ்பூத்த சுதேச வைத்திய நிபுணராகத் திகழ்ந்த உயர்திரு. சபாபதி கார்த்திகேசு அவர்களே இவ்வாலயத்தை நன்கு பரிபாலித்து வந்தார். இன்றும் அவரது வழித்தோன்றல்களே இவ்வாலயத்தைச் சிறப்புறப் பரிபாலித்துவருகின்றனர்.

(11ஆம் பக்கம் பார்க்க....)

### விக்கினங்கள் தீர்க்கும் கலட்டியான்

*திருமதி கனகலிங்கம் சசிலாதேவி – லண்டன் கலட்டியானின் மெய்யன்பர்*

ஈழமணித்திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்.தீபகற்பத்தில் நல்லைக்கந்தன் அருளாட்சிபுரியும் நல்லையம்பதியில் அமைந்துள்ள சிவஞானப்பிள்ளையாருக்கு இன்று புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மிக்கமகிழ்ச்சி அடைகிறேன். சிவஞானப் பிள்ளையாரை அவ்வூர் மக்கள் கலட்டிப்பிள்ளையார், கலட்டியான் எனவும் அழைப்பதுண்டு. மிகப் பழைமையான இவ்வாலயம் கார்த்திகேசு பரியாரியார் என்னும் ஆயுர்வேத வைத்தியத்தில் பிரசித்தி பெற்றிருந்த வைத்தியரின் சந்ததியினரின் நிலத்தில் அவர்களாலும் பொதுமக்களின் உதவியுடனும் கட்டப்பட்டது. கார்த்திகேசுப் பரியாரியாரிடம் வைத்தியம் செய்யவரும் நோயாளிகள் தங்கள் நோய் சுகமானதும் தூர இடங்களில் இருந்து வந்தும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக் கொண்டும் காணிக்கைகளைச் செலுத்திக் கொண்டும் செல்வதுண்டு.

இவ்வாலயம் மிகவும் பழம்பெருமை வாய்ந்தது. கந்தசஷ்டி விரதத்தின் ஆறாவது நாள் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நடைபெறும் சூரன் போருக்கு இக்கோயிலில் இருந்துதான் செங்குந்தர் இனத்தைச் சேர்ந்தவர்கள் நவவீரர், நாரதர், குதிரைப்படையினர் உடுப்புக்களை அணிந்துகொண்டு செல்வார்கள்.

வேண்டுவோர் வேண்டுவதை ஈயும் தன்மை பொருந்திய விநாயகரை குழந்தைப்பேறு இல்லாது வெளிநாடுகளில் வசித்து வந்த இவ்வூர் மக்கள் நேர்த்தி வைத்து இங்கு வந்து விநாயகரைத் தரிசித்துச் சென்ற பின் குழந்தைகளைப் பெற்றுவந்து தமது நேர்த்திகளை நிறைவேற்றியதை நான் நன்கு அறிவேன்.

1995ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும்

(11ஆம் பக்கம் பார்க்க....)


ஸ்ரீ சோமாஸ்
அரைக்கும் ஆலை
நாவலர் றோட்,
ஆனைப்பந்தி.

கிரிஷா
அரைக்கும் ஆலை
விவேகா மருந்தகம்,
கிரிஷா களஞ்சியம்,
நல்லூர் மார்க்கட்.

சிவன்
தொலைத் தொடர்பகம்
ஞா.பா.ச. வீதி,
கல்வியங்காடு.

கே.ரி.எம்.
ஒயில் மில்
நல்லூர் மார்க்கட்,
யாழ்ப்பாணம்.

யசோ
பந்தல் சேவை
ஞா.பா.ச.வீதி,
கல்வியங்காடு.

கேதீஸ்
களஞ்சியம்
பருத்தித்துறை வீதி,
நல்லூர் மார்க்கட்.

பாலா
ஸ்போட்ஸ் கிளப்
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

வினோ
நகைப்பூங்கா
185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

முருகன்
அரைக்கும் ஆலை
கோவில் வீதி, நல்லூர்.

கஜன்
கட்டடப் பொருள்கள்
விற்பனை நிலையம்
ஆடியபாத வீதி, திருநெல்வேலி.

சசிரேகா
டிரேட்ஸ்
இராமசாமி அழகு மாடம்,
நல்லூர் மார்க்கட்.

இராஜா
பந்தல் சேவை
விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு.

# இடைக்கால நிர்வாகம் தொடர்பான வரைபு ஒருவாரத்தினுள் புலிகளுக்கு அனுப்பப்படும்

## ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜூலை2

இடைக்கால நிர்வாகம் பற்றிய நகல் ஒருவார காலத்துக்குள் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்பட்டு, அவர்களின் பரிசீலனைக்குப் பின் அதில் திருத்தங்களை மேற்கொண்டு, மீண்டும் உடனடியாகப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

- இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவரும் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியுமான ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு. பாலைமீன்மடு, விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா, பாடசாலை அதிபர் பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. இவ் விழாவில் பிரதம அதிதியாக ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. கலந்துகொண்டார். இந்நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் மு.பவளகாந்தன், தமிழீழ கல்விக்கழகத்தைச் சேர்ந்த ஈழவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் ஜோசப் எம்.பி. மேலும் பேசுகையில் கூறியதாவது:-

அரசியல் ரீதியாக இடைக்கால நிர்வாகத்தை அமைத்து அதனைப் புலிகளிடம் வழங்கவேண்டும். அதன் மூலம், வடக்கு - கிழக்குப் பகுதிகள் நிர்வகிக்கப்படும். போரினால் அழிந்துபோயுள்ள பகுதிகளை மீளக் கட்டியெழுப்புவதற்கு வழிகோல வேண்டும். இதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்துகிறது.

புலிகள் ஒருபோதும் யுத்தத்தை நாடமாட்டார்கள். எமது பகுதிகளுக்கு ஏராளமான வெளிநாட்டு உதவிகள் கிடைத்துள்ளன.

இவற்றைச் சரியான முறையில செலவிட புலிகள் அக்கறையாக உள்ளார்கள். வருடாந்தம் 50கோடி அமெரிக்க டொலர் பணம் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்குச் செலவிடப்படவுள்ளது. இந்தச் செயற்பாடுகளுக்கு புலிகளுக்குப் பக்கபலமாகவும் ஒத்தாசையாகவும் நின்று புலிகளின் செயற்பாடுகளுக்கு உந்துசக்தியாக இருக்க வேண்டும். வருங்காலத்தில் சகல நிதிக்கட்டமைப்புகளும் புலிகளிடம் இருக்கவேண்டும்.

இந்தப் பாடசாலையின் விளையாட்டு மைதானப் புனரமைப்புக்காக இவ்வருடம் எனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளேன். அடுத்த வருடம் இப்பாடசாலைக்கு ஒரு லட்சம் ரூபாவை ஒதுக்கவுள்ளேன்.

- இவ்வாறு அவர் கூறினார்.

(ம)



தொல்புரம் கிழக்கு, விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் அண்மையில் 'சமூகச் சுடர்' கையெழுத்து சஞ்சிகை -9 வெளியீட்டு விழா, சமய பெரியார்களைக் கௌரவிக்கும் விழா ஆகியவற்றை நடத்தியது. கௌரவிப்பு நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சைவப்புலவர் சு.செல்வத்துரை, சொற்பொழிவாளர் மு.நமசிவாயத்துக்கு பொன்னாடை போர்த்தி, கேடயம் வழங்கிக் கௌரவிப்பதை படத்தில் காணலாம். (எ-135-28)

# திருக்கேதீஸ்வர கும்பாபிஷேக பூர்வாங்கக் கிரியைகள் இன்று

வலிகாமம் தெற்கு,ஜூலை2

சரித்திரப் பிரசித்திபெற்ற பாடல் ஸ்தலங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வர ஆலய மஹா கும்பாபிஷேகம் இம்மாதம் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக் கிரியைகள் இன்று புதன்கிழமை ஆரம்பமாகின்றன.

04ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறும் பாவனாபிஷேகத்தைத் தொடர்ந்து காலை 9மணி தொடக்கம் இரவு 9.30மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு மஹா கும்பாபிஷேகமும் மாலை திருக்கல்யாணமும இடம்பெற்று, பஞ்சமூர்த்திகள் வீதியுலா பவனியும் நடைபெறும்.

(ம-152)

# தொழிலுக்குச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டார்!

கொட்டகல,ஜூலை2

தொழிலுக்காகச் சென்று வீடு திரும்பாத குடும்பஸ்தர், மூன்று நாள்களின்பின் சடலமாக மீட்டெடுக்கப்பட்டார்.

கொட்டகல சமாதிபுர வீடமைப்புத் திட்டத்தில் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். கடந்த 25ஆம் திகதி இவர் தொழிலுக்காகச் சென்றுள்ளார். மூன்று நாள்களாகியும் வீடு திரும்பவில்லை.

கடந்த 28ஆம் திகதி ரயில் பாதைப் பாதுகாப்பு ஊழியர், கொட்டகலைக்கும ஹற்றனுக்கும் இடையில் உள்ள அதியுயர பாலத்திற்குக் கழே ஒரு மனித உடல் கிடப்பதைக் கண்டு அயலவர்களுடன் சென்று பார்த்தபோது மேற்கண்ட குடும்பஸ்தர் இறந்துகிடப்பதைக் கண்டுள்ளார்.

இவரின் மரணத்திற்கான காரணத்தை அறிவதில் டிம்புல்ல பொலீஸார் ஈடுபட்டுள்ளார்கள்.

## வடக்கு - கிழக்கு பகுதிகளிலுள்ள

# பாடசாலை நூலக அபிவிருத்திக்கு ஒரு கோடி 70லட்சம் நிதி ஒதுக்கீடு

வலி.தெற்கு.ஜூலை2

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் நூலக அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கென கல்வி அமைச்சின் நூலக அபிவிருத்திப்பிரிவு ஒருகோடி 70 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

பாடசாலைகளில் புதிய நூலகங்களை ஏற்படுத்தவும், பல நூலகங்களை புனரமைக்கவும், நூலகங்களுக்குத் தேவையான நூலகர்களை நியமித்து பயிற்சி வழங்கவும், நூல்களை வாங்கவுமென இந்த நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாண நூலக இணைப்பாளர் என். ஆனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் நூலகங்களின் பங்கு முக்கியமானதாகையால் எல்லாப் பாடசாலைகளிலும் நூலகங்கள் அமைக்கவும், நூலக அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்ளவும் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த நிதி உதவியில் இருந்து வடக்கு - கிழக்குப் பகுதிகளில் 77 பாடசாலைகளில் புதிய நூலகங்கள் அமைக்கப்படவுள்ளன. 206 நூலகங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி போன்ற ஸ்தாபனங்களின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் பாடசாலை நூலகங்களுக்குத் தேவையான புத்தகங்கள் பலவும் நூலக அபிவிருத்திப் பிரிவினரால் பல பாடசாலைகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

அததுடன். 42 பாடசாலைகளுக்கு கணனிகளும் வழங்கப்பட்டுள்ளன. பல பாடசாலைகளுக்கு ஆசிரிய நூலகர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாசிரிய நூலகர்களுக்கு வதிவிடப் பயிற்சிகளை வழங்கவும் எதிர்காலத்தில் நூலக அபிவிருத்திச் செயற்பாடுகள் அனைத்தையும் இவர்கள் மூலம் முன்னெடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் என்.ஆனந்தராஜ் மேலும் தெரிவித்துள்ளார். (ம-152)

# மகியாவ பெற்றோல் நிலையத்தில் 75லட்ச ரூபா துணிகர கொள்ளை!

## போராடிய ஊழியருக்கு துப்பாக்கிச்சூடு

கொழும்பு,ஜூலை2

கண்டி, மகியாவ பெற்றோல் நிலையத்தில் ஆயுதமுனையில் சுமார் 75லட்சம் ரூபா பட்டப்பகலில் கொள்ளையிடப்பட்டது. கொள்ளையின்போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஊழியர் ஒருவர் படுகாயமுற்று ஆபத்தான நிலையில் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்றது.

வானொன்றில் பெற்றோல் நிரப்ப வந்த நான்கு ஆயுதபாணிகளே இந்தத் துணிகரச் செயலில் ஈடுபட்டனர் என கண்டி பொலீஸார் தெரிவித்தனர்.

மூன்று நாள்களாகச் சேகரித்து வைத்த சுமார் 75லட்சம் ரூபாவை வங்கியில் வைப்பிலிடுவதற்கு எடுத்துச்செல்ல முற்படுகையிலேயே கொள்ளை நடந்தது. கொள்ளையர்களுடன் போராடிய ஊழியர் மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

மேலும், விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

(ம)

# பாலியல் தொழிலுக்கு அங்கீகாரமா? மறுக்கின்றார் உள்துறை அமைச்சர்

இலங்கையில் பாலியல் தொழிலுக்கு சட்ட அங்கீகாரமா? இல்லவே இல்லை. இது அபச்சாரம் என்கிறார் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க.

ஆங்கில வார இதழ் ஒன்றில் "இலங்கையிலும் பாலியல் தொழில் ஊக்குவிக்கப்படும் அரசாங்கம் அதற்கு அனுமதிப் பத்திரங்களை வழங்கி சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்போகிறது" எனச் செய்தி வெளிவந்துள்ளது.

இது தொடர்பாக உள்துறை அமைச்சர் என்ற வகையில் உங்களுடைய கருத்து என்ன? அரசாங்கத்திற்கு அப்படி ஒரு நோக்கம் உண்டா? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

"இந்தச் செய்தியை நானும் வாசித்தேன். இதில் எந்த உண்மையும் இல்லை. இது அந்தச் செய்தியாளரின் கற்பனைச் சித்திரம்.இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட செய்தியாளருடன் பேசவுள்ளேன்.

"இலங்கை ஒரு பௌத்த நாடு. எல்லா மதங்களுக்கும் மதிப்பளிக்கும் நாடு. எந்த ஒரு மதமும் விபசாரத்தை ஆதரிக்கவில்லை. கலாசாரத்தைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமை.

"எங்களுடைய அரசாங்கம் பாலியல் தொழிலை ஒருபோதும் அனுமதிக்காது. அப்படி ஒரு நோக்கமும் இல்லை" என்று அடித்துக் கூறினார்.

# ஜனநாயக விரோதமற்ற 'பொங்கு தமிழை' அனைவரும் பெருமையாகக் கருதவேண்டும்!

## - விமர்சனங்களையடுத்து பிரதமரின் அலுவலக அதிகாரி தெரிவிப்பு



கொழும்பு,ஜூலை2

ஜனநாயக விரோதமற்ற பொங்கு தமிழ் நிகழ்வை நாம் பெருமையாகக் கருதவேண்டும்.

- இவ்வாறு பிரதமரின் செய்தித் தொடர்புக்கான மேலதிகச் செயலாளர் சமன் அதாவுடஹெட்டி குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் சமன் அதாவுடஹெட்டி கலந்துகொண்டார். இது தொடர்பாகத் தென்னிலங்கை செய்தி ஊடகங்கள் சில விசமத்தனமான விமர்சனங்களை வெளியிட்டிருந்தன. இதனையடுத்து அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த சில நாள்களின் முன்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பொங்கு தமிழ் நிகழ்வில் நான் கலந்துகொண்டமை பற்றி பல்வேறு வகைக் கருத்துக்களை செய்தி ஊடகங்கள் வெளியிடுவதால் அது தொடர்பான விளக்கத்தை அளிக்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

'பொங்குதமிழ்' என்பதனால் உணரப்படுவது, கலயத்திலுள்ள பால் பொங்குவது போன்ற சுதந்திர கருத்து வெளிப்பாடு என அர்த்தமாகும். இந்நிகழ்ச்சியை ஒழுங்கமைத்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பின் பேரிலேயே நான் அந் நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன். மொழிபெயர்ப்பில் உதவும் பொருட்டு எமது காரியாலயத்தைச் சேர்ந்த உதவிச் செயலாளர் கே.பத்மநாதன் என்னுடன் இணைந்து கொண்டார்.

பொங்குதமிழ் நிகழ்வில் இம்முறை பாரம்பரிய வாழ்விடங்கள் குறித்த கருத்து வெளிப்படுத்தப்பட்டது. சுயநிர்ணயத் தீர்மானம் மேற்கொள்ளும் உரிமை குறித்து அவர்கள் கருத்து வெளியிட்டனர். நாடு துண்டாடப்படாது பேச்சுமூலம் அரசியல் தீர்வு காண்பது குறித்தும், இடைக்கால நிர்வாக சபை குறித்தும் கருத்துக்களை வெளியிட்டனர். இராணுவக் காவலரண்களால் அழிந்துபோன தமது நிலங்கள் மற்றும் வீடு வாசல்கள் பற்றிக் கருத்து வெளியிடப்பட்டது.

ஒஸ்லோ மாநாட்டில் வெளியிடப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலேயே இவ்வகைக் கருத்துக்கள் வெளிவந்ததாக அக் கூட்டத்தின் பார்வையாளர்களுக்கு நன்றாகப் புரிந்தது.

அவர்கள் தெரிவித்த சில கருத்துக்கள் எமது கருத்துக்களுடன் ஒத்துப் போகாதிருக்கலாம். எமது கருத்துக்கள் வேறொன்றாக இருக்க முடியும். ஆனால், ஆயுதங்களுக்குப் பதிலாக வாத்தியக் கருவிகளைக் கைகளில் தாங்கியவாறு அவர்கள் கருத்துக்களை வெளியிட்டனர்.

இவ்வகையில், ஜனநாயக முறைக்கு விரோதமில்லாது அவர்கள் நடந்துகொண்டதை நாம் பெருமையாகக் கருதுவதோடு, மகிழ்ச்சியடையவும் வேண்டும்.

பொங்குதமிழ் நிகழ்ச்சி குறித்து பல்கலைக்கழக மாணவரிடையேயும் பாதுகாப்புப் படையினரிடையேயும் ஓர் இறுக்கமான சூழ்நிலை நிலவியது. இந்நிகழ்வில் கலந்துகொள்வோர் யாழ்.பகுதியிலமைந்த காவலரண்களுக்கு வந்து ஆவேசமான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடக்கூடுமென பாதுகாப்புப் படையினர் எதிர்பார்த்தனர். அதேசமயம், பொங்குதமிழ் நிகழ்வுக்கு இராணுவத்தினர் இடையூறாக இருப்பரென பல்கலைக்கழக மாணவ, மாணவியர் எதிர்பார்த்தனர்.

இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்த யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் சிதம்பரநாதன் இது அஹிம்சை முறையிலான நிகழ்வேயென எனக்குத் தெரிவித்தார். நான் அதுபற்றி யாழ்.பாதுகாப்பு கட்டளை அதிகாரி மேஜர்ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் ஆலோசித்தேன். நாட்டின் சட்டதிட்டங்களுக்குள் அமைந்த ஜனநாயக நடவடிக்கைகளுக்கு பாதுகாப்புப் படையினரால் எவ்வித இடையூறும் ஏற்படுத்தப்படமாட்டாது என அப்போது மேஜர்ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார். நான் அவ்விடயத்தைப் பேராசிரியர்கள் ஊடாக மாணவத் தலைவர்களுக்கு தெரியப்படுத்தினேன்.

அதன் பிரகாரம் இரு தரப்பினருக்கும் திருப்தியளிக்கும் வகையில் அமைதியான முறையில் பொங்கு தமிழ் நிகழ்ச்சி நடந்தேறியது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்களும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர் என்று அவர் தெரிவித்தார். (ஒ-ரி)

## ஒத்திவைக்கப்பட்டுள்ளது

திரி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினரால் **01.07.2003ஆம்** திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்பட இருந்த நிகழ்வு தவிர்க்க முடியாத காரணங்களால் எதிர்வரும் **01-08-2003ஆம் திகதிக்கு** ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

தும்பளை, - திரீ ஸ்ரார் விளையாட்டுக் கழகம்.
பருத்தித்துறை. (19723)(21-19-15)

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ஜெயர்செல்வி மகேந்திரன் அவர்களின் இரண்டாவது புத்திரன்

### ம.தனுஜன்

அவர்களின் திடீர்மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

யா/ஆனைக்கோட்டை,
பாலசுப்பிரமணிய வித்தியாலயம். (21-26-19-15)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள். (19727)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
19 - 07 - 1927

மறைவு
07 - 07 - 1997

### அமரர் சிற்றம்பலம் தளையசிங்கம்

திதி: 02-07-2003

ஆறு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் - உங்கள் பசுமையான நினைவுகளோடு வாழ்கின்றோம் நாம்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.(21-26-15-19)) (19669)

துயர் பகிரும்:
மனைவி, பிள்ளைகள்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆனித்திங்கள் 19ஆம் நாள் 03-07-2003 வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணிமுதல் 12.00 மணிவரையுள்ள சிங்க லக்கினமும் அமிலிய நட்சத்திரமும் கூடிய சுபவேளையில்,

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**கனகலிங்கம்**
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
**புஸ்பகுமாரி**
அவர்களுக்கும்

முத்துமாரி அம்பாள் திருவருளால் மணமகள் இல்லத்தில் திருமாங்கல்ய தாரணஞ்செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசார வைபவத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு இருவீட்டார் சார்பிலும் அன்புடன் அழைக்கின்றோம்

வரவேற்புபசாரம்:

மணமகன் இல்லத்தில்
04-07-2003 வெள்ளிக்கிழமை
நடைபெறும்.

மணமகள் இல்லத்தில்
05-07-2003 சனிக்கிழமை
நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி நாகராசா சிவபாக்கியம்
குடும்பம்
'அன்னை இல்லம்'
விநாயகர் அரிவுகாலை,
பிரதான வீதி, சங்கானை.

திரு. திருமதி செ.தர்மலிங்கம்
குடும்பம்
சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு.

(19728) (21-19-15)

வட்டு. மத்திய கல்லூரி
அதிபர் உயர்திரு
வி.சிவஞானபோதன் அவர்களின்

# பணிநயப்பு மலர்

### மனமுவந்த வாழ்த்துக்கள் நிறைந்த நெஞ்சிலிருந்து.........

வட்டு திருஞான சம்பந்த வித்தியாசாலை என்று அடையாளம் காணப்பட்ட கல்விச்சாலையை வட்டு மத்திய கல்லூரி என்று தரமுயர்த்தி உயர்தர வகுப்புக்களையும் வைத்துத் தனது மாணவர்களை உயர்வான இடத்தில் வைத்து கணிப்பதற்கு தனது முழுச் சக்தியையும் பயன்படுத்தி வெற்றி கொண்ட ஒரு பெரிய மனிதராக நான் அதிபர் திரு.வி. சிவஞானபோதன் அவர்களை நிறைவுடன் நோக்குகின்றேன். பொருளாதார வளம் குறைந்த மாணவர்களுக்காக அல்லும் பகலும் உயர்வான சிந்தனைகளுடன் இணைந்த திட்டங்களை ஆக்கி அதைத் திணைக்கள நல்லுறவுகளுடன் பொருந்த வைத்துச் செயற்படுத்தியவர். ஒரு சிறந்த நிர்வாகி எவ்வாறு தனது ஆசிரியர் குழாத்துடனும் பெற்றாருடனும் கல்வி உயர் அதிகாரிகளுடனும் பழகவேண்டும் என்பதைச் செயலில் காட்டியவர். சிரித்துக் கொண்டே காரியங்களை வென்றெடுப்பவர். அவரது காலம் வட்டு மத்திய கல்லூரியின் பொற்காலம். வட்டு இந்து வாலிபர் சங்கத்துடன் நல்லுறவைப் பேணி ஏழை மாணவர் நலன் காத்தவர். எனது வலிகாம வலயத்தின் நல்லதிபராகக் கடமை ஆற்றி ஓய்வுபெறும் பண்பாளன் உயர் திரு. வி. சிவஞானபோதன் அவர்களுக்கு அவரது உயர் சேவைக்கு நன்றி கூறுவதுடன் வட்டு மத்திய கல்லூரியில் உத்தியோகப்பற்றற்ற சேவை தனைத் தொடர வாழ்த்துகின்றேன். ꠰꠰꠰

திருமதி ரெஜினா இருதயநாதன்
வலயக்கல்விப்பணிப்பாளர்,
வலிகாமம் கல்வி வலயம்

### கடமையே கண்ணாகினார்

திரு. விசுவலிங்கம்-சிவஞானபோதன் அவர்கள் ஆசிரியராக, உபஅதிபராக, அதிபராக, நீண்டகாலம் கல்வியுலகில் உயர்ந்த சேவையாற்றி எண்ணற்ற மாணவர்களின் உயர்வுக்காக அர்ப்பணிப்புடன் உழைத்தவர். இவர் சங்கானைக் கல்விக்கோட்ட அதிபர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினராக இருந்து கோட்டத்தின் பல்வேறு நிகழ்வுகளிலும் முக்கிய பங்கேற்று ஒப்பற்ற சேவையாற்றியுள்ளார். கோட்டத்தின் உயர்வுக்காக உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் இவர் ஆற்றிய சேவைகளை அதிபர் சங்கத் தலைவர் என்றவகையில் நன்றியுடன் பாராட்டுவதில் பெருமையடைகின்றேன். தனது கல்விச்சாலையிலும் இவர் ஆற்றிய தன்னலமற்ற உயர்ந்த சேவையாலே பாடசாலைச் சமூகத்திலும் நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்றுள்ளார்.

இவர் அரசசேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் சமூகத்திற்கு இவரது சேவை தொடர்வதுடன் இவர் சிறந்த தேக ஆரோக்கியத்துடன் சிறப்புகள் பல பெற்று நீடுழி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். ꠰꠰꠰

திருமதி ர.சோதிலிங்கம்
தலைவர், சங்கானைக்
கோட்ட அதிபர்சங்கம்.




### உயர்திரு. விசுவலிங்கம் சிவஞானபோதன் B.A
(அதிபர்சேவை 2. I)

#### தனிப்பட்ட விபரங்கள்

| | |
|---|---|
| பிறப்பு | :- 01-07-1943 |
| தந்தை | :- வேலாயுதம் விசுவலிங்கம் |
| தாய் | :- தங்கரத்தினம் விசுவலிங்கம் |
| ஆண் சகோதரர்கள் | :- 04 |
| மனைவி | :- நாகேஸ்வரி சிவஞானபோதன் |
| பிள்ளைகள் | :- ஆண்-01<br>பெண்கள்-03 |

#### சேவைவிபரங்கள்

| | |
|---|---|
| 01-11-1968 | - மாணவ ஆசிரியராகசேவையில் இணைவு அராலி வடக்கு அ.மி.த.க. பாடசாலை. |
| 1970-1971 | - ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை (கொழும்புத்துறை) |
| 1972-1975 | - ஹற்றன் சென்ஜோன்ஸ் பொஸ்கோ கல்லூரி |
| 19-01-1976 | - வட்டு.மத்திய கல்லூரியில் ஆசிரியராக இணைவு |
| 1977 | - கலைப்பட்டதாரி (பேராதனைப்பல்கலைக்கழகம்) |
| 1985 | - வட்டு.மத்தியகல்லூரியில்உப.அதிபர் ஆசிரிய ஆலோசகர்.(சமூகக்கல்வி) |
| 13.06.1992 | - வட்டு.மத்திய கல்லூரியில் அதிபர் |
| 30.06.2003 | - அதிபர் சேவையிலிருந்து ஓய்வு |

### உழைப்பால் உயர்ந்துநிற்கும் அதிபர்

அகவை அறுபதில் அடி எடுத்து வைக்கும் அதிபர் திரு.வி. சிவஞானபோதன் அவர்கள் பெருமைக்குரிய ஒருவராவார். அவருடைய பெருமைக்கு அவர் தம் சேவைக்கால சிறப்புக்கள் சான்றாகின்றன. யா/வட்டுமத்திய கல்லூரியின் வளர்ச்சி வரலாறு அவர்தம் வாழ்க்கை வரலாற்றுடன் பின்னிப் பிணைந்தது. ஆசிரியராகவும் முதன்மை ஆசிரியராகவும் அதிபராகவும் விளங்கிய அவரது கல்விச் சேவை பல்வகை அனுபவங்களை அவருக்கு அளித்தமை கல்லூரியை பெருமை மிக்கதாக மாற்ற உதவியது என்பது மனங்கொளத்தக்கது. கல்லூரிச் சமூக உறவுகளை வளர்ப்பதில் அவர் பெருவெற்றி கண்டிருக்கிறார். கல்லூரியின் வளர்ச்சிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணிப்பதில் முன்னின்றிருக்கிறார். அவரின் தன்னம்பிக்கையும், தளராதமுயற்சியும், உறுதியான செயற்பாடும் கல்லூரியை உயர்த்த அவருக்கு துணைபோயின. அறுபது அகவை காணும் அவர் சேவையால் உயர்ந்து எதிர்கால சிறப்புக்கள் பல காணும் உயர்நிலையை இறைவன் அவருக்கு வழங்குவார் என மன மகிழ்கின்றேன்.

திரு. சி. செல்லையா
கோட்டக்கல்விப்பணிப்பாளர் கோட்டக்கல்வி அலுவலகம், சங்கானை.

### கல்லூரி வளர்ச்சியில் அகம் மகிழ்ந்த அதிபர்களின் மகுடம்

ஐயேழு ஆண்டுகள் கல்விப்பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்ததுடன் யா/வட்டுமத்திய கல்லூரியில் மூவொன்பது ஆண்டுகள் அல்லும் பகலும் மாணவர்களின் உயர்விற்காக உழைத்து கல்லூரியின் வளர்ச்சியில் உளம் முழுமைபெற்று 30.06.2003 இல் அதிபர் சேவையில்இருந்து ஓய்வு பெறுகின்ற எங்கள் கல்லூரியின் வரலாற்று நாயகன் உயர்திரு. விசுவலிங்கம் சிவஞானபோதன் அவர்களின் இலட்சியக் கல்விப்பணியைப் பாராட்டுவதோடு அவரும் அவர்தம் குடும்பமும் எல்லாச்சிறப்பும் பெற்று நிறைவாக வாழ இறை ஆசிவேண்டி வாழ்த்துகின்றோம். ꠰꠰꠰

திரு.க.ஹரிஹரசக்தி
தலைவர், ஆசிரியர் நலன்புரிச்சங்கம், யா/வட்டுமத்திய கல்லூரி வட்டுக்கோட்டை.

### கருணை நிறை அதிபர்

எமது கல்லூரியின் வளர்ச்சியில் அயராது உழைத்த அதிபர் திரு.வி. சிவஞானபோதன் அவர்கள் கண்டிப்பு நிறைந்தவராக வெளியே தெரிந்தாலும் கருணையும் அன்பும் நிறைந்திருந்த ஒருவர். அவரது அரவணைப்பாலும் சேவையாலும் மாணவர்களாகிய நாம் நிறைந்த பயனை நுகர்ந்துள்ளோம். எமது பாடசாலையைத் தரமுயர்த்தி, கல்லூரியாக்கி பல்வேறு துறைகளிலும் பிளிரவைத்த வரலாற்று நாயகனாகவே நாம் அவரைத் தரிசிக்கின்றோம். அவரது பணிகள், எங்களாலோ, எமது கல்லூரியாலோ என்றும் மறந்துவிட முடியாதவை. அவரது நல்வாழ்விற்காக சங்கரத்தைப் பத்திரகாளியம்மையை இறைஞ்சுகின்றோம். ꠰꠰꠰

மாணவர்கள் சார்பில் செல்வன்.யோ.அருட்செல்வம்
செல்வி.கு சர்மிளா (சிரேஷ்ட மாணவ முதல்வர்கள்)

மலர் வெளியீடு :- ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் கடமையாற்றும் வீ.பரணீதரனின்
அன்புத் தாயாரான

**திருமதி புவனேஸ்வரி வீரசிங்கம்** அவர்களின்

**திடீர் மறைவையிட்டு பெரும் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்திருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

272, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் தொழில் நுட்பப் பூங்கா
உத்தியோகத்தர்கள்.

குறிப்பு: உத்தியோகத்தர்கள் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்ளவிருப்பதால் இன்றைய தினம் வகுப்புகள் யாவும் நடைபெறமாட்டா என்பதை அறியத்தருகின்றோம்.

(C/28702) (28-16-18)

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

*வாழ்த்துச்.....*

செல்வார்கள் என்பதை அறிந்து உள்ளேன். நமது பிரதேசத்தின் 'தேசக் கோயில்' என்று போற்றப்படுகின்ற நல்லைக்கந்தன் ஆலயத்தில் நடைபெறும் நிகழ்வுகளோடு தொடர்புள்ள ஆலயமாகத் திகழும் சிவஞானப் பிள்ளையார் ஆலயத்தின் கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

*புகழ்.....*

உயர்திரு கார்த்திகேசு அவர்களின் பேரனார் உயர்திரு சிவானந்தன் அவர்களின் குன்றா உழைப்பாலும் குறையா ஊக்கத்தினாலும் இன்று இத்திருத்தலம் புதுப்பொலிவோடு குடமுழுக்கைக் காணுகின்றது.

இவ்வாலயத்திற்கு அருகிலே நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரினால் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று நிறுவப்பட்டது.

சைவமக்கள் கிறிஸ்தவர் தேவாலயம் ஒன்று நிறுவப்பட்டது. சைவமக்கள் கிறிஸ்தவத்தின் பாற்சேராமல் தமது சைவசமய அனுட்டானங்களைச் செவ்வனே செய்யக்கூடிய வகையிலே உயர்திரு கார்த்திகேசு அவர்கள் இவ்வாலயத்தை வழிநடத்தி வந்தார்கள். அக்காலத்திலே புகழ்பூத்த சைவத்தமிழ் அறிஞர்களாக விளங்கிய சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர், கொக்குவில் சபாரத்தின முதலியார் முதலானோர் இவ்வாலயத்திலே புராணபடனம் செய்தும் சமயச்சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் உள்ளனர்.

நல்லூரின் புகழ்பெற்ற விநாயகராலயங்களுள் ஒன்றான கலட்டி சிவஞான விநாயகர் ஆலயம் இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவது சைவத்தமிழ் மக்கள் அனைவருக்கும் பெருமகிழ்வைத்தருவதாகும்.

"வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும்"

*விக்கினங்கள்....*

இடையில் நடைபெற்ற போரில் இவ்வாலயம் பெரும் சேதத்திற்குள்ளாகி இருந்தது. 1996 ஆம் ஆண்டு இவ்வாலயவளவில் குடியிருந்த கனகசிந்தாமணி ஆசிரியர், இவ்வாலய நிர்வாகியும் கார்த்திகேசுப் பரியாரியாரின் பேரனுமாகிய சிவானந்தன் மற்றும் சிலரும் இணைந்து திருப்பணி வேலைகளை ஆரம்பித்தனர். வெளிநாடுகளில் உள்ளவர்களினதும் உள்நாட்டில் உள்ளவர்களினதும், உதவியுடன் கட்டட நிர்மாணத் திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் 2000 ஆம் ஆண்டு கனக சிந்தாமணி ஆசிரியர் இயற்கை எய்தினார். அதன்பின் ஆலய நிர்வாகியாகிய சிவானந்தன் என்பவரே அப்பொறுப்பை ஏற்றுத் திருப்பணி வேலையைத் தனியாக நின்று செய்வித்தார். கோயிலின் வளர்ச்சிக்கு இளைஞரான ஆலய பூசகர் கேதீஸ்வரசர்மாவும் பொதுமக்களுடன் நல்ல முறையில் பழகி உதவியுள்ளார். ஆரம்பத்தில் திருப்பணி வேலைகளில் பெரிதும் பங்கு கொண்ட நான், இன்று லண்டனில் வசிப்பதால் மகாகும்பாபிஷேகத்தைப் பார்க்கும் பேறு எனக்குக் கிடைக்காது. எங்கிருந்தாலும் கலட்டியானின் எண்ணத்துடன் வாழும் நான் அவரின் பெருமை மென்மேலும் சிறக்கப் பிரார்த்திக்கிறேன்.

*சிவஞான....*

1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக எமது ஆலயம் பெரிய சேதத்துக்குள்ளானது. மூலஸ்தானம் முதல் வெளிமண்டபம் வரை எறிகணைத் தாக்குதலுக்குள்ளாகி சேதமடைந்தது. இந்த அழிவுகளை புனர்நிர்மாணம் செய்ய பெருந்தொகைப் பணம் தேவைப்பட்டது. அந்நேரத்தில் இது இயலாத காரியமாக இருந்ததால் சில அத்தியாவசிய திருத்த வேலைகளைப் பூர்த்திசெய்து நித்திய பூசைகளை ஆரம்பித்தோம். வருடந்தோறும் நடைபெற்ற உற்சவங்களை நிறுத்தி திருப்பணி வேலைகளை ஆரம்பித்தோம். மூலஸ்தானத்தில் சில திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டியிருந்ததால் 17.03.2002 ஆம் திகதி பாலஸ்தாபனம் செய்து அடியார்களின் உதவியுடன் துரித கதியில் ஓரளவு திருத்தவேலைகளைப் பூர்த்திசெய்துள்ளோம். முன்பு நடத்திவந்த அலங்கார உற்சவங்களுக்குப் பதிலாக மகோற்சவம் நடத்த வேண்டுமென்பது அடியார் பலரின் விருப்பமும் வேண்டுதலுமாகும். இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு இம் மகாகும்பாபிஷேகம் பூர்த்தியானதும் அடுத்த ஆண்டிலிருந்து மகோற்சவம் நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இவ்வாறான எமது எண்ணங்கள், திட்டங்கள் நிறைவேற எல்லாம் வல்ல சிவஞான விநாயகர் அருள் பாலிக்க வேண்டுமென இறைஞ்சுவதோடு அடியார்களிடம் உங்கள் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றேன்.




### சமுதாய எழுச்சி விழா

வலி.கிழக்கு பிரதேச சபையில் சமுதாய எழுச்சிவிழா இன்று புதன் கிழமை பிற்பகல் 2மணிக்கு சபையின் விசேட ஆணையாளர் க.வெங்கடாசலம் தலைமையில் கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

(ஒ-10-100)


**ஆங்கில மருந்து விற்பனையாளர்கள் தேவை**

அனுபவம் உள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் (ஆண், பெண்) விண்ணப்பிக்கவும்.

**தங்கவேல் மருந்தகம்**
406, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 222 3367
(19733) (24-28-17-19)

**நாகம்ஸ் சுன்னாகம்**
முரளி, தேவயானி, அப்பாஸ்,
ஆனந்தராஜ் நடித்த
காதலுடன் (ரீலீஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு விசேடகாட்சி 7.00 (பி.நே.)
(28-16-18)

**நிர்மலாசனாஸ்**
சத்தியராஜ், ரம்பா, செந்தில், கபால்,
மணிவண்ணன் நடித்த
**மில்ரரி**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
தினசரி இரவு 8.45 இற்கு
THE BOURNE IDENTITY
(C28683) (28-16-18)

**லிபேட்டி** அச்சுவேலி
இன்று முதல்
எம்.ஜி.ஆர்., ராதாசலூஜா நடித்த
**இதயக்கனி** (ரீலீஸ்)
காட்சி நேரம் 3.00, 7.00(பி.நே)
RED DRAGON (ரீலீஸ்)
தினசரி காலை 11.00 மணிக்கு (காட்டிப்படம்)

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு.
K.S.ரவிக்குமாரின்

**பாறை** (ரீலீஸ்)
சரத்குமார், ஜெயராம்,
மீனா, ரம்யாகிருஷ்ணன்
நேரம் 10.30, 2.30, 6.30 (பி.நே.) (28-16-18)


**இணுவில் கொட்டம்பளை ஞானவைரவர் கோயில்
புனராவர்த்தன பிரதிஷ்டா
மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2003**

கும்பாபிஷேக சுபமுகூர்த்தம் ஆனி மாதம் 18ஆம் நாள்(02.07.2003) புதன்கிழமை காலை 6.27 - 7.25இற்குள் வரும் மிதுன லக்கின சுபவேளையில் காக்கும் கடவுள் வைரவப் பெருமானுக்கு கும்பாபிஷேகம் நடைபெறும். அடியவர்கள் அனைவரும் கலந்து வைரவப்பெருமானின் அருளைப் பெற்று உய்வீர்களாக.

நிர்வாகத்தினர்.
S.செல்வநாயகம்.

(C/28704) (28-16-18)

## துயர் பகிர்கின்றோம்



நேற்று (01.07.2003) திடீர்மரணமடைந்த

திருமதி
**புவனேஸ்வரி வீரசிங்கம்(மலர்)**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் எமது குடும்ப நண்பர்களான அவரது கணவர், பிள்ளைகள், சகோதரர்கள், தந்தை மற்றும் உறவுகளின் துயரில் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்

நெல்லியடி.
(C/28699) (26-28-18-16)

அன்ரன் செல்வராசா குடும்பமும்
நீ. யேசுகுமாரும்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி புவனேஸ்வரி வீரசிங்கம் (மலர்)

கரவெட்டி வடக்கு, அந்திராணைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி வீரசிங்கம்(மலர்) நேற்று (01.07.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற தபாலதிபர் வீரகத்தியார் சின்னத்தம்பி வீரசிங்கம அவர்களின் பாசமிகு மனைவியும் திருக்குமார்(அண்ணா - பொறியியலாளர், கொழும்பு), புனிதாலட்சுமி(சித்தவைத்திய கலாநிதி), சபேசன் (மின்இணைப்பாளர்), கேதீஸ்வரன்(கொழும்பு பல்கலைக்கழகம்), பரணீதரன்(கணனி இயக்குநர், IT Park, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இளையதம்பி சத்தியசொரூபன்(தொழில்நுட்பவியலாளர், சுவிஸ்) அவர்களின் அன்பு மாமியாரும் செல்லையா சின்னத்தம்பி, காலஞ்சென்ற திருமதி லட்சுமி சின்னத்தம்பி(இராசம்மா) ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் பிள்ளை, சிற்றம்பலம் மற்றும் கந்தசாமி ஆகியோரின் அன்பு மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.07.03) புதன்கிழமை பிற்பகல் 3.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சோனப்பு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அந்திராண்,*
*கரவெட்டி வடக்கு.* (C/28698) (32-16-18)

தகவல்:
வீ.சி.வீரசிங்கம்
(சமாதான நீதிவான்)

### திருமதி மதனமோகன் ஜெயலட்சுமி (வனிதா)

கரணவாய் தெற்கு, கோணாவளையைச் சேர்ந்த திருமதி மதனமோகன் ஜெயலட்சுமி 29.06.2003 ஞாயிற்றுக்கிழமை ஓமானில் காலமானார்.

அன்னார் மதனமோகன்(Electrical Draughts Man, Oman) அவர்களின் மனைவியும் ஜனனி, கஸ்தூரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் மகேஸ்வரியின் மகளும் செல்வமகாலட்சுமி(பொறுப்பதிகாரி - பிரதேச சபை உடுப்பிட்டி) அவர்களின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான முருகேசு - நாகம்மா தம்பதிகளின் மருமகளும் சிவம்(கணேஸ் - சிதம்பரப்பிள்ளை, புத்தகசாலை நெல்லியடி), மாணிக்கவாசகர்(Senior Cost Consultant - Canada), உதய நாகேஸ்வரி சிவஞானம், அனந்தேஸ்வரன்(அதிபர், கம்பர்மலை அ.த.க.பா.), முரளிதரன்(ஆசிரியர் - சோமாஸ்கந்தா கல்லூரி, புத்தூர்), கௌரிசங்கர்(கனடா), காலஞ்சென்றவர்களான யோகமலர் நாகேந்திரராசா, மண்டலேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் துளசி, காயத்திரி, ஜனகன் ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2003) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மண்டான் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோணாவளை,**
**கரணவாய் தெற்கு, கரவெட்டி.**
T.P: 021-2263592

தகவல்:
சி.சிவம்
**(சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை)**
(19729) (31-28-16-18)

### சின்னப்பு நாகரட்ணம்

சந்திரவளவு, துன்னாலை தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட சின்னப்பு நாகரட்ணம் அவர்கள் 30.06.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் கனகம்மாவின் அன்புக் கணவரும் செல்வகுமார், விஜயகுமார்(சுவிஸ்), உதயகுமார்(நோர்வே), சந்திரகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்திரவளவு,*
*துன்னாலை தெற்கு, கரவெட்டி.* (19735) (28-16-18)

தகவல்:
நா.செல்வகுமார் (மகன்)

### கந்தப்பு பரமானந்தன்

**(ஓய்வுபெற்ற தபாலதிபர்)**

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு பரமானந்தன் 30.06.2003 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் திரிலோகவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்துவேலு - பரிபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும் மணிவண்ணன் (சுவிஸ்), கண்ணதாசன்(பிராந்தியக் கணக்கீட்டு அலுவலகம் யாழ்.), சாந்தி (ஆசிரியை, சேர் வைத்திலிங்கம் துரைசாமி ம.ம.வி.), சாயிநேசன், தனஞ்செயன், கலாமோகன், யோகச்சந்திரன், சத்தியராகவன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ரேணுகா(சுவிஸ்), நந்தகோபாலன்(பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அரவிந்தனின் ஆசைப் பேரனும் மதியாபரணம், கலாநிதி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சித்திவிநாயகன் மற்றும் சிவசண்முகராசா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.07.2003) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

92A, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (19747) (28-16-18)

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரன்.

# பிரபாவை சந்தித்துப் பேசுவதில் அஸ்கிரிய மகாநாயக்கர் ஆர்வம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துக் கலந்துரையாட அஸ்கிரிய பீடாதிபதி வண உடுகம ஸ்ரீ ரத்தினபால புத்தரக் ஹிதாபிதான மகாநாயக்க தேரர் விருப்பம் வெளியிட்டுள்ளார்.

மலையகப் பாடசாலைகளுக்கு நூல்கள் கையளிக்கும் வைபவத்தில கலந்துகொண்ட சமயமே இந்த விருப்பத்தை அவர் வெளியிட்டார் என அமைச்சர் பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

பௌத்த சிங்கள மக்களிடம் செல்வாக்குப் பெற்ற 4பௌத்த பீடங்களில் அஸ்கிரிய பீடமும் ஒன்றாகும். இந்தப்பீடத்தின் மகாநாயக்கரின் கருத்துகள் தென்னிலங்கை அரசியலிலும் தாக்கத்தை ஏற்படுத்த வல்லவை.

இத்தகைய அஸ்கிரிய பீட மகாநாயக்கர் கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றவிருந்தார். ஆனால், இறுதி நேரத்தில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்காததால் மகாநாயக்கரின் விஜயம் ஒத்தி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3-5)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழில் நிலையங்களில் வேலை முடிந்து வீட்டுக்குப் புறப்பட்டவர்கள், அலுவலகங்களில் பணிக்கு வந்தோர், பொருள் வாங்க வந்தோர் எனப் பலரும் சோதனைக்கு உள்ளாகினர்.

தமிழர் செறிந்து வாழும் பகுதிகளில் தொடர்ந்து தேடுதல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-3)


## Pentium II, III, கணினிகள் மலிவு விலையில்

6 மாத உத்தரவாதம் — யாவும் மல்ரிமீடியாவுடன்

| | | | |
|---|---|---|---|
| PII-266 Mhz | PII-350 Mhz | PII-400 Mhz | PIII-500 Mhz |
| Ram 32Mb | Ram 32/64Mb | Ram 64Mb | Ram 128Mb |
| HDD 2.5GB | HDD 3.2GB | HDD 3.2/4GB | HDD 6.4/8GB |
| Rs. 23400.00 | Rs. 24600.00 | Rs. 25450.00 | Rs. 38000.00 |

எவர்றெஸ்ட்
(நந்தா கிரபிக்ஸ்–NG)

96 கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே – 077 7703239


## பார ஊர்தி உரிமையாளர்களுக்கான அறிவித்தல்

பருத்தித்துறை இறங்குதுறையில் சீமெந்து இறக்குவதற்கு கப்பல் தரித்து நிற்பதால் எமது நிறுவனத்திற்கு பொருள்களை ஏற்றி இறக்கும் பார ஊர்திகளை 02.07.2003ஆம் திகதி காலை இறங்குதுறைக்கு கொண்டு செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
ஈஸ்வரபகவான் அன் கம்பனி
இல.91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
ஞா.சோதிநாதன். (19709) (31-28-12-18)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தம்பித்துரை கமலநாதன்
(இயக்குநர், நொதேன் மோட்டர் வேக்ஸ்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 08.12.1949 மறைவு: 15.07.1999

(தி.தி : 02-07-2003)


மிஷன் பாடசாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (19753) (32-28-12-18)

மனைவி, மக்கள்,
பெற்றோர்,
சகோதரர்கள்.


## இந்திய பரம்பரை ஜோதிடர்



அருள்வாக்கு அம்பிகா அம்மா



மீண்டும் யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை. ஜாதகம் பார்க்கப்படும்.
ஒவ்வொரு நாளும் சாத்திரம் சொல்லப்படும்.

உங்களுக்கு எந்தப் பிரச்சினைகள் ஆனாலும் கவலை வேண்டாம்!
உடனே அம்மாவைச் சந்தியுங்கள்; நன்மை அடையுங்கள்.

அம்மாவைச் சந்திக்கும் இடம்:-
அருள்வாக்கு அம்பிகா அம்மா
மடோனா லொட்ஜ்,
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ஸ்ரீமுருகன் ஜுவல்லர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில்.
(19718) (28-12-18)

## தென்னிந்தியாவில் இருந்து

யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு யாழ்ப்பாண மக்களின்



வேண்டுகோளுக்கிணங்கி 2ஆவது முறையாக வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்

ராஜகுருசாமி அவர்கள்

★ கைரேகை ★ ஜாதகம் ★எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்

இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர்.
காலை 9.00மணி முதல் மாலை 6.00மணி வரை

ராஜகுருசாமி T.P. 5867
மிலேனியம் மல்ரி கொம்பிளக்ஸ்
(28-12-18) 60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA. (19626)


## ஆலயக் கிணற்றிலிருந்து மூதாட்டியின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை2

புலோலி தென்மேற்கில் உள்ள ஆலயமொன்றின் கிணற்றிலிருந்து மூதாட்டி ஒருவரின சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு காணாமற போனதாகக் கூறப்படும் தம்பசிட்டி வீதியைச்சேர்ந்த வேலுப்பிள்ளை ஈஸ்வரி (வயது 70) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பதில் நீதிவான் ந.தங்கராசா மரண விசாரணையை மேற்கொண்டார். வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனை அறிக்கையின்படி பொலீஸாரை மேலதிக விசாரணை மேற்கொண்டு எதிர்வரும் 7ஆம திகதியன்று நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் -

சடலத்தை, உயிரிழந்தவரின் மகளிடம் ஒப்படைத்து, பருத்தித்துறை சுப்பர்மடம் மயானத்தில் அடையாளமிட்டு அடக்கம் செய்யுமாறும் -

அவர் உத்தரவிட்டார். (ஒ-9-118)

## நயினை ஆலயத்துக்கு விசேட பஸ் சேவை

யாழ்ப்பாணம்,ஜூலை2

நயினை நாகபூசணி அம்மன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு காலை 5மணிமுதல் இரவு 8மணிவரை குறிகாட்டுவானுக்கான பஸ்சேவைகள் நடத்தப்படவுள்ளன.

இத்தகவலை வடபிராந்திய போககுவரத்துச் சபையின் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

யாழ்.பஸ்நிலையத்திலிருந்து காலை 5மணி முதல் இரவு 8மணி வரை தொடர்ச்சியாக பஸ்கள் போக்கு வரத்தில் ஈடுபடுத்தப்படும் என்றும் -

அதேபோன்று, குறிகாட்டுவானிலிருந்து காலை 7மணி முதல் இரவு 8மணி வரை பஸ்கள் சேவையிலீடுபடுத்தப்படும் என்றும் -

பிராந்திய முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் பின்பற்றப்படும் நடைமுறைகளில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், மேற்படி பஸ் சேவைகளிலும மாற்றமேற்படலாம் என்றும் அவர் கூறினார். (ஒ-9-6)

## சமகால அரசியல் குறித்த கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை2

சமகால அரசியல் தொடர்பான கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3மணிக்கு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் 'உலகமயமாக்கலினால் சிறிய நாடுகள் எதிர்நோக்கும் சவால்கள்' எனும் தலைப்பில் யாழ்பல்கலைக் கழக பொருளியல்துறைத் தலைவர் வி.பி.சிவநாதன் கருத்துரை வழங்கவுள்ளார். (ஒ-10)

## அமெரிக்க...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

வாகனத்தில் புறப்பட்டு ஏ-9 ஊடாக யாழ்ப்பாணம் வர திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது. இதுவரை காலமும் அமெரிக்க அதிகாரிகள் விமானம் மூலமே யாழ்.வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இக்குழு யாழ்ப்பாணத்தில் மூன்று நாள்கள் தங்கியிருந்து அரச அதிபர் மற்றும் பல பிரமுகர்களைச் சந்தித்துக் கலந்துரையாடும் -

அதேவேளை -

கண்ணிவெடி அகற்றும் பணிகளை மதிப்பீடுசெய்ய அமெரிக்காவில் இருந்து கண்ணி அகற்றும் நிபுணர்களான டிபோரா வெட்லண்ட், வில்லியம் ரீட் ஆகியோர் எதிர்வரும் 8ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றனர். (ஒ-3)


சுய தொழில்வாய்ப்பு திட்டம்
ஸ்கிரீன் பிரிண்டிங் பயிற்சி

04.07.2003, ஆரம்பமாகின்றது.
ஆசிரியா திரு.ர.பரதன், D.P.Tech.
(தென்னிந்திய அச்சுக்கலை நிபுணர்)
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

CAREER COM INSTITUTE
இல.79, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
0777 706334,0777 108423
(19459) (28-12-18)

## உடுவில் மகளிர் கல்லூரி

வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவு
UDUVIL GIRLS' COLLEGE
EXTERNAL DEGREE UNIT

யாழ். - போாதனை

G.A.Q., B.A. Part I, B.A.Final, 1st in com., B.com. Part I., B.Com. Part II, B.Com.Final.

விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

விண்ணப்பப்படிவங்கள் பாடசாலை அலுவலகத்தில் பெறலாம்.

விரிவுரைகள் ஆரம்பம் 07.07.2003 பிற்பகல் 3.30 மணி.

வகுப்புகள் யாவும் வார நாள்களில் மாலை நேரத்தில் நடைபெறும்.

மேலதிக விவரங்களுக்கு:
இணைப்பாளர்,
பட்டப்படிப்புகள் பிரிவு,
உடுவில் மகளிர் கல்லூரி.
(28-12-18) Phone No. : 021-222-3300 (C/28546)


# மரண அறிவித்தல்கள்

## இரட்ணசோதி சாந்தினிதேவி (பேபி)

காங்கேசன்துறை, மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் புதுக்குடியிருப்புசந்தையடியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இரட்ணசோதி சாந்தினிதேவி(பேபி) 30.06.2003 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இரட்ணசோதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நமசிவாயம் - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகளும் கோபிநாதனின் அருமைத் தாயாரும் ந.சந்திரசேகரத்தின் அன்புச் சகோதரியும் ச.நளாயினியின்(பிரதி அதிபர், ஒட்டிசுட்டான் மத்திய மகாவித்தியாலயம்) அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2003) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் சுதுமலை மத்தியிலுள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை மத்தி,*
*மானிப்பாய்.* (19751) (28-12-18)

தகவல் :
முருகையா இரட்ணசோத (தவராசா)
(தெல்லிப்பழை கிழக்குவிராங்கொடை)

## மார்க்கண்டு கனகரத்தினம்

(கனகரத்தினம் சாத்திரியார் - கேணியடி, கொக்குவில் மேற்கு)

இணுவில் சிவகாமி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு கேணியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் அவர்கள் நேற்று(01.07.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கண்மணி(பரமேஸ்வரி)யின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சங்கரலிங்கம், சிவராசா(இந்தியா), காலஞ்சென்ற கைலாயன், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலசுப்பிரமணியம் (கொழும்பு), ஜெயபாலு(வவுனியா), சந்திராதேவி, இந்திராதேவி, முருகையா(கிளிநொச்சி), சாரதாதேவி, ஸ்ரீகுமார் (கனடா), சறோஜினிதேவி(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகேஸ்வரி, வரதலட்சுமி, இராசதுரை, சிவபாலு, பிறேமா (கிளிநொச்சி), அமரன், கௌரி(கனடா), சுதாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மதியழகன், அன்பழகன், மகாலட்சுமி, தமிழழகன், ஜெயந்தினி(கனடா), ஜெயசுதா, ஜெயசதா, ஜெயமாலா, ஜெயலட்சுமி, ஜெயராஜ், பிரதீபன், ஜெகதீபன், பார்த்தீபன், ரதீபன், பிருந்தா, ராஜினி, ராஜ்குமார், ரகுமார் (பிரான்ஸ்), ரவிக்குமார், ராஜிகா, ரதீஸ்குமார், சங்கீதா, சர்மிலன், சாருஜன், சாரங்கன், சஞ்சயன்(கனடா), கிரிசாந்(கனடா), விருசிகா(கனடா), மிதுசா(கனடா), விருசன்(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் மதுசா, விதுசா, விதுசன், நிதுசன், கனிதன் (கனடா), கனிசா(கனடா), கஜானன்(கனடா), கீர்த்தன், நிருசிகா, சிவானா, ஜென்சிகா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.07.2003) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2மணிக்கு கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கேணியடி,* (C/28705) (29-28-12-18)
*கொக்குவில்,*
*மேற்கு.*

தகவல்:
க.கண்மணி (பரமேஸ்வரி)
*(மனைவி)*

## பொன்னம்பலம் செல்லம்மா

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் செல்லம்மா 01.07.2003 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் அவர்களின் அன்பு மனைவியும் அஞ்சலிதேவியின் தாயாரும் மகேந்திரன் அவர்களின அன்பு மாமியாரும் சின்னையா, அமரர் கிருஸ்ணபிள்ளை, அமரர் மார்க்கண்டு, சின்னத்துரை ஆகியோரின் சகோதரியும் அன்னலட்சுமி, புஸ்பராணி, லக்சுமி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் நளினா, தேவராஜா, ரூபி, உமாபாலன், சுதனா, சிவா, அனு ஆகியோரின் பேர்த்தியும் சிந்தியா, சஞ்சீவ், சுயேவ், சுவேத்தா, நேத்தா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2003) புதன்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக இருளன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.* (19749) (28-12-18)

தகவல் :
N.மகேந்திரம்(மருமகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.07.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# அஸ்ரா வெற்றிக் கிண்ண கிரிக்கெட்டில் யாழ். மத்திய கல்லூரி வீரர் இருவர் சதம்

யாழ்ப்பாணம்,ஜுலை2

14 வயதிற்குட்பட்டோருக்கான அஸ்ரா வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரி வீரர்கள் இருவர் சதம் அடித்துள்ளனர்.

அஸ்ரா வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டி நேற்றுமுன் தினம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

யாழ். மத்திய கல்லூரி மற்றும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிகளுக்கிடையே ஆட்டம் இடம்பெற்றது.

முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 4 விக்கெட் இழப்பிற்கு 279 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

இதில் ஒரு சந்தர்ப்பத்தில் யாழ். மத்திய கல்லூரி 4 விக்கெட் இழப்பிற்கு 31ஓட்டங்களைப் பெற்று இக்கட்டான சூழ்நிலையில் இருந்தது. அப்போது ஜோடி சேர்ந்த எஸ். செல்ரன், ரீ.டயான் ஆகிய இருவரும் அபாரமாகத் துடுப்பெடுத்தாடி இறுதிவரை ஆட்டமிழக்காமல் இணைப்பாட்டமாக 248 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

இதில் இருவரும் தலா ஒரு சதங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இதேவேளை - கனகரத்தினம் மகா வித்தியாலயத்திற்கு எதிரான ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணித் தலைவர் ஆர்.டானியல் சதம் பெற்றார். (ஓ-5)



15 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான மாகாண மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி அணி முதலிடத்தைப் பெற்றுள்ளது. வெற்றிபெற்ற அணியுடன் உடுவில் மகளிர் கல்லூரி அதிபர், பொறுப்பாசிரியர் மற்றும் அணியின் பயிற்றுவிப்பாளர் ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

# தேசிய விளையாட்டுப் போட்டியில் தாச்சியையும் இணைக்கக் கோரிக்கை

வலி.வடக்கு,ஜுலை2

யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள சமாதான விளையாட்டுப் போட்டி மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டி என்பவற்றில் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான தாச்சி விளையாட்டையும் இடம்பெறச் செய்ய வேண்டும் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ விடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட தாச்சிச்சங்கம் இக் கோரிக்கையை விடுத்துள்ளது. இது தொடர்பான மகஜர் ஒன்றையும் அது விளையாட்டுத்துறை அமைச்சருக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்துள்ளது.

இம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தில் தற்பொழுது 48கழகங்கள் அங்கத்துவம் வகிக்கின்றன. வருடத்தில் எட்டுக்கு மேற்பட்ட கழகங்கள் தாச்சி சுற்றுப்போட்டியை நடத்துவதுடன் பெறுமதிமிக்க பரிசில்களையும் வழங்கிவருகின்றன.

எல்லே, சடுகுடு, கபடி என்ற பல வேறு விளையாட்டுக்களும் இன்று தேசிய மாவட்ட மட்டங்களில் நடைபெறுவதற்கு வேண்டிய ஒழுங்குகள், ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆனால், தமிழரின் பாரம்பரிய விளையாட்டான தாச்சி விளையாட்டின் வளர்ச்சிக்கு எந்த வகையான உதவிகளையோ அன்றி போட்டிகளையோ அரசாங்கம் செய்வதில்லை.

இவ்விளையாட்டை மாவட்ட, மாகாணமட்டப் போட்டிகளில் நடத்த நடவடிக்கையெடுப்பதுடன் தேசிய மட்டத்தில் நடத்தவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்போட்டிகளுக்கான மத்தியஸ்தர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் ஏற்கனவே கடமையாற்றி வருகின்றார்கள்.

தாச்சி விளையாட்டு இடம்பெறவேண்டிய ஒழுங்குகளை மேற்கொள்ளவேண்டுமென யாழ். மாவட்ட தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராஜா, நடராஜா, அ. விநாயகமூர்த்தி, பொ.கஜேந்திரகுமார், க.சிவாஜிலிங்கம் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஆகியோரும் கேட்கப்பட்டுள்ளனர் - என்றுள்ளது. (ம-86)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜுலை2

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் கரும்புலிகள் ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★பிற்பகல் 2.30 மணி - கணேசானந்தா வி.க. எதிர் குடத்தனை செல்வா வி.க.

★பிற்பகல் 3.30 மணி - சென்ரீற்றா வி.க. எதிர் தாளையடி சென் அன்ரனிஸ் வி.க. (ம-5)

## கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜுலை2

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கிடையில் நடத்தப்படும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

★பிற்பகல் 3.00 மணி - நீர்வேலி ஸ்ரீ விநாயகர் சனசமூக நிலைய அணி எதிர் ஆவரங்கால் நவோதயா ச.ச. நிலைய அணி.

★பிற்பகல் 4 மணி - புத்தூர் கலைமதி ச.ச. நிலைய அணி எதிர் கோப்பாய் ஸ்ரீமுருகன் ச.ச.நிலைய அணி. (ம-5)

## கூடைப்பந்தாட்ட இறுதியாட்டம்

யாழ்ப்பாணம்,ஜுலை2

யாழ்.செல்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் பல்கலைக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (ம-8)

# உள்ளூராட்சி வாரத்தையொட்டி நெடுந்தீவில் நீச்சல் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜுலை2

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நெடுந்தீவு பிரதேசசபை நீச்சல் போட்டிகளையும், குதிரை வண்டிச் சவாரிகளையும் நடத்தவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் சனசமூகரீதியாகத் திரட்டப்பட்டு வருகின்றது.

முதற்கட்டமாக நீச்சல் மற்றும் குதிரை வண்டி சவாரி போட்டிகள் எதிர்வரும் 10ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாக நெடுந்தீவு பிரதேச சபை சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி அலுவலர் வி.கந்தசாமி தெரிவித்தார்.

தொடர்ந்து கிராமிய கலையை வளர்க்கும் நோக்குடன் நாட்டுக்கூத்து போட்டியும் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-185)

# கிளிநொச்சி, முல்லைத்தீவு மைதான அபிவிருத்திக்கு இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நிதியுதவி

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் விளையாட்டு மைதான புனரமைப்புக்காக இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நிதி யுதவி வழங்கியுள்ளது.

சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ('பீ.'பா) அபிவிருத்தித் திட்ட நிதியிலிருந்து 1,50,000 ரூபா வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக 50,000ரூபா தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் அ.இன்பனிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன உப தலைவரும், சம்மேளனத்தின் வடக்கு-கிழக்கு இணைப்பாளருமான ஜே.எஸ்.என்.ஆனந்தராஜா இன்பனிடம் காசோலையைக் கையளித்தார்.

இலங்கை உதைபந்தாட்டச் சம்

**விளையாட்டு**

மேளனத்தின் தலைமையகத்தில் இவ்வைபவம் இடம்பெற்றது.

'பீ.'பா அபிவிருத்தி உத்தியோகத்தரும் ஆசிய உதைபந்தாட்டச் சங்க உபதலைவருமான மணிலால் பெர்னாண்டோ இந்நிதியுதவிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

இந்நிதியுதவியின் எஞ்சிய தொகை பகுதி பகுதியாகக் கையளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

மேஜர் முரளி ஞாபகார்த்தமாக தமிழீழ விளையாட்டுத்துறை நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 5 நாள்களுக்கு கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள 8 மாவட்டங்களையும் சேர்ந்த 13,15,17,19 வயதுக்குட்பட்ட அணிகள் இப்போட்டியில் பங்குபற்றவுள்ளன.

- இலங்கையிலிருந்து சுவிட்ஸர்லாந்துக்குப் புலம்பெயர்ந்தோரின் பிள்ளைகளைக் கொண்ட அணியொன்றும் இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ளமை சிறப்பம்சமாகும். (ம-5)

## சிநேகபூர்வ உதைபந்தாட்டம்:

# ஸ்கந்தவரோதய அணியை பம்பலப்பிட்டி இந்து வென்றது

யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரியுடனான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

நேற்று முன்தினம் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது. ரி.ராஜ் நிரோஷன் இந்துக்கல்லூரிக்கான வெற்றி கோலை அடித்தார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் நலன்புரிச் சங்கம் இப்போட்டிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு மாநகர பிரதி மேயர் ஆஸாத் எஸ்.சாலி பிரதம அதிதியாகவும் எஸ்.டி.எஸ்.அருளானந்தன் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டனர்.

# வானுக்குப் பின் வெடிவைத்தது தெரியும்; வெடி வைத்தவர்கள் யார் என்று தெரியாது!

## உடதலவின்ன படுகொலை வழக்கில் சாட்சி தெரிவிப்பு

மதீனா பள்ளிக்கு அருகில் நின்ற வெள்ளை வானில் நான் ஏறினேன். ஆனால், அதில் ஆயுதங்கள் இருக்கவில்லை. அது பற்றி எனக்குத் தெரியாது.

உடதலவின்ன படுகொலைகள் வழக்கில் நேற்றுமுன்தினம் சாட்சியாளித்த முகம்மட் சஜித், எதிர்த்தரப்புச் சட்டத்தரணி அனில் சில்வாவின் கேள்வியொன்றுக்குப் பதில் அளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விசாரணையின்போது மேற்குறிப்பிட்ட சாட்சி சாட்சியாளிக்கையில், எதிரிகள் சட்டத்தரணிகள் தவிர்ந்த ஏனையோர் அனைவரும் நீதிமன்றத்திலிருந்து வெளியே அனுப்பப்பட்டனர். இரண்டு தடவைகள் வெளியே அனுப்பப்பட்ட இவர்கள், சிறிது நேரத்தின் பின் உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

சாட்சியை எதிர்த்தரப்புச் சட்டத்தரணி அனில் சில்வா குறுக்கு விசாரணைசெய்தார்.

*கேள்வி:-* வெள்ளை வானில் இருந்தவர்கள் ரவூப் ஹக்கீமின் ஆதரவாளர்கள் என்று உமக்குத் தெரியுமா?

*பதில்:-* எனக்கொன்றும் தெரியாது.

*கேள்வி:-* ரவூப் ஹக்கீமின் படம் வானில் ஒட்டப்பட்டிருந்ததா?

*பதில்:-* எனக்குத் தெரியாது.

*கேள்வி:-* நீர் உண்மையைத்தான் சொல்கிறீரா?

*பதில்:-* உண்மையைத்தான் நான் சொல்கிறேன்; சொன்னேன்.

*கேள்வி:-* எங்கே உண்மையைச் சொன்னீர்?

*பதில்:-* நான் கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது சி.ஐ.டி. பொலிஸாருக்கு வாக்குமூலம் கொடுத்தேன். நடந்த சம்பவங்கள் குறித்து அப்போதும் உண்மையைச் சொன்னேன்.

*கேள்வி:-* அங்கே உம்மைப் பற்றிய முழுவிவரமும் கூறினீரா?

*பதில்:-* ஆம்.

பிரதி சொலிஸிட்டர் ஜெனரல், பாலிதபெர்னாண்டோ சாட்சியைக் குறுக்கு விசாரணைசெய்தார்.

*கேள்வி:-* நீர் பயணம் செய்த வெள்ளை வானுக்குக் கும்பல் ஒன்று வெடிவைத்ததாகக் கூறினீர் அல்லவா?

*பதில்:-* ஆம்.

*கேள்வி:-* வெடிவைத்தவர்களை நீர் கண்டீரா?

*பதில்:-* இல்லை.

*கேள்வி:-* வானுக்கு வெடிவைத்ததாகக் கூறுகிறீர், அவர்கள் யாரென்று தெரியாதா?

*பதில்:-* வானின் பின்புறம் வெடிச் சத்தம் கேட்டது. அதனால் யாரென்று தெரியவில்லை.

விசாரணை இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டது.

# பொதுமக்களுக்கும் போராளிகளுக்கும் சட்டம் எப்போதும் ஒன்றுதான்

## கிளிநொச்சி மாவட்ட நீதியரசர் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜுலை2

சட்டம் என்பது எப்போதும் பொது மக்களுக்கும் போராளிகளுக்கும் ஒன்றுதான். அதில் எந்த மாற்றத்துக்கும் இடமில்லை.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் கிளிநொச்சி மாவட்ட நீதியரசர் செந்தூர்.

அண்மைக்காலமாக வீதிகளில் ஏற்படும் விபத்துகள் தொடர்பாக கருத்துக் கேட்டபொழுதே நீதியரசர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வாகனங்களை ஓட்டுகின்ற போது போக்குவரத்து விதிகளை சாரதிகள் ஒழுங்காகக் கடைப்பிடிப்பதில்லை. வாகனங்களை அவர்கள் அதிவேகமாக ஓட்டிச் செல்வதால் விபத்துகள் ஏற்படுவதைத் தடுக்க முடியாமல் உள்ளது.

போக்குவரத்து விதிகளை கடைப்பிடிக்குமாறு பல தடவைகள் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டபோதும் பலர் அவற்றைக் கவனத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இதில் யாருக்கும் போராளிகள், பொது மக்கள் என்ற பாரபட்சம் காட்டப்படமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

நீதிமன்றுக்கு முன்பாக உள்ள பிரதான வீதியால் செல்கின்ற வாகனங்கள் ஹோர்ன் ஒலி எழுப்புவதால் நீதிமன்ற நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாகவும் இதுவிடயத்தில் வாகன ஓட்டுநர்கள் விதிமுறையைக் கடைப்பிடிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ம-10-ரி)

# மாவைக் கந்தன் ஆலய சூழலில் இன்று காலை சிரமதானம்

யாழ்ப்பாணம்,ஜுலை2

எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் மாவைக் கந்தன் ஆலய உற்சவத்தையொட்டி இன்று புதன் கிழமை ஆலய சூழலில் பெரிய அளவில் சிரமதானம் இடம்பெறவுள்ளது.

1990ஆம் ஆண்டு இப்பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்த பின்னர், சேதமடைந்த நிலையிலும் பாரிய மரங்கள் நிறைந்த நிலையிலும் காட்சி தரும் ஆலயச் சூழலில் இந்தச் சிரமதானப் பணியை வலி.வடக்கு சனசமூக நிலையங்களின் சமாச உறுப்பினர்களும், சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளும் மேற்கொள்ளவிருக்கின்றனர்.

இந்த சிரமதானப்பணியில் ஈடுபட விரும்புபவர்களை இன்று மாலை அங்கு செல்ல படைத்தரப்பு அனுமதி வழங்கியுள்ளது. இந்தப் பணியில் ஈடுபடவிருப்பவர்களை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை உப - அலுவலகத்திற்கு வருகை தரும்படியும் சன சமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஜனவேல்ராசா கேட்டுள்ளார்.

கடந்த 12 வருடங்களின் பின் இச்சிரமதானப்பணி இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடற்றவன்

"வீடற்றவன்" நாவலின் விளக்கமும் விமர்சனமும் O/L பரீட்சையில் விருப்பப் பாடமான தமிழ் இலகியத்திற்குரிய பாடப்புத்தகம். எல்லா வகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. ரூபா 25.00. (19676)

### விற்பனைக்கு

முசந்தாஸ் (சிவப்பு, வெள்ளை) றெசினா, மஞ்சள் கொடிப்பூ, ஸ்பொஞ் பிளவர், மினி எக்ஸ்சோறா (வெள்ளை, மஞ்சள்), ஜெற்றோவா, ஈரப்பலா, Y.T.T., போகன்விலா ஆகிய கன்றுகள் விற்பனைக்குண்டு. 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (U.N.D.P. இற்கு அண்மையில்) (19643)

### காணி விற்பனைக்கு

யாழ்.மத்திய கல்லூரிக்கும் யா/வேம்படி மகளிர் கல்லூரிக்கும் இடையில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: V.சண்முகராஜா, 222, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (19689)

### வீடு விற்பனைக்கு

புளியங்கூடல் மாரியம்மன் கோயில் முன் ஒழுங்கை 1/2 கிலோ மீற்றர் தூரத்திலும் வேலணை மத்திய கல்லூரியிலிருந்து 3/4 கிலோ மீற்றர் தூரத்திலும் 10 பரப்புக் காணி கொண்ட கல்வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 077 600 7833. (19708)

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணத்தை அண்டிய பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு பகுதியாக வாடகைக்குண்டு. தொடர்பு: வி.சண்முகராஜா, 222 செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (19690)

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ஜேர்மனியில் வதியும் ஸ்பொன்சரில் அழைக்கும் தகைமையுடைய 27வயது, உயரம் 5'6", விசாகம் முதலாம் பாதம் மகனுக்கு மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகம் குடும்ப விபரங்களுடன் தொடர்பு: விளம்பர இல.1937, மேற்பார் உதயன். (19694)

### திருமண சேவை

1970ஆம் ஆண்டு, பாவக்கிரகம் அற்ற, கேட்டை நட்சத்திரம், பிரான்ஸ நாட்டில் நிரந்தர குடியுரிமையுடன் தொழில் செய்யும் இங்கு வந்துள்ள மணமகனிற்கு படித்த, அழகான பெண் தேவை. தொடர்புகொள்ளவும்: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (19720)

## அரியாலையில் ஒரே இரவில் இரு திருட்டுகள்

அரியாலை, இலந்தைக்குளம் வீதியில் நேற்றுமுன்தினம் இரவு சுமார் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட நகைகள், பணம், உடுபுடைவைகள் என்பன திருடப்பட்டுள்ளன.

இலந்தைக்குளம் வீதியில் உள்ள சங்கீத ஆசிரியை ஒருவரின் வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் எட்டு பவுண்களுக்கு மேற்பட்ட நகைகள் மற்றும் பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளதுடன், பெறுமதியான சேலைகள், உடுப்புகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

இதே வீதியில் உள்ள ராஜேந்திரன் என்பவரின் வீட்டினுள் புகுந்த திருடர்கள் பிள்ளையின் காப்பு 1சோடி மற்றும் சுமார் 15ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் உரியவர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-86)

## நஷ்டத்தில் இயங்கும் காரைநகர் கூ.சங்கம்

காரைநகர் ப.நோ.கூட்டுறவுச் சங்கம் கடந்த பல வருடங்களாகப் பெரும நஷ்டத்தில் இயங்கி வருவதாக சங்கத்தின் தொழிற்சங்கத் தலைவர் க.ஆ.சோமசுந்தரம் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகச் சங்கத்தில் பணியாற்றும் ஊழியர்களின் சம்பள உயர்வு மற்றும் இடாகாலக் கொடுப்பனவு, ஆகியவற்றை வழங்க முடியாத நிலை சங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

இது விடயத்தில் சங்க நிர்வாகமும் கூட்டுறவுத் திணைக்களமும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஊழியர்கள் எதிர்பார்க்கின்றார்கள். (ம-10-29)

## கேள்வி அறிவித்தல்

### கட்டடங்கள் திணைக்களம்

1. யாழ்ப்பாண பொது நூலகத்திற்கு 8 நபர் செல்லும் லிப்ட் வழங்கி பொருத்தி இணைப்பதற்கு 2003-07-17ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கட்டடங்கள் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரினால் பொறியிடப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.
2. கீழே பந்தி 8இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியிலுள்ள பிரதம பொறியியலாளர் அலுவலகத்திலிருந்து 2003-07-11 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமான ரூபா (1000/-) ஆயிரம் மட்டும் செலுத்தி கேள்விப்பத்திரங்களைக் கொள்வனவு செய்யலாம்.
3. கேள்விகள் மூடப்பட்டவுடன் பத்தரமுல்லை, செத்சிறிபாய இரண்டாவது மாடியில் கட்டடங்கள் திணைக்கள ஒப்பந்தங்கள் கிளையில் திறக்கப்படும். அவ்வமயம் கேள்விதாரர் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
4. லிப்ட்கள் வழங்கிப் பொருத்துவதற்கு செல்லுபடியாகும் வியாபாரப் பதிவுச் சான்றிதழைப் பெற்ற மற்றும் லிப்ட்கள் வழங்கிப் பொருத்துவதற்கு அங்கீகாரம்பெற்ற முகவர்களாக 10 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் செயற்படுகின்ற அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மட்டும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். கேள்விப்பத்திரங்களைக் கொள்வனவு செய்யமுன்னர் ஆவணச்சான்றொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. பொறியிடப்பட்ட கேள்விகள் பதிவுத் தபால்மூலம் அல்லது நேரில் வந்து கேள்வி மூடப்படும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு *தலைவர், கேள்விச்சபை, கட்டடங்கள் திணைக்களம், செத்சிறிபாய ஸ்ரீஜயவர்த்தனபுர கோட்டே, பத்தரமுல்ல* என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
6. தாமதித்துக் கிடைக்கப்பெறும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என கேள்விதாரர் அறிவுறுத்தப்படுகின்றனர். அத்துடன், பாதுகாப்புச் சோதனை நிமித்தம் குறைந்த பட்சம் ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் "செத்சிறிபாய" வளவை வந்தடைய வேண்டும்.
7. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம். மேலதிக விவரங்கள் *கொழும்பு - 7 டொரிங்டன் அவனியூ, இல.213, கட்டடங்கள் திணைக்களம், பிரதம பொறியியலாளர் (கொழும்பு நிர்மாணம்)* இடமிருந்து *அல்லது யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளரிடம் (யாழ்ப்பாணம்)* பெற்றுக்கொள்ளலாம்.
8. கேள்வி ஆவணங்கள் கொள்வனவு செய்வதற்கான பிரதம பொறியியலாளர் அலுவலகங்களின் முகவரிகள்:

1. பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்)
   கட்டடங்கள் திணைக்களம்,
   கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி: 021 222 2781
2. பிரதம பொறியியலாளர் (கொழும்பு நிர்மாணம்
   கட்டடங்கள் திணைக்களம்,
   இல. 223, டொரிங்டன் அவனியூ, கொழும்பு - 07).
   தொலைபேசி: 55469

ஏ.டி.விக்கிரமசிங்க
கட்டடங்கள் பணிப்பாளர்,
கட்டடங்கள் திணைக்களம்,
"செத்சிறிபாய"
ஜயவர்த்தனபுர கோட்டே, பத்தரமுல்ல.
(சி-28677) (19-14-17)

## நீங்கா நினைவில் 31ஆம் நாளும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 14 - 04 - 1941



மறைவு 02 - 06 - 2003

### அமரர் தம்பு நாகராசா

02-06-2003 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கு தம்பு நாகராசா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று 02-07-2003 எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புள்ளங்களுக்கு தனித்தனியாக அழைப்பிதழ்கள் வழங்கினோமாயினும் எமது சிந்தனையில் உடனுதிக்காத அன்புள்ளங்களையும் இத்தால் அழைப்பதில் மனநிறைவு கொள்கின்றோம்.

கைதடி தெற்கு,
கைதடி. - குடும்பத்தினர்.
(19722)(21-14-17)

## சைவசமய அறிவுப் போட்டிப் பரீட்சை- 2003

எமது சபையால் நடத்தப்படும் மேற்படி பரீட்சையானது 05.07.2003 சனிக்கிழமை காலை 9.30 (மு.நே.) மணிக்கு ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகின்றோம்.

இணுவில் கந்தசுவாமி கோயில்
இளந்தொண்டர் சபை,
இணுவில்.
(19706) (14-17)

## ஊழியனும் அவனின் ஊழியமும்

உலகப் பிரசித்திபெற்ற கிறிஸ்தவ எழுத்தாளரும் பிரசங்கியாருமான
சகோ.சாம் ஜெபதுரை யாழ்.வருகை.
விசேசித்த கருத்தரங்கு
போதகர்/ஜெபகுழு தலைவர்/தலைமைத்துவத்தில் சேவை புரிவோர்
*திகதி:* 3,4,5 ஆடி 2003
*நேரம்:* காலை 9.00 மணிமுதல் 1.30 மணிவரை.
*இடம்:* அசெம்பிளி ஒவ் கோட், மானிப்பாய்.
நாளை முதல்
நற்செய்தி பெருவிழா இதே ஆலயத்தில் மாலை 4.00 மணிக்கு நடைபெறும்.
வியாதியா? பிரச்சினையா? பிசாசின் பிடியா? சமாதானமில்லையா?
இயேசு இன்று ஆன்மீக விடுதலை தருகிறார்.
பிரவேசம்: இலவசம்
(19363) மேலும் தொடர்புகளுக்கு: ☎ 222 3204
(26-21-14-17)

## இணுவில் வைத்தியசாலைக்குச் சொந்தமான கடைகளும் காணியும் விற்பனை

இணுவில் மக்லியொட் வைத்தியசாலைக்குச் சொந்தமான இரு கடைகளும், 4 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு.

இவை இணுவில் வைத்தியசாலைக்கு முன்பாக இருக்கும் சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் நடத்தப்படும் இரு கடைகளும், அதற்குப் பின்புறமாக உள்ள 4 பரப்புக் காணியுமாகும்.

கடைக்குப் புறம்பாகவும், காணிக்குப் புறம்பாகவும் விலைகள் மதிப்பிட்டு, பதிவுத் தபால் மூலம் 15-07-2003 ஆம் திகதிக்கு முன்னதாக "சொத்துப் பராமரிப்பாளர் (PROPERTY OFFICER), ஆதீன காரியாலயம், தென் இந்திய திருச்சபை, வட்டுக்கோட்டை" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொத்துப் பராமரிப்பாளர்,
ஆதீன காரியாலயம்,
தென் இந்திய திருச்சபை,
வட்டுக்கோட்டை.
(C/28625) (14-17)

## மூன்றாம் வருட நினைவஞ்சலி



திருமதி
செல்லம்மா வினாசித்தம்பி

பிறப்பு 25-06-1938 — இறப்பு 04-07-2000

திதி: 02-07-2003

என்றும் உங்கள் நினைவாக வாழும்:

"தாயகம்" – குடும்பத்தினர்.
புளை.
(19450) (14-17)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 - 11 - 1926



மறைவு 12 - 07 - 2002

### பொன்னம்பலம் சுப்பிரமணியம்

*(ஓய்வுபெற்ற விற்பனைத் திணைக்கள முகாமையாளர்)*

திதி: 02.07.2003

எனதருமை அன்புத் தெய்வமே!
எங்கள் அன்பு அப்பாவே!
எமதினிய மாமாவே!
எங்களைக் காத்த நின்ற தாத்தாவே!
நீங்கள் சென்று ஓராண்டானாலும்
எங்கள் உள்ளத்திலிருந்தும்
நீங்கள் அகலவில்லையே!
எத்தனை காலம் சென்றாலும்
உங்களை நாம் மறவோம்!
ஓம் சாந்தி !

*தோமனை வீதி,*
*உடுவில் கிழக்கு, சுன்னாகம்.*

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(19619) (14-17)

# புதிய வரவு – செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு, தொழில் வாய்ப்புகள்

கொழும்பு,ஜுலை2

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கும் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வரவு-செலவுத் திட்டமாக 2004ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டம் அமைந்திருக்கும் என்று கிராமிய பொருளாதார அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான பந்துல குணவர்த்தன நேற்றுத் தெரிவித்தார்.

செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் அமைச்சர் பதிலளித்தார்.

அரசாங்க ஊழியர்களுக்கு 50 சதவீத சம்பள அதிகரிப்பு வழங்கும்படி ஜனாதிபதி கேட்டுள்ளார். இதை நடைமுறைப்படுத்துவீர்களா? என்று கேட்டபோது, எந்தவொரு நாட்டிலும் வெளிநாடுகளிலிருந்து பெற்ற நிதியுதவி மூலம் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கியதாகச் சரித்திரம் இல்லை. எவ்வாறாயினும், நவம்பர் வரவு-செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவோம் - என்று அமைச்சர் பதிலளித்தார்.

# நவாலியில் டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கைகள்

வலி.தெற்கு,ஜுலை2

டெங்கு காய்ச்சல் நவாலி பகுதியில் பரவி வருவதைக் கட்டுப்படுத்த அப்பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகரும், சுகாதாரப் பகுதியினரும் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக அவர்கள் டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய முறையில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

டெங்குநோய் பரவுவதற்கான காரணங்கள், அவற்றை பரவாது கட்டுப்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் என்பவற்றை விளக்கும் வீடியோ படக்காட்சிகள், கருத்தரங்குகள் என்பனவற்றை நடத்தி வருவதுடன் துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்து வருகின்றனர்.

நவாலியிலுள்ள முருகானந்தா சனசமூக நிலையத்தில் அண்மையில் டெங்குநோய் பற்றிய கருத்தரங்கு சுகாதாரப் பரிசோதகரால் நடத்தப்பட்டதுடன் வீடியோ படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது. (ம-152)

# ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை நீக்குவதற்கு புதிதாகத் திட்டம்

## தெல்லிப்பழை கோட்ட அதிபர் சங்கம் நடவடிக்கை

வலிகாமம் தெற்கு,ஜுலை2

பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையைப் போக்கவும், படித்துவிட்டு தொழில் வாய்ப்பின்றி இருக்கும் மாணவர்களின் ஆங்கில அறிவின் தரத்தினை மேம்படுத்தவும் தெல்லிப்பழை கோட்ட அதிபர்கள் சங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது.

இக்குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் விசேட வகுப்புகளை நடத்தி அவர்களுக்குப் பயிற்சியளிக்கவும் சங்கம் திட்டமொன்றினை வகுத்துள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்று இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்திபெற்று ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருப்பவர்களே இப்பயிற்சிக்கென சேர்த்துக்கொள்ளப்பட உள்ளனர்.

இப்பயிற்சிகளில் முழுமையாகக் கலந்துகொண்டு ஆங்கில அறிவின் தரத்தை உயர்த்திக்கொள்ளும் மாணவர்களை பாடசாலைகளில் நிலவும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இணைத்துக்கொள்ள வாய்ப்புக்கள் உள்ளதாகவும் தெரிய வருகின்றது. (ம-152)

# மந்திகை ஆஸ்பத்திரியில் மீண்டும் சத்திர சிகிச்சைகள்

## உலக சுகாதார நிறுவனத்தால் நிபுணர் நியமனம்

வடமராட்சி,ஜுலை2

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் உலக சுகாதார நிறுவனத்தின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் சத்திர சிகிச்சைப் பிரிவு இயங்க ஆரம்பித்துள்ளது.

முன்னர் பிரான்ஸ் வைத்தியக் குழுவில் இணைந்து பணியாற்றிய டாக்டர் திருமதி வெறனிக்கா தற்போது சத்திர சிகிச்சை வைத்திய அதிகாரியாக உலக சுகாதார நிறுவனத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதி திங்கட்கிழமை தோறும் சத்திர சிகிச்சைக்கான கிளினிக்குகளும், ஏனைய தினங்களில் சத்திர சிகிச்சைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மந்திகை வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்கான மயக்க மருந்து நிபுணர் ஒருவர் இதுவரை சுகாதாரத் திணைக்களத்தினால் நியமிக்கப்படாததனால் டாக்டர் வெறனிக்காவே மயக்கமருந்து வழங்கி சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டு வருகிறார்.

நிரந்தரமாக மயக்கமருந்து நிபுணர் ஒருவர் விரைவாக நியமிக்கப்பட்டால் சத்திர சிகிச்சைப்பணிகள் துரிதமடையும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-173)

# குடாநாட்டு நிலையை விவரிக்கும் வீடியோ விவரணப்படம் தயாரிப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை2

குடாநாட்டின் தற்போதைய நிலையைத் துல்லியமாக எடுத்துக்காட்டும் வகையிலான வீடியோ விவரணப்படம் யாழ். செயலகத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

மக்கள் மீள்குடியமர அனுமதிக்காத பகுதிகளையும், பாதுகாப்பு வலயங்கள் அமைந்துள்ள பகுதிகளையும், பொதுமக்கள் விவசாயம், கடற்றொழில் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படாத பகுதிகளையும் சுட்டிக்காட்டுவதாக இந்த விவரணப்படம் அமைந்துள்ளது.

மக்களின் தேவைகள் குறித்தும் இந்த விவரணப்படத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்படவேண்டிய பகுதிகள் படத்தில் நேரடியாகக் காட்டப்பட்டுள்ளன. அரச அதிபர் செ.பத்மநாதன் பேட்டி அளிக்கும் காட்சியும் அதில் உள்ளது.

குடாநாட்டின் தற்போதைய நிலையைத் துல்லியமாக ஒருவர் அறியக் கூடிய வகையில் இந்த விவரணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் இருந்துவரும் அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், வெளிநாட்டுத் தூதர்கள் குடாநாட்டின் நிலையை விரைவில் அறிய இந்த விவரணப்படம் உதவும்.

இந்த விவரணப்படம் நேற்று பிரதமர் அலுவலகத்தில் அலுவலக அதிகாரிகளுக்கு போட்டுக் காண்பிக்கப்பட்டது. (ம-3)

# குப்பையை எரித்தபோது வெடிபொருள் வெடித்தது!

குருநகர்,ஜுலை2

குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் கடந்த ஞாயிறன்று மாலை குப்பையைக் கொளுத்தியபோது பெரும் சத்தத்துடன் வெடிபொருள் ஒன்று வெடித்தது. இதனால் சிறிது நேரம் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டு மைதானத்தின் வடமேற்கு மூலையில் கிடந்த குப்பையைக் கூட்டி மக்கள் சிலர் கொளுத்தியபோதே அதனுள் கிடந்த வெடிபொருள் திடீரென பெரும் சத்தத்துடன் வெடித்தது.

இவ்விடத்துக்கு அண்மையில் கடற்கரை வீதியில் படையினரின் சோதனைச் சாவடி அமைந்துள்ளது. மக்கள் பதற்றமடைந்தபோதிலும் படையினர் எதுவித பதற்றமும் அடையவில்லை.

இச்சத்தத்தை கேட்டு குருநகர் கடற்கரை இறங்குதுறையில் இருந்த இராணுவத்தினர் சிலர் துப்பாக்கிகள் சகிதம் இவ்விடத்தை நோக்கி ஓடிவந்தனர். இவ்வெடியால் எதுவித சேதமோ உயிரிழப்போ ஏற்படவில்லை. (ம-51)

# இடம்பெயர்ந்தோர் பிரச்சினையை அரசு மனிதாபிமானத்துடன் நோக்க வேண்டும்

## கியூடெக் இயக்குநர் உரை

யாழ்ப்பாணம்,ஜுலை2

இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் விடயத்தை அரசாங்கமும் அரச படைகளும் மனிதாபிமானத்துடன் நோக்கவேண்டும். அது அரசியல் விவகாரமல்ல மக்களின் அன்றாடத் தேவை.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணம் கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்திரு. சி.ஜி.ஜெயக்குமார் அடிகளார். கடந்த சனிக்கிழமை யாழ். வரசிங்கம் மண்டபத்தில் நடந்த சமாதானம் குறித்த செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

பௌத்த பிக்குகள் பலரும் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் ஜெயக்குமார் அடிகளார் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எமது மக்கள் பலர் நீண்டகாலமாக அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பல தடவைகள் இடம் விட்டு இடம் மாறி மந்தைகளாக அலையும் அவலமும் இங்கு நடந்துகொண்டிருக்கிறது.

அகதி முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுக்கிறார்கள்.

சில முகாம்களில் தினமும் காலை வேளைகளில் இயற்கைக் கடன் கழிப்பதற்காக மலசலகூட வாசல்களில் கியூவில் நிற்கின்ற அவலங்கூட இங்குள்ளது.

உணவுப் பொருள்களுக்காக வரிசையில் நிற்பது என்பது புதிய விடயமல்ல. எனினும், மலசலகூட வாசலில் வரிசையில் நிற்கின்ற அவலம் உலகிலே இங்குதான் நடக்கின்றது என்று கூறலாம்.

இதனை மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் அணுகவேண்டும். மீளக்குடியமரும் மக்களுக்கு வீடுகளை அமைப்பதற்கு அரசாங்கத்தினால் குடும்பம் ஒன்றுக்கு தலா 15ஆயிரம், 25ஆயிரம் ரூபா என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தத் தொகை வீடு கட்டுவதற்கோ அல்லது புனரமைப்பதற்கோ எந்தளவுக்குப் போதுமானது என்பதை அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஏராளமான பாடசாலைகள் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இயங்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ந்தும் இங்கு நிலவுகிறது. இவற்றையெல்லாம் அரசு கவனத்தில் எடுக்கவேண்டும்.

சுகாதாரப் பிரச்சினைகளும் நலன்புரி நிலையங்களில் பெருமளவில் நிலவுகின்றன.

குடாநாட்டில் இன்னும் பல மோசமான நோய்களுக்கு சிகிச்சையளிக்கக்கூடிய வசதிகள் இல்லை. புற்றுநோய், காசநோய் போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டவர்களைக் கொழும்புக்கு கொண்டு சென்று சிகிச்சையளிக்க வேண்டியுள்ளது.

எனவே, ஒட்டுமொத்தத்தில்-தமிழ் மக்களின் பிரச்சினைகள் அனைத்தையுமே அரசு மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் நோக்க வேண்டும்.

- என்று தெரிவித்தார். (ம-4)

## கட்டடத் திறப்புவிழா

யாழ்ப்பாணம்,ஜுலை2

தாவடி தெற்கு ஸ்ரீகாளி அம்பாள் சனசமூக நிலைய புதிய கட்டடத் திறப்புவிழா இன்று - புதன்கிழமை முற்பகல் 11.40மணி தொடக்கம் 11.52மணி வரையான சுபவேளையில் இடம்பெறவுள்ளது. (ம-10)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜுலை2

அனைத்துலக பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலையத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலைகள் தோறும் ஆன்மீக கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அத்துடன், தியானம் செய்தலுக்கான அடிப்படை பற்றியும் மாணவர்களுக்கு எடுத்துக்கூறப்பட்டு வருவதுடன் இலவச தியானப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. (ம-10-ரி)

## புதிய அமைப்பு உதயம்

குருநகர்,ஜுலை2

குருநகர் பெஸ்கி சனசமூக நிலையத்துக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த 70 குடும்பங்கள் இணைந்து பொன்னம்பலம் வீடமைப்புத்திட்ட அபிவிருத்திச் சங்கம் என்னும் அமைப்பொன்றை உருவாக்கியுள்ளன.

குருநகர், ஜெக்கிளமேசன் கிழக்கு கிராம அலுவலர் தலைமையில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. (ம-10-51)

# இந்தியாவின் தலையீடு இன்றி பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாதாம்

## டக்ளஸ் கூறுகிறார்

லண்டன்,ஜுலை2

இந்தியாவின் தலையீடு இன்றி இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. குறிப்பாக மனித உரிமைகள் விடயத்தில் இந்தியா கவனஞ்செலுத்துவதுடன் நேரடியாகவும் அதில் ஈடுபடவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா. இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டு இந்தியத் தலைநகர் புதுடில்லிக்குச் சென்றுள்ள டக்ளஸ், இந்தியப் பிரதமர் அலுவலக உயர் அதிகாரிகள், மத்திய அரசின் சில அமைச்சர்கள் மற்றும் காங்கிரஸ் கட்சி உள்ளிட்ட இந்திய அரசியல் கட்சித் தலைவர்கள் சிலரையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். தான் பேசிக்கொண்ட விடயம் குறித்து டக்ளஸ் பி.பி.ஸி. உலக சேவைக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறினார். பேட்டியில் டக்ளஸ் மேலும் கூறுகையில்,

நீண்டகாலமாகத் தீர்வுகாணப்படாமல் இழுபட்டுப் புரையோடிப் போயுள்ள இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைவான அரசியல் தீர்வு காணும் பொருட்டும் மாற்று அரசியல் கருத்துக்கொண்ட இலங்கைத் தமிழ்



அரசியல் கட்சி உறுப்பினர்களை புலிகள் தினமும் அநியாயமாக கொன்று வருவதை தடுப்பதற்கும், இந்தியாவின் தீவிர பங்களிப்பை கோரும் நோக்கத்தோடுதான் நாம் இந்தியாவுக்கு வருகை தந்துள்ளோம்.

எமக்கும் புலிகளுக்கும் இடையிலான பிரச்சினை என்பது,கொள்கை வேறுபாடுகளே தவிர தனிப்பட்ட குரோதமோ அல்லது போட்டி அரசியலோ அல்ல.

இலங்கைப் பிரச்சினையை தீர்த்து வைப்பதில் இந்தியாவுக்கு முக்கியமான பங்கு உண்டு. அது ஒரு வரலாற்றுக் கடமையும் ஆகும் - இப்படி டக்ளஸ் தெரிவித்தார். (ம)



மக்கள் நலன்புரிச் சங்க படையணிகளால் மகளிருக்கான தேசிய பயிற்சிப் பாசறை ஒன்று யாழ். மத்திய கல்லூரியில் அண்மையில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் போல் மங்கள விளக்கேற்றுகிறார்.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் கே.வீரபத்திரபிள்ளை, மக்கள் நலன்புரிச் சங்கச் செயலாளர் வை.தயாமோகன் ஆகியோரும் படத்தில் உள்ளனர். (10)

## பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக

# கல்வி, விளையாட்டு துறைகளில் சமூகப் பங்களிப்பை பெறமுயற்சி

## ஜி.ரி.இசற் நிறுவனம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜுலை2

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களூடாக சமூகப் பங்களிப்பைப் பெற்று கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளில் முன்னேற்றங்களை ஏற்படுத்துவதற்கான திட்டங்களை மேற்கொள்வது தொடர்பாக ஜி.ரி.இசற் நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக ஜி.ரி.இசற் நிறுவனத்தின் செயற்றிட்டக் குழுவினர் எதிர்வரும் 3ஆம் திகதி வலிகாமம் வலயக் கல்வி பாடசாலை அதிபர்களைச் சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளனர்.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் அன்றையதினம் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் மேற்குறிப்பிட்ட திட்டங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பாக ஆராயப்படவுள்ளது. (ம-8)

## துயர் பகிர்கின்றோம்

எமது கிராமசேவகர் திரு.க.பால்சிங்கம (J/66)
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கனகரெத்தினம் நாகம்மா

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(19710) கிராம மக்கள் சார்பில்:
(24-19-17) ஈச்சமோட்டை சனசமூக நிலையம், ஈச்சமோட்டை விளையாட்டுக்கழகம்.

## வணிக நிலைய இரவுப் பாதுகாப்புச் சேவை உத்தியோகத்தர்கள் தேவை

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினால் நடத்தப்படும் வணிக நிலைய பாதுகாப்புச் சேவைக்கு மேலும் உத்தியோகத்தர்கள் தேவைப்படுவதினால் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விண்ணப்பிக்கலாம். 04.07.2003ஆம் திகதிக்கு முன் மன்ற பணிமனைக்கு சுய விருப்ப விண்ணப்பத்துடன் சமுகமளிக்கவும்.

*தனங்களப்பு வீதி,*
*சாவகச்சேரி.*
(சி-28692)

செயலாளர்
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.
(24-19-17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்க முன்னாள் செயலாளரும், தற்போதைய பணிப்பாளர் சபை உறுப்பினரும், சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் பொதுச் சுகாதார வெளிக்கள அலுவலருமாகிய மூளாயைச் சேர்ந்த

### திருவாளர் கனகரத்தினம் செல்வராசா

அவர்கள் முழு இலங்கைக்குமான சமாதான நீதிவானாகப் பதவிப் பிரமாணம் ஏற்றுக்கொண்டமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வளர்க அவர்தம் சமய சமூகப் பணி.

*பணிப்பாளர் சபை உறுப்பினர்களும்,*
மூளாய்
கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம். (19721) *அலுவலர்களும்.* (24-19-17)

## காணவில்லை



### கந்தையா இராஜேந்திரன்

பொற்பதி வீதி, உடையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த கந்தையா - பாக்கியம் தம்பதிகளின் மகன் இராஜேந்திரன் (ராஜா) வயது 35, கறுப்பு நிறம், உயரம் 4அடி 1/2 அங்குலம், வாய்பேச முடியாதவர். இவரை 28.06.2003 இலிருந்து காணவில்லை. இவர் கடைசியாக அரைக் காற்சட்டையும், ரீசேட்டும் அணிந்திருந்தார். இவரைக் கண்டவர்கள் 021-3005 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அல்லது மேற்குறித்த விலாசத்திற்கு அறிவிக்கவும்.

தேடுவோர்: கந்தையா பாக்கியம்
(பெற்றோர்).
(சி-28690) (24-17-19)

## மரண அறிவித்தல்

### குமாரவேலு அருளம்பலம்

(முன்னாள் உரிமையாளர் - அருள் ஸ்ரோர்ஸ் - அரசடி வீதி, யாழ்.)

புங்குடுதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு அருளம்பலம் அவர்கள் 29.06.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலு - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகன் - இலஷ்மிப்பிள்ளையின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் அருள்மோகன் (நோர்வே), அருள்நீதன் (பிரான்ஸ்), விஜித்தா (சுவிஸ்), அருள்ச்செல்வன் (பிரான்ஸ்), சுஜாத்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் ராஜி (நோர்வே), சுமதி (பிரான்ஸ்), பாலேந்திரா (சுவிஸ்), லோஜிதா (பிரான்ஸ்), செல்வராஜா ஆகியோரின் மாமனாரும் அக்ஷாயினி, அபிலாஷன், அச்சன், அஸ்வின் (நோர்வே), அபிரா, மாதுஷன், அபிஷன், கோபிகா, அக்ஷகா, ஐங்கரஜித், பவதாரகா, அஸ்வின் (பிரான்ஸ்) தமிழரசி, துவாரகா ஆகியோரின் அன்புப் பேரனும் அன்னலெஷ்மி, நாகம்மா, காலஞ்சென்ற நல்லம்மா மற்றும் கனகலிங்கம், கமலம், மங்கையர்க்கரசி, திருமதி இராமசாமி அமுதம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2003) வியாழக்கிழமை முற்பகல் 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'மனோன்மணி வாசா'*
*கொக்குவில், ஆடியபாதம் றோட,*
*கொக்குவில் கிழக்கு.* (19715) (24-17-19)

தகவல்: அருள்மோகன்
(மகன்).
T.P.: 0777 - 6077127

## பண்டிதமணியின் பிறந்ததின விழா

யாழ்ப்பாணம்,ஜூலை2

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் 104ஆவது பிறந்ததின விழா எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் தலைமையில் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பண்டிதமணியின் எழுத்தாற்றல் பற்றி மயிலங்கூடலூர் பி.நடராசனும், பண்டிதமணியின் பேச்சாற்றல் பற்றி பண்டிதை பொன். பாக்கியமும், பண்டிதமணியின் வாழ்க்கை வளம் பற்றி செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனும் கருத்துரைகள் வழங்கவுள்ளனர்.

கருத்துரைகளுக்கு முன்னதாக திருமுறை ஓதலும் அதனைத் தொடர்ந்து பண்டிதமணியின் உருவப் படத்துக்கு மலர்மாலை அணிதலும் இடம்பெறும். (ம்-10)

## உடன் தேவை

எலக்ரோ பிளேட்டிங் பொலிசிங் செய்யக்கூடியவர் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:
**பிள்ளையார் மெற்றல்**
57, நவீன சந்தை, வவுனியா.
T.P. 024 - 20129,
024 - 21577
(19644) (21-14-17)

## VACANCY

STP *Your Partner in IT Solutions*

We are looking for experienced and committed persons for the following positions:

1. **Hardware Technicians**
   *Salary range Rs. 10,000 upwards per month*
   *Accommodations will be provided*
2. **Account Clerk/ documentation Officer (Female)**
   *Attractive salary package*

Please apply or e-mail your CV with contact telephone number within 7 days to:

Director,
STP Computer World (Pvt.,) Limited.
54A, Palaly Road, Jaffna.
T.P. 2222674
e.mail: stpedu@slt.lk

## கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 48ஆவது ஆண்டு நிறைவு விழா - போட்டிகள்

எமது நிலையத்தின் 48ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்பட இருக்கும் "செற்அப்" முறையிலான கரபந்தாட்டப் போட்டிக்கு விளையாட்டு கழகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 10.07.2003 வியாழக்கிழமைக்கு முன்னதாக கீழுள்ள முகவரிக்கு நேரிலோ அல்லது தபால்மூலமோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திரு.கு.குலேந்திரன்
தலைவர்
மின்னொளி விளையாட்டுக்கழகம்,
கைதடி தெற்கு, கைதடி.

**கட்டுப்பணம் ரூபா 100/= மட்டுமே!**

கைதடி தெற்கு ச.ச.நிலையம், கைதடி தெற்கு. (19716) (24-17-19)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| தாயின் மடியில் | மரணத்தின் பிடியில் |
|---|---|
| 24 - 05 - 1948 | 03 - 07 - 2000 |

### அமரர் செல்லத்துரை ஜெகதீஸ்வரன்

(மக்கள் வங்கி -சுன்னாகம்)

ஈரவிழிகளுடன் இங்கிருந்து - உம்
உறவு தேடுகிறோம்
உயிர் கசியும் நினைவுகளை
உரமாகத் தந்து இறைவனடி சேர்ந்தீரே!
வந்திடும் நாளெல்லாம் வசந்தமாக
வந்திடவே எமை ஒரு கணம் பாரீரோ?
எம் உள்ளத்து நினைவுகள் நீங்காத
நினைவலைகள்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி - சத்தியராணி,
மகன் - வாகீசன்,
மற்றும் உறவினர்கள்.

*'சத்தியபவனம்'*
*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.* (19717) (24-17-19)